# கொக்குவில் இந்துக் கல்லூரி

# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் செந்தமிழ் ஆகம கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பிதழ்



# அருள்மிகு பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் துணை



வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்
வெற்றிமுகத்து விநாயகனைத் தொழப் புத்தி மிகுத்து வரும்
வெள்ளைக்கொம்பன் விநாயகனைத் தொழத் துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய தொப்பையப்பனைத் தொழ வினையறுமே.

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மாநிலத்தே!

சிவபெருமான் என்று நான் அழைத்து ஏத்த
தவ பெருமான் என்று தான் வந்து நின்றான்
அவ பெருமான் என்னை ஆள் உடை நாதன்
பவ பெருமானை பணிந்து நின்றேனே




GNANAKURU Arts.

# யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
# J/KOKUVIL HINDU COLLEGE

ESTD 1910
T.P : 021 222 2646
Fax : 021 312 5540
E.Mail : kokuvilhindu@yahoo.com
Web : www.kokuvilhindu.net

கொக்குவில்
Kokuvil,
(Sri Lanka)


# பாடசாலை முதல்வரின் வாழ்த்துச் செய்தி

எமது யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் அனைவருக்கும் அருள்பாலிப்பதற்கும், சைவத்தையும் தமிழையும் ஏற்றியும் போற்றியும் வழிபட அண்ணாமலையார் பெருமானுக்கு திருக்கோயில் அமைத்து நடைபெறவிருக்கும் கடவுள் மங்கல நீராட்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்பெறும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருதுவகை அடைகின்றேன்.

கந்தபுராணக் கலாச்சாரம் தளைத்தோங்கும் இலங்கையின் வடபுலத்தின் யாழ்ப் பாணத்தில் கொக்குவில் பதியில் சைவத்தினையும் தமிழையும் பேணிப்பாதுகாக்கவும் அவ்வழி நடக்கவும் எடுத்த முயற்சியின் விளைவால் தோன்றிய எமது யா/கொக்குவில் இந்துக் கல்லூரி யானது இச்சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த ஆற்றலும் ஆளுமையும் கொண்ட கல்வியாளர் களையும் துறைசார் புலமையாளர்களையும் உருவாக்கும் வித்தையின் உறையுளாகத் திகழ்ந்து வருகின்றது.

இக்கல்லூரி தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கங்களை எய்தவும் பாடசாலைப் பருவத்திலேயே சைவத்தினையும் தமிழையும் அதன் தொன்மையினையும் பெருமையினை யும் மட்டுமல்லாது தேர்ந்த ஞானத்தையும் சைவத்தின் முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை வழிபடுவதனூடாக வல்வினைகளினைப் போக்கி ஈடில்லாப் பெருவாழ்வினைத் தரவல்ல பெருமான் சிவபெருமானை “அண்ணாமலையார்” வடிவில் எமது கல்லூரியில் எழுந்தருளச் செய்வதற்கு தென்னாடு சைவ மாணவ சபையினரின் அயராத முயற்சியின் பயனாகவும் இத்திருக்கோயிலை அமைப்பதற்கு நன்கொடையாளர் சிவத்திரு சுப்பிரமணியம் சுபதாசன், திருமதி சித்திரா சுபதாசன், அவர்தம் பிள்ளைகளான சு.சுகாசன், சு.சுகானன் அவர்களின் பங்களிப்போடும் திருவருள் கைகூடியுள்ளது.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் மேன்மைகளையும் சிறப்புக்களையும் வான்புகழ் ஓங்கச் செய்வதற்காக அண்ணாமலையார் பெருமானுக்கு கோயில் அமைப்பதற்கான ஆரம்ப பூசை நிகழ்வு 07-03-2023 தினத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. எம்பெருமானுடைய திருவருளோடும் ஆன்றோர்களது ஆசியோடும் மிகச்சிறந்த வகையிலே இத்திருக்கோயிலானது அழகுற அமைக்கப்பட்டு “அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்” என்னும் பெயரில்

தமிழ் மந்திரங்கள் ஓதி, வேள்விகள் வளர்த்து அண்ணாமலையாருக்கு மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவானது மங்கலம்(சோபகிருது) ஆண்டு, நளிநல்லோரை, கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22.11.2023) புதன் அன்று நாழி (பூரட்டாதி) நாண்மீன், சித்த ஒகமும் கூடிய நன்னாளிலே சிறப்புற எம்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது.

இவை அனைத்தும் கல்லூரிச் சமூகத்திற்கும் கொக்குவில் பதிவாழ் மக்களுக்கும் அருள்மிகு அண்ணாமலையாரின் அருட்கொடையை வழங்கும் நிகழ்வாக அமைவது எம்பெருமானின் அளப்பெருங் கருணையினாலன்றி வேறொன்றில்லை.

"அவனருளாலே அவன்தாழ் வணங்கி"

**சிவத்திரு. கந்தசாமி குமணன்**
**அதிபர்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**ஐப்பசித் திங்கள் 29ம் நாள் 2023**

# முன்னாள் அதிபர் சிவத்திரு. மகா. ஞானசம்பந்தன் அவர்களின் அருள் வாழ்த்துரை

கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22.11.2023) புதன்கிழமை யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக எழுந்தருளி இறை மங்கல நன்னீராட்டுப் பெருவிழா காணும் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் சிறப்பு மலருக்கு வாழ்த்துரைப்பதில் பெரும் மகிழ்வும், மன நிறைவும் அடைகின்றேன். இக் கல்லூரியில் சேவையாற்றுவதற்கு இறையருள் கிடைத்த நிலையில் எனது பணி ஓய்வுகாலத்தை நோக்கிய பயணத்தில் இத்திருத்தலத்தினை அமைப்பதற்கு என்னைக் கருவியாக்கிய இறையின் திருவருளின் மகிமையினை நான் பெரும் பேறாகவே கருதுகின்றேன். அனைத்து அருளும் பெற்று நிற்கும் இறைவனை நாமாக எழுந் தருளச் செய்யமுடியாது என்பதும், அவனாக அதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தி அதற்கான நேரத்தையும், காலத்தையும் அவனே நியமித்து இன்று இக்கல்லூரியின் கண் எழுந்தருளத் திருவுளம் கொண்டமைந்தான்.

உண்மையில் நூற்றுப்பதின்மூன்றாண்டு கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும் இந்துக் கல்லூரி என்பதை சிறப்பான முகவரியாகக் கொண்டமைந்ததுமான இந்த அறிவாலயத்தின் கண், அருள் ஆலயவடிவில் அண்ணாமலையாராக எழுந்தருளி அமைந் திருப்பது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். மாணவப்பருவத்திலே இந்து சமய அறங் களினையும், நெறிகளையும், சமய சம்பிராதயங்களையும் கடைக் கொள்வதற்கும், எதிர்காலச் சமூகத்திற்குக் கடத்துவதற்கும் எமது மாணவச் செல்வங்களுக்கு வாய்க்கப்பெற்றுள்ள அற்புதமான தருணமாகும்.

இந்த அரிய அருள்வாய்ப்பினை அனைத்து மாணவர்களும், பாடசாலைச் சமூகமும் பயன்படுத்தி, இறைவனின் திருவருட்கருணையை பெற்று, கல்வியுடன் ஞானத்தினையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

**மகா.ஞானசம்பந்தன்**
**முன்னாள் அதிபர்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION

# வாழ்த்துச் செய்தி

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள், பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் அருளாசி வழங்கும் வகையில் சிவபெருமானுக்கு கல்லூரி வளாகத்தில் கோவில் அமைத்து நடைபெறும் மங்கள நீராட்டு விழாவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் பிரபல்யமான இந்துக் கல்லூரிகளுள் ஒன்றாக கொக்குவில் இந்துக் கல்லூரியும் திகழ்வது பழைய மாணவர்களுக்கும், கல்வி பயின்றுகொண்டிருக்கும் மாணவர்களுக்கும் மகிழ்வளிக்கின்றது. எமது கல்லூரி ஒரு கலவன் பாடசாலையாக இயங்குகின்றவேளை நல்ல ஒழுக்கமுடையவர்களை உருவாக்குகின்ற நல்ல பணியையும் வளர்த்துவிட வேண்டிய பெரும் பொறுப்பும் கல்லூரிக்கு இருக்க வேண்டும். அதற்கு வழிவகுக்கும் வகையில் அன்று நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் வளர்த்துவிடும் வகையில் ஆற்றிய பணியின் வழியில் இன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் அமைப்பு சைவப் பாடசாலை கள் தோறும் சிவலிங்கம் அமைக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் எமது கல்லூரியிலும் ஆலயம் அமைத்து சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து இன்று திருக்குட நன்னீராட்டு நடைபெறுவது போற்றத்தக்க ஒரு நிகழ்வாகும்.

இந்த நல்ல பணியை ஏற்படுத்தித் தந்த தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினருக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**பொ.கமலநாதன்**
**தலைவர்**
**பழைய மாணவர்சங்கம்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

# முன்னாள் அதிபர் சிவத்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் அருள் வாழ்த்துரை

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள அண்ணாமலையார் திருக்கோயிலானது மாணவர்களிடையே சைவ பாரம்பரியம் சமயப்பற்று என்பவற்றை வளர்த்தெடுக்கும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை இன்றைய எமது சந்ததியினரிடம் சைவப்பண்பாடு, பாரம் பரியங்கள் என்பவை அருகிவருகின்றன. அவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஏற்றால் போல் இக்கல்லூரியில் இவ்வண்ணாமலையார் திருக்கோயிலானது அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானதொன்றாகும்.

மாணவர்களிடையே சிறந்த சைவ நெறியின் ஆதிக்கத் தன்மையினை இவ்வண்ணா மலையார் நிலைநாட்டுவார். சைவசமயத்தவர்களின் ஆதிக்கடவுளான சிவனுக்கு இக்கோயில் எழுப்பப்பட்டுள்ளமையானது எமது சந்ததியினரிடம் சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்கச் செய்யும் என்பது திண்ணம் இக்கோயிலானது தெய்வீக அருட்கடாக்ஷம் நிறைந்த ஒரு இடமாக விளங்குவதுடன் மாணவர்களுக்கு வேண்டிய அருளாசிகளையும் அள்ளி வழங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தால் வழங்கப்பட்ட காணியில் இத் திருதலம் அமையப்பெற்றதை எண்ணி மகிழ்வடைகின்றேன். நான் கல்விகற்று சேவையாற்றிய கொக்குவில் இந்துக் கல்லூரியில் இவ்வாலயம் அமையப்பெற்றதை நினைத்து நான் அகமகிழ்கின்றேன்.

**சிவத்திரு.அ.பஞ்சலிங்கம்**
**முன்னாள் அதிபர்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

# கொக்குவில் இந்துக் கல்லூரி அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் வரலாறு

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடி தாமரையானே - திருமந்திரம்

ஆதித் தமிழர்களாகிய, சைவத்தமிழர்களின் அடையாளம் சிவவழிபாடும் அதன் எச்சங்களுமே. உதாரணமாக சிந்துவெளி அகழ்வாயினும் வேறெந்த அகழ்வாயினும் சரி, எங்கு பண்பாட்டு அகழ்வுகள் நடந்தாலும் கோயில்கள் மற்றும் சிவவழிபாட்டு எச்சங்கள் தான் எங்கள் ஆதிப் பண்பாட்டின் அடையாளங்களை கட்டியம் கூறும். ஏன் தற்போது இலங்கையில் பேசுபொருளாக இருக்கும் குருந்தூர் மலைச் சிவன்கோயில், கீரிமலைச் சிவன்கோயில், வெடுக்குநாறி மலை ஆதி சிவன்கோயில், கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன்கோயில், பூநகரி மண்ணித்தலை சிவன் கோயில் என்று ஆதித் தமிழர் பண்பாட்டினைப் பறைசாற்றுவது சிவன்கோயில்களே. அந்தவகையில் எங்கள் வாழ்வினை வளமாக்கவும் பின்னர் அதனை அடையாள அணிகலன்களாகவும் நினைவூட்டுவன திருக்கோயில்களே என்றால் மிகை யாகாது.

சிவபூமியாம் யாழ்ப்பாணத்தின் அடையாளத்தில் அறிவியலின் பங்கு மிகவும் முக்கிய மானது. அந்த அறிவியலின் வளர்ச்சிக்குத் தூண்களாக விளங்குபவை பாடசாலைகள் மற்றும் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்றால் மிகையாகாது. அந்த வகையில், சைவத் தினையும், தமிழினையும் பேணிப் பாதுகாக்கவும், மேன்மையுறச் செய்யவும் எடுத்த விடாமுயற்சியின் விளைவால் தோன்றிய கொக்குவில் இந்துக் கல்லூரியின், நோக்கங்களை மீண்டும் வலுப்படுத்தவும், இளமையிலேயே மாணவர்களுக்கு சைவநெறியின் ஆதித் தன்மையையும், தனித்துவத்தினையும், பெருமைகளையும் சிவவழிபாட்டின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அத்துடன் மாணவர்கள் அறிவுடன் சேர்த்து ஞானத்தினையும் பெற்றிடவும், மேலாக அவர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு அற்ற முறையில் வழிபாட்டு முறையினை அறிமுகப்படுத்தி அவர்களாகவே எங்கள் பரம்பொருளை போற்றி வழிபடும் சந்தர்ப்பத்தினை கொடுக்கவும், பாடசாலையில் சிவனுக்கு ஒரு கோயில் வேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இக்கோயிலின் தோற்றமாகும்.

திருவருளின் துணையுடன், அப்படியான ஒரு கோயிலை கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தினை, கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனரும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பழைய மாணவனும் ஆகிய சிவத்திரு.குணரத்தினம் பார்த்தீபன் (தென்னவன்) அவர்களால் சைவ மாணவர் சபையின் ஊடாக பாடசாலை நிர்வாகத்தினரிடம் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது.

அவன் அருளாலே தான் அவனை வணங்க வேண்டும் என்பதற்கு இணங்க தானேவந்து, எனது உள்ளம் புகுந்து, அடியேற்கு அருள் செய்தான் என்ற மணிவாசகரின் வரிகளில் உள்ளது போல், 2020ம் ஆண்டு மாசித் திங்கள் 28ம் நாள் (11-03-2020), அன்று அதிபராக இருந்த சிவத்திரு.மகாலிங்கம் ஞானசம்பந்தன் அவர்களிடம், சைவ மாணவர் சபையினூடாக, கோயில் கட்டுவதற்கு அனுமதி கேட்டுக் கொடுக்கப்பட்ட கடிதத்திற்கு எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு, தென்னாடு நிறுவுனர் குணரத்தினம் பார்த்தீபன் இரண்டுமுறை அதிபரை நேரில் கண்டு கலந்துரையாடினார். தொடர்ந்து கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில், சிவன்கோயில் கட்டும் சிவப்பணிக்கான அடிக்கல் நாட்டும் விழா ஐப்பசித் திங்கள் 22ம் நாள் (8-11-2022) நிறைமதி தினத்தன்று சிறப்பாக நடைபெற்றது. அங்கு வருகை தந்திருந்த அதிபர் சிவத்திரு.மகாலிங்கம் ஞானசம்பந்தன் அவர்கள், தாயுமானவர் கோயிலுக்கு அடிக்கல் வைத்த தருணம், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் கண்டிப்பாக சிவனாலயம் தேவை, அனுமதிக்கான கடிதத்தினை மீண்டும் அனுப்பும் படி சொல்லியதன் படி, மீண்டும் ஒரு அனுமதி விண்ணப்பக் கடிதம் 2023ம் ஆண்டு மார்கழித் திங்கள் 26ம் நாள் (10-01-2023) அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

அதிபரின் முயற்சியாலும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் உதவியினாலும், அதிபரினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைத்த விண்ணப்பத்திற்கு, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலராக இருந்த சிவத்திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்களால் கையெழுத்திடப்பட்ட அனுமதிக் கடிதம், சித்திரைத் திங்கள் 5ம் நாள் (18-04-2023) கிடைக்கப்பெற்றது. இந்த திருக்கோயில் அனுமதிக்கு ஆணிவேராக இருந்த சைவ மாணவர் சபைத் தலைவரும், மானிப்பாய் இந்துவின் பழைய மாணவருமான சிவத்திரு. வனராஜ் சசிராஜ் அவர்களும் வரலாற்றில் பதியப்பவேண்டியவர்.

இந்த பெரும் சிவப்பேற்றின் வழி, கோயில் அமைப்பதற்கான பூசை வழிபாடுகள் மாசி நிறைமதி தினத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது அதிபர் சிவத்திரு.மகாலிங்கம் ஞானசம்பந்தன், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், சைவ மாணவர் சபை நிர்வாக உறுப்பினர்கள், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினைச் சார்ந்தவர்கள் மற்றும் இந்த கோயில் அமைப்பதற்கான கொடையாளர்கள் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன், திருமதி. சித்திரா சுபதாசன் அவர்களும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இந்த உயரிய சிவப்பணிக்கான முழுமையான நிதியுதவியினை கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களின் வேண்டு கோளை, முற்பிறவியின் தவப்பயனால் கோண்டாவிலைச் சேர்ந்த, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சிட்னி வாழ் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களும், அவரின் மனைவியார் திருமதி. சித்திரா சுபதாசன் அவர்களும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். இவர்கள் வடமாகாணத்தில் நான்கு பாடசாலைகளில் இவ்வாறான கோயில் களைக் கட்டியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நிலவும் மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலும், மற்றும் பல இன்னல்கள் மத்தியிலும், இந்தக் கோயிலை முற்றுமுழுதாக கிளிநொச்சியை சார்ந்த

சிவத்திரு. ஆனந்தன் வினோத் குழுவினர் சிறப்பாக வடிவமைத்து கட்டி முடித்து கொடுத்தார் என்பதும் இறைவன் திருவருளே. அதற்கு முழு ஆதரவுடனும் முழு மனதுடனும் பெருந்தொகைப் பணத்தினை வழங்கி வேலைகளைத் துரிதமாக முடிக்க, சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் மற்றும் திருமதி. சித்திரா சுபதாசன் அவர்கள் எடுத்த முயற்சிகளும் நினைவு கூறப்படவேண்டும்.

பண்டு நால்வருக்கு அறம் உரைத்த பெருமானும், மகேந்திரமலையில் சொன்ன ஆகமத்தினைத் தோற்றுவித்தவரும், வினைகளை அழித்து நல்வாழ்வினைத் தரவல்ல தனிப்பெரும் கடவுளை, மாலறியா நான்முகனுங் காணாமலையை, கொக்குவில் இந்து மாணவர்கள் கண்டுள்ளம் களிப்பதற்காக “அண்ணாமலையாராக” இங்கு எழுந்தருளச் செய்தது கொக்குவில் இந்து சமூகத்திற்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

அண்ணாமலையார் என்பது திருவண்ணாமலை சுவாமி மட்டுமல்ல, அண் என்பது உயர்வான, மேல் மற்றும் பெரிய என்று பொருள்படும். உதாரணமாக அண்ணன், அண்ணி, அண்ணாக்கு போன்ற சொற்களைப் பார்க்கலாம். அத்துடன் அண் என்பது பேரொளியையும் குறிக்கும். திருவண்ணாமலையை நினைத்தாலே முத்தி என்பது போல் கொக்குவில் இந்துவில் எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரை நினைத்தாலும் நிச்சயம் முத்தி தான் என்பதில் எந்த ஐயமுமில்லை.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும் – திருவெம்பாவை

நான்முகன் முதலா வானவர் தொழுதுஎழ
ஈரடி யாலே மூவுலகு அளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மால், அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்,

கடுமுரண் ஏனம் ஆகி, முன்கலந்து,
ஏழ்தலம் உருவ இடந்து, பின்எய்த்து,
ஊழி முதல்வ! “சயசய” என்று
வழுத்தியும் காணா மலரடி இணைகள்
வழுத்துதற்கு எளிதாய், வார்கடல் உலகினில்

அழிவதும், ஆவதும், கடந்தாய், போற்றி!
முழுவதும் இறந்த (கடந்த) முதல்வா, போற்றி! – திருவாசகம் – போற்றித் திருஅகவல்

இப்புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று, அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் என்ற பெயரில், செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட, அண்ணாமலை யாருக்கு கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவானது மங்கலம் (சோபகிருது) ஆண்டு, நளி நல்லோரை, கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023) புதனன்று நாழி (பூரட்டாதி) நாண் மீன், சித்த ஒகமும் கூடிய காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள்ளான விடைவான்

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்ணாமலையார் திருக்கோயில் அமைப்பதற்கான ஆரம்பப் பூசை நிகழ்வின் பதிவுகள்











# கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்ணாமலையார் திருக்கோயில் அமைப்பதற்கான ஆரம்பப் பூசை நிகழ்வின் பதிவுகள்













உ

திருச்சிற்றம்பலம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற

# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

## கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023) புதன்கிழமை







## தகைசால் தவப்பெரியீர்! போற்றி ஓம் நமசிவாய - வணக்கம்

சைவத்தினையும், தமிழினையும் பேணிப் பாதுகாக்கவும், மேன்மையுறச் செய்யவும் எடுத்த விடாமுயற்சியின் விளைவால் தோன்றிய எங்கள் பாடசாலையின், நோக்கங்களை மீண்டும் வலுப்படுத்தவும், இளமையிலேயே குழந்தைகளுக்கு சைவநெறியின் ஆதித் தன்மையையும், தனித்துவத்தினையும், பெருமைகளையும் சிவவழிபாட்டின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அத்துடன் மாணவர்கள் அறிவுடன் சேர்த்து ஞானத்தினையும் பெற்றிடவும் வேண்டி,

பண்டு நால்வருக்கு அறம் உரைத்த பெருமானும், மகேந்திரமலையில் சொன்ன ஆகமத்தினைத் தோற்றுவித்தவரும், வினைகளை அழித்து நல்வாழ்வினைத் தரவல்ல தனிப்பெரும் கடவுளாகவும், தாயாய் தந்தையாய் தலைவனாய் நிற்பவனுமாகிய சிவபெருமானை, ‘அண்ணாமலையார்’ வடிவில் எங்கள் பாடசாலையில் எழுந்தருளச் செய்ய திருவருள் கைகூடியுள்ளது.

இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று, அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் என்ற பெயரில், செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட அண்ணாமலையார் பெருமானுக்கு கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு மங்கலம் (சோபகிருது) ஆண்டு, நளி நல்லோரை, கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023) புதனன்று நாழி (பூரட்டாதி) நாண்மீன், சித்த ஓகமும் கூடிய காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள்ளான விடை வான் வேளையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற திருவருள் கூடியுள்ளது. திருமுறைத் தமிழ்மந்திரத் தேன்பருகி அண்ணாமலையாரின் செம்மாந்த சிவனாரமுதில் திளைக்க அன்புடன் அழைக்கிறோம்

## நன்னீராட்டுப் பெருவிழா அருளாசி வழங்குபவர்கள்



பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார்



தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார் திருநாவுக்கரசர் நந்தவனத் திருமடம் தென்சேரிமலை



அருட்குருநாதர். ஒளியகம் ந.ஒளியரசு ஐயா



நல்லை ஆதீனம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள்

வேளையில் நடைபெற்றது.

இந்த கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு, தமிழ்நாட்டின் திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீன குருமகாசன்னிதானம் தவத்திரு மருதாசல அடிகளார், தென்சேரிமலை திருநாவுக்கரசர் நந்தவனத் திருமட குருமகா சன்னிதானம் தவத்திரு. முத்துசிவராமசாமி அடிகளார் மற்றும் சென்னை தெய்வீகச் சித்தாந்த இலக்கிய மன்றத் தலைவர், அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். இந்த கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவினை, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் அழைப்பில் வருகை தந்த அருட்குருநாதர். ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள் திருமுறைத் தமிழ்மந்திர வழியில் இயற்றினார்.

அண்ணாமலையார் கொக்குவில் இந்துக் கல்லூரியில் எழுந்தருளி, மாணவச் செல்வங்களுக்கும், அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கு நீண்ட ஆயுள் பலம், அறிவு, ஞானம், செல்வம் எல்லாம் தந்து அவர்களை தமிழ்வேதத்தில் உள்ளவாறு அறவழி நின்று பொருள் ஈட்டி, இன்பமாய் வாழ்ந்து இறுதியில் வீடுபேற்றினையும் பெற்றுக்கொடுப்பாராக.

அண்ணாமலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக்கடலே போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**தொகுப்பு:**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
**கொக்குவில்**
**ஐப்பசித் திங்கள் 28ம் நாள் 2023**

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க



திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம்
இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள், கயிலைப்புனிதர் முனைவர்
**திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்**
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
அலைபேசி : +91 98947 61125

Holy Kailash Heritage Meikandar Heirarchy,
Perur Maha Samasthan, Maha Mandaleshvar His Holiness
**Dr. Santhalinga Marudhasala Adihal**
Perur Adheenam, Perur, Coimbatore - 641 010.
E : omadihal@gmail.com | perurmutt@yahoo.com

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர்
Member - Tamilnadu Government Hindu Religious & Endowment Board Higher level Committee

நாள் : 18/11/2023

# அருள் வாழ்த்துரை

சைவமும் தமிழும் தமிழகத்திலும் இலங்கையிலும் சைவச்செந்நெறி மிகச்சிறப்பான முறையில் தழைத்தோங்கி வருகின்றன. இலங்கைத் தமிழர்கள் சென்ற இடங்களில் எல்லாம் மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற நோக்கில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். அவ்வகையில் நமது ஆதீனத்திற்கும் இலங்கைக்கும் நீண்டகாலமாகத் தொடர்பு இருந்துவருகிறது. சோழ இளவரசியான மருதப்புரவல்லி என்பவளுக்கு ஏற்பட்ட குதிரை முகம் கொண்ட தீராத குன்ம நோய் சாந்தலிங்கப் பெருமானின் திருவருளால் நீங்கியது. மா(குதிரை முகம்) விட்டதால் இன்றும் மாவிட்டபுரம் என அவ்விடம் வழங்கி வருகிறது. இலங்கையைச் சார்ந்த பெரும் சைவப்புலவரான ஆறுமுக நாவலர் சாந்தலிங்கப் பெருமானின் நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வாறு இலங்கையோடு நெடும் தொடர்புடைய ஆதீனமாக நமது ஆதீனம் விளங்கி வருகிறது.

“பள்ளித் தலமனைத்தும் கோவில் செய்குவோம்” என்ற தேசியக்கல்வி பாரதியாரின் வாக்கு இவ்வாக்கிற்கேற்ப இலங்கையைச் சார்ந்த சிவமிகு பார்த்தீபன் அவர்கள், இலங்கை முழுவதும் 108 சிவத்தலங்களை பாடசாலைகளிலும் பல இடங்களிலும் அமைத்து வருகிறார்கள். சிவமிகு பார்த்தீபன் அவர்கள், இருபத்துநான்காம் குரு மகாசன்னிதானங்கள் அவர் களிடம் தொண்டாற்றிய பெருமைக்குரியவர். தமிழ்நெறி வழிபாட்டில் மிகுந்த ஆர்வமுடையவர்.

சிவமிகு பார்த்தீபன் அவர்கள் உருவாக்கி வரும் சிவபெருமான் திருக்கோயில்கள் வரிசையில் 46ஆவது திருக்கோயிலாக இத்திருக்கோயில் அமைவதும் இதற்கு அண்ணா மலையார் திருக்கோயில் என்ற பெயர் சூட்டியிருப்பதும் மகிழ்வுக்குரியது. இலங்கையில் அயல் சமயத்தினர் நம் சமயத் திருக்கோயில்களில் அவர்தம் சமயச் சின்னங்களைப் புகுத்திவரும் சூழலில் சிவமிகு பார்த்தீபன் அவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பது சிறப்புடையது. கல்வி கற்பிக்கும் பாடசாலையில் இதுபோன்ற திருக்கோயில் உருவாக்கியிருப்பது இளமையிலே குழந்தைகளுக்கு சைவசமயத்தின் தொன்மைச் சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் உணரச் செய்து வழிபாட்டோடு சேர்ந்த கல்வியைத் தருவதற்கு வழிவகையாக அமையும்.


**“போதொடு நீர் சுமந்து ஏத்தி புகுவார் அவர்பின் புகுவேன்”** என்ற நாவுக்கரசரின் வாக்கிற்கேற்ப குழந்தைகள் அனைவரும் கருவறைக்குள் சென்று இறைவனின் திருமேனி தீண்டி வழிபடுவது குறிப்பிடத்தக்கது.


இது குழந்தைகளிடத்தில் மேலும் சமய உணர்வை வளப்படுத்தும். இதுபோன்ற முறையை உலகெங்கும் கொண்டு சேர்த்தால் அனைவரும் பத்திமைநெறியை உணர்வதற்கும் உலகு அமைதி பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும். சிறப்பாக அமைந்துள்ள இத்திருக் கோயிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா ஆதீன குருமகாசன்னிதானங்கள், அடியார் பெருமக்கள், அன்பர்கள் சூழ திருநெறிய ஒண்தீத்தமிழில் நடைபற இருப்பது மகிழ்வுக்குரியது.

அவ்வகையில் இப்பெருவிழா சிறக்கவும் இப்பெருவிழாவிற்கு உழைத்த அனைவரும் இப்பாடசாலையின் தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுவாழ எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசன்னிதானங்கள் கயிலைக்குருமணி தெய்வத்திருப் பெருந்திரு அடிகள் பெருந்தகை அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு.

**அன்புள்ள**






உ
திருச்சிற்றம்பலம்
திருநாவுக்கரசர் நந்தவனத் திருமடம்

**தவத்திரு முத்துசிவராமசாமி அடிகள்**
மடாதிபதி,
தென்சேரிமலை, சூலூர் வட்டம்,
கோவை மாவட்டம் - 641 669. போன் : 04255266155


# தென்சேரிமலை ஆதீன செய்தி

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே

திருஞானசம்பந்த பெருமமானின் திருவாக்கின்படி எல்லாம் வல்ல முழுதற் பெருமானான சிவபரம் பொருளின் திருவடி தாமரைகளை வணங்கி கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ் கண்டு மகிழ்ந்தோம் மேலும் அன்பாலும் அருளாலும், அறநெறியினாலும் பெற்ற செல்வத்தைக் கொண்டு திருப்பணிகள் செய்திடவும், இங்கு பணிபுரியும் அன்பர்களுக்கும், மாணவ செல்வங்களுக்கும் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றான் தொழா அர் எனின்

கற்றதனின் பயனே இறைவனை வழிபட வேண்டும் என்கிற நிலை வாய்த்திட எமது வழிபடு கடவுளாகிய தென்சேரிமலை அருள்மிகு மந்திரகிர் வேலாயுத சுவாமி திருவருளையும் நமது திருமடத்தின் குருமுதல்வர் தவத்திரு மாரிமுத்து பரதேசிகள் குருவருளையும் போற்றி வணங்கி வாழ்த்துகிறோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**



# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் செந்தமிழ் ஆகம கடவுள் மங்கல நன்னீராட்டுச் செய்தி

கடவுள் மங்கலம் என்பது தமிழுக்கும் தமிழருக்கும் தனித்துவமான, இறைவனை எழுந்தருளச் செய்யும் படிமுறையாகும். ஐம்பூதத் தத்துவத்தின் படி பாரிடை, நீரிடை, தீயிடை, வளியிடை மற்றும் வெளியிடை பரந்திருக்கும் இறைப் பரம்பொருளை எழுந்தருளச் செய்து படிமத்தினை சிவலிங்கமாக்கும் அல்லது மூர்த்தியில் மூர்த்திமானை எழுந்தருள செய்யும் சிறப்பு நிகழ்வு ஆகும்.

**பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி - திருவாசகம்**

பாரிடை ஐந்தாய் (5), நீரிடை நான்காய் (4), தீயிடை மூன்றாய் (3) வளியிடை இரண்டாய் (2) வெளியிடை ஒன்றாய் (1) வரும் எண்களின் கூட்டல் விளைவு பதினைந்து (15). தமிழ் எழுத்துரு எண் அடிப்படையில் 1 என்றால் "க" மற்றும் 5 என்றால் "ரு" ஆகவே 15 என்பது "கரு" வைக் குறிக்கிறது என்பதனையும் கருத்தில் கொள்க.

வழிபாடு என்பது அன்புநெறி வழி அல்லது ஆகம நெறி வழியாக அமையலாம். அன்புவழி வழிபாடு என்பதை "அன்புவழி" என்ற பெயரிலேயே அனைவரும் இலகுவாக விளங்கி கொள்ளலாம். இனி ஆகம வழியில் ஆகமம் என்றல் என்ன? எங்கள் முன்னோர்கள் இறைவனை, திருக்கோயில் வழிபாடுகளை அமைப்புகளை அவர்களின் மெஞ்ஞான மற்றும் வாழ்வியல் விஞ்ஞான அறிவு மற்றும் அனுபவத்தினூடு எப்படி செய்தார்கள் என்ற வழிமுறைகளின் தொகுப்பே ஆகமம் ஆகும்.

பொதுவாக ஆகமம் என்றால், "ஆ" என்பது உயிர்களையும், "கமம்" என்பது "நிறைவை யும்" குறிக்கும். (கமம் - பண்பட்டு நிறைவடைதல் - ஆகுதல்). எந்த வழிமுறைகள் உயிர்களுக்கு இறை இன்பம் என்னும் நிலைத்த நிறைவைத் தருகிறதோ, அதாவது பேரின்பப் பெருவாழ்வை தருகிறதோ அது ஆகமம் எனப்படுகிறது.

**ஆகவே எந்த வழியாயினும் இறைவனை மெய்யன்புடன் வழிபடுதலே முக்கியமானதாகிறது.**

நால்வர் கூட திருஞானசம்பந்தர் சுவாமிகள் மகன்மை நெறி, சுந்தரர் சுவாமிகள் தோழமை நெறி, அப்பர் சுவாமிகள் தொண்டு நெறி, மணிவாசகர் சுவாமிகள் அன்பு நெறி அல்லது ஞானநெறி என்று இறைவனை அடைந்தனர். மற்றது கண்ணப்ப நாயனார் முற்றும் முழுதாக

தன் அன்பையே இறைவனிடம் கொட்டினார். அன்புடன் சிவனை யார் வணங்களினாலும் சிவன் நிச்சயம் அதை ஏற்றுக்கொள்வர். **இது அந்த சிவன் மீது ஆணை.**

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே – திருமந்திரம்**

**அடுத்து சிவவழிபாடு தொடர்பான சில தகவல்களைப் பார்ப்போம்.**

சிவனை வழிபடுதல் பயம், சிவன் அழித்தல் கடவுள், சிவனை வீட்டில் வைக்கக்கூடாது, வீடு விளங்காது, சிவனை ஆதரிப்பது கடினம், ஆகம முறைப்படி மட்டும் தான் பூசிக்க வேண்டும், அப்படி செய்யாவிட்டால் சிவன் உக்கிரம் அடைவார், பரம்பரைக்கே கூடாது, பெண்கள் கிட்டவும் போகக் கூடாது என்பது எல்லாம் சைவத்தினையும், தமிழையும் அழித்து எங்கள் அடையாளத்தின் இருப்பினை கேள்விக்குறியாக்கும் நிகழ்ச்சி நிரலின் மறைமுக வடிவமே என்பதை, ஆதித் தமிழர்கள் மரபில் வந்த அனைவரும் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். உணர்வது மட்டுமல்ல இந்த பொய்ப் பரப்புரைகளை விடுத்து சிவவழிபாட்டில் அனைவரும் ஈடுபட திருவருள் துணை நிற்கட்டும்.

**“சேர்ந்தறியாக் கையானை” வழிபட்ட தெய்வங்களை பார்ப்போம்,**

**அம்பாள் பூசை செய்தது காஞ்சிபுரம்,**
**முருகன் பூசை செய்தது திருமுருகன் பூண்டி,**
**பிள்ளையார் பூசை செய்தது கணபதீச்சரம்,**
**பிரமா வணங்கியது பிரம்மபுரீசுவரம்,**
**இராமர் வணங்கியது இராமேசுவரம்,**
**கிருக்ஷ்ணர் வணங்கியது சீர்காழி,**
**பரசுராமர் பூசை செய்தது திருப்பாச்சூர்,**
**வாமனர் பூசை செய்தது திருமாணிக்குழி,**
**மச்சன் பூசை செய்தது மச்சேசுவரம்,**
**கச்சன் பூசை செய்தது திருக்கச்சூர்,**

சிவஞான முனிவர் அருளிய, காஞ்சிப் புராணத்தில் அரிசாப பயந்தீர்த்ததானப் படலத்தில் பின்வரும் பாடலை பார்ப்போம் – திருமால் காஞ்சியையடைந்து தவம் புரிதல்

**நிறைமொழித்தவப் பிருகு ஓதிய சாபம் எய்தி நெஞ்சழுங்கி ஏங்குபு**
**நறை மலர்த்துழாய்ப் படலை மார்பினான் நாடினான் இதன் தீர்வியாதெனப்**
**பிறைமுடிச்சடைப் பிரான் உளன் மனுப் பிரமம் ஐந்துளயாமுளேம் இனிக்**
**குறை எமக்கெவன் என்று தேறினான் கொழி திரைப்புனற் கச்சி எய்தினான் – படலம் 09**

திருமால் தனக்கு வந்த சாப பயத்தினைப் போக்க நாடிய இடமும் பிறைமுடிச்சடைப் பிரான் தாள்களே என்கிறது காஞ்சிப் புராணம். செஞ்சடையானிடம் தஞ்சம் புகுந்தால் அஞ்சநேராது நெஞ்சே நினை.

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்**
**தாழ்த்துவதுந் தாம் உயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்**
**சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்**
**பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே - திருவாசகம்**

இப்படியாக எல்லோரும் சிவனை வழிபட்டு தான் பலன் பெற்றனர். சிவனை வழிபட்டுத் தான் தாமே உயர்ந்தார்கள். வானவர்களை மற்றவர்கள் வழிபடக் காரணம் இவர்கள் எல்லாம் சிவனை வழிபட்டதால் தான் என்கிறார் மணிவாசகர் என்பதை ஆழ் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

மேலும், உலகிலே வினைகளை அறுக்கும் ஒரே ஒரு கடவுள் சிவனே. உங்கள் பிறவிப் பிணியை போக்கவல்ல அமுதமும் அவரே. அப்படியான சிவனை நீங்கள் வழிபடுவதை தடுப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே இன்றிலிருந்து ஏன் இதை வாசித்த நிமிடத்தில் இருந்தே சிவ சிவ என்று சிவவழிபாட்டினை தொடங்குங்கள். வாழ்வு நிச்சயம் மிளிரும். இது சத்தியம்.

**சிவ சிவ என்கிலர் தீ வினை யாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவ சிவ என்னச் சிவகதி தானே - திருமந்திரம்**

இப்படியான சிவபெருமானை "அண்ணாமலையார்" வடிவில் வழிபட, கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பெற்ற, அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு வருகை தந்த அத்தனை பேரும், இறைவனின் திருவருள் பெற்றவர்களே. அண்ணாமலையார் இங்கு வீற்றிருந்து கொக்குவில் இந்து மாணவச் செல்வங்களை வளப்படுத்தி, வழிகாட்டி, அவர்களுக்கு ஆராத இன்பத்தினை அருளும் மலையாக அன்பின் வழி வாழ்வின் பலன்களை வாரி வழங்குவார் என்பது திண்ணம்.

அருள்மிகு அண்ணாமலையார் கோயிலிலே, தமிழ் ஆகம முறைப்படி அன்பின் வெளிப் பாடான பூசைகள் நடைபெறும். அடியவர்களிடையே எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் அனை வரும் சுவாமிக்கு தங்கள் கைகளால் திருமஞ்சனம் செய்து, மலர் சூடி வழிபாடுகள் ஆற்றலாம்.

கருவறையில் அடியார்கள் 6ம் நூற்றாண்டிலும், அதற்கு முன்னரும் தாங்களே சென்று இறைவனை வழிபட்டார்கள். இதற்கான அகச்சான்றினை திருவிடைமருதூர் திருஞான சம்பந்தர் தேவாரத்தில் இருந்து அடியவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

**தடம் கொண்டதொரு  தாமரைப் பொன் முடி தன் மேல்**
**குடம் கொண்டு அடியார் குளிர் நீர் சுமந்து ஆட்ட**
**படம் கொண்டதொரு பாம்பு அரை ஆர்த்த பரமன்**
**இடம் கொண்டு இருந்தான் தன் இடை மருது ஈதோ**

தடாகங்களிற் பறித்த அழகிய தாமரை மலரை தனது பொன்முடியின் மேலே சூடிய பரமனுக்கு, குளிர்ந்த நீரினை அடியவர்கள் குடங்களில் சுமந்து நீராட்டுவதனை, படமெடுத் தாடும் பாம்பினை அரை அதாவது இடுப்பிலே கொண்ட சிவபெருமான், தனது இடமாக விரும்பி உறையும் திருவிடைமருதூர் இதுதானே.

**கற்றுக் கொள்வன வாயுள நாவுள**
**இட்டுக் கொள்வன பூவுள நீருள**
**கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்**
**எற்றுக் கோநம னால்முனி வுண்பதே - திருநாவுக்கரசர் தேவாரம்**

இந்தப் பூமியில் சிவனை வழிபட்டு நாம் உய்வதற்கு செய்யவேண்டியவை இவையே. இறைவன் புகழைக் கற்றுக்கொண்டு, அவனைப் பாட வாயும் நாவும் எமக்கு உள்ளன. அது போல் அவனுக்கு இட்டுக்கொள்வதற்கு நீருண்டு, பூவுண்டு. மேலும் இந்தப்பூமியிலே நாமுளோம், நாம் வழிபடுவதற்கு தகுதியாகிய சிவந்த சடையான் உள்ளான். இவை யெல்லாம் இப்படி இருக்க எமனால் முனிவுண்பது எற்றுக்கு? என்று அப்பர் பெருமான் ஐயம் தெளிவிக்கிறார்.

அத்துடன் திருவையாறு அப்பர் தேவாரத்தினையும் அதில் கூறப்பட்ட வழிபாடுகளையும் அடியவர்கள் பின்பற்றவேண்டும்.

**மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி**
**போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்**
**யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது**
**காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்**
**கண்டேன், அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன்**

போதொடு நீர் சுமந்து ஏத்தி போய்க்கொண்டிருப்பவர்களுடன் பின்னால் சென்று ஐயாறப்பரின் திருவடிகளைக் கண்டேன் என்கின்றார். நிச்சயமாக நீங்களும் அவன் அருளால் அவன் பாதத்தை காணபோதொடு நீர் சுமந்து ஏத்தி, இறைவனருகே புக வேண்டும். இதனை மீண்டும் தமிழ் மண்ணில் கொண்டுவர, பரமனைப் பாமரனும் பணிந்து ஏத்த, சைவத்தமிழ்ப் பண்பாடு மீண்டும் தழைத்திட சேவைகளை செய்துவருகிறது யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்.

குறிப்பாக மாணவர்கள் சிவ வழிபாட்டில் ஈடுபட வேண்டும், அதனூடு அவர்களின் வாழ்வு வளம்பெறவேண்டும், அவர்களின் அறிவும் ஞானமும் உயரவேண்டும், அன்பும் அறமும் பெருகவேண்டும், பண்பும் பத்தியும் மனதில் பதிந்திடவேண்டும் என்ற உயரிய நோக்குடன் இயங்கும் இந்த மடத்தின் நிறுவுனர் என்ற வகையில், இந்த திருகுடமுழுக்குச் செய்தியை உங்களுடன் பகிர்வதில் நிறைவடைகிறேன்.

**வாழ்க அந்தணர், வானவர், ஆன் இனம்**
**வீழ்க, தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க, தீயது எல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே**

**குறிப்பு:**
அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (திருக்குறள் - நீத்தார் பெருமை - 30)

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

திருச்சிற்றம்பலம்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (திருக்குறள் - 423) என்பதற்கு இணங்க
"மெய்ப்பொருள்" காண விளையும்

**தென்னவன் பார்த்தீபன்**
**நிறுவுனர்,**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில்.**

உ
திருச்சிற்றம்பலம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற

# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்
# கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023)

சிவபெருமான் என்று நான் அழைத்து ஏத்த
தவ பெருமான் என்று தான் வந்து நின்றான்
அவ பெருமான் என்னை ஆள் உடை நாதன்
பவ பெருமானை பணிந்து நின்றேனே - திருமந்திரம்

## செந்தமிழ் ஆகம கடவுள் மங்கல நன்னீராட்டு
## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| கார்த்திகைத் திங்கள் 5ம் நாள்<br>செவ்வாய்க்கிழமை<br>(21-11-2023) | **எண்ணெய் காப்பு ( காலை 6 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை )** |
| கார்த்திகைத் திங்கள் 5ம் நாள்<br>செவ்வாய்க்கிழமை<br>(21-11-2023) | திருவிளக்கு வழிபாடு, புனித நீர் வழிபாடு, ஆனைந்து வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, அனுமதி பெறுதல், திருமகள் வழிபாடு, நிலத்தேவர் வழிபாடு, மண்ணெடுத்தல், முளையிடுதல், காப்பணிதல், வழிபாடுகள், மூலத் திருமேனிகள் திருக்குடங்களை இடமாகக் கொண்டு வேள்விச்சாலைக்கு எழுந்தருளல், **“மகேந்திரமலையில் சொன்ன ஆகமத்தினைத் தோற்றுவித்த எம்பெருமான் அண்ணாமலையார் பெருமானுக்கு தெய்வத்தமிழால் முதல் கால வேள்வி’’,** விமானக் கலசம் நிறுவுதல், எண்வகை மருந்து சாத்துதல், வேள்வி நிறைவு, பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம், அருளார் அமுதம் (பிரசாதம்) வழங்குதல். |
| கார்த்திகைத் திங்கள் 6ம் நாள்<br>செவ்வாய்க்கிழமை<br>(22-11-2023) | திருப்பள்ளியெழுச்சி, மூல மூர்த்திகளுக்கு ஆனைந்தாட்டல், காப்பணிவித்தல், **“பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிய இறைவன் அண்ணாமலையார் பெருமானுக்கு தெய்வத்தமிழால் இரண்டாம் கால வேள்வி’’,** கலைகள் நாடியின் வழியாக மூலத்திருமேனியை அடைதல், வேள்வி நிறைவு, பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம், திருக்குடங்கள் புறப்படுதல், **“விமானங்களுக்கு திருக்குட நன்னீராட்டு அண்ணாமலையார் பெருமானுக்குத் திருக்குட நன்னீராட்டு’’**, அடியார் அண்ணாமலையார் பெருமானுக்கு நீர் வழிபாடு, அருளாளர்கள் அருளுரை, பதின் மங்கலக்காட்சி, பெருந்திருமஞ்சனம், பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம், அருளார் அமுதம் (பிரசாதம்) வழங்குதல். |

# சைவமும் தமிழும் தமிழர் நிலங்களில் என்றென்றும் மிளிரவேண்டும்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இவ்வாறான ஒரு ஆலயத்தை அமைப்பதற்கு எமக்கு அருளானை வழங்கிய அந்த இறைவனுக்கு முதலில் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற மணிவாசகப் பெருமானின் தமிழ்வேதவரிகளில் உள்ளது போல் அவனை வழிபடவே அவனருள் தேவை. அதனிலும் அவனுக்கு கோயில் கட்டுவதெனில் யார் கட்டுவது, யாரைக்கொண்டு கட்டுவது எல்லாமே அவன் தான் தீர்மானிப்பான். அப்படியிருக்கையில் இப்படியான ஒரு வரலாற்று செயற்பாட்டிற்கு சிவன் எங்களைத் தேர்ந்தெடுத்தமை நாங்கள் செய்த தவப்பயனே.

நாம் எல்லோரும் பிறப்பாலே சைவர்கள். ஆகவே நாங்கள் எமது சமய வழிபாடுகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும். அதன் மூலம் கடவுளின் அன்பைப் பெற்று அதனை மற்றவர்கள் மேலே செலுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து, அதன்மூலம் நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க முன்வரவேண்டும். எனவே நீங்கள் சிவ வழிபாட்டினை நாள்தோறும் தவறாது மேற்கொள்வீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அத்துடன் இந்த கோயில் சகலருக்கும் சமத்துவமான முறையில், ஏற்றத்தாழ்வு முறைமைகள் அற்று மாணவர்களே இறைவனுக்கு நீர் ஊற்றி வழிபாடு செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே தான் இந்த கோயில் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். அத்துடன் செந்தமிழ் ஆகம முறையில் இங்கு திருக்குடமுழுக்கு நடைபெறுவதால் தொடர்ந்து வரும் பூசைகள், வழிபாடுகள் அனைத்தும் தமிழில் இயற்றப்படவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

நாம் எல்லோரும் தமிழர்கள், அத்துடன் சைவ சமயத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கென்று ஒரு தனித்துவமான பண்பாடு மற்றும் கலை, கலாச்சாரங்கள் இருக்கின்றன. இந்தப் பண்பாடு மற்றும் கலை கலாச்சாரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது எல்லோரினதும் விருப்பமாகும். இதுவே மாணவர்கள் ஆகிய உங்களின் விருப்பமாகவும் இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம் ஆகும். நிச்சயம் நீங்கள் இவற்றை பாதுகாத்து அதனை எமது எதிர்கால சந்ததியினருக்கும் ஊடுகடத்துவீர்கள் என்று நம்புகிறோம்.

நாங்கள் இவ்வாறான நான்கு சிவன் கோயில்களை வடக்கு மாகாணப் பாடசாலை களில், மாணவர்களின் நலன் கருதி, மிகுந்த பொருட்செலவில் அமைத்துள்ளோம். வெளி நாட்டில் குளிர், வெயில், பகல், இரவு என்று பாராமல் மிகவும் கடினமாக வேலைசெய்து, அந்த உழைப்பின் மூலம் இப்படியான திட்டங்களைச் செய்வது, எதிர்வரும் சந்ததியினர், அறிவுடன் அருளையும் ஞானத்தினையும் பெற்று சைவவழி நின்று வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும், மேலாக அவர்கள் (நீங்கள்) அடுத்த தலைமுறைக்கு இதனை எடுத்துச் செல்ல

வேண்டும் என்பதற்காகவே. ஆகவே நீங்களும், நாளை ஒரு நல்லநிலையில் இருக்கும் போது, இப்படியான நல்ல செயல்களைச் செய்து எமது சமுதாயத்தினை சீர்தூக்கி, வளமாக்கி உயர்த்து வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இந்தக் கல்லூரியில் அமையப்பெற்றிருக்கும் திருக்கோயிலில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு அண்ணாமலையாரின் அருளாசியானது, கல்லூரியை வழிநடத்தும் மற்றும் கல்வி கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்களுக்கும், கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கும் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று அண்ணாமலையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

**சுப்பிரமணியம் சுபதாசன் மற்றும் சித்திரா சுபதாசன்**
**(கோண்டாவில்)**
**சிட்னி,**
**ஒசுத்திரேலியா.**
**12-11-2023**



**சிவத்திரு.சுப்பிரமணியம் சுபதாசன்**
**மற்றும் திருமதி. சித்திரா சுபதாசன்**



# அருட்குருநாதர் ஒளியகம் ந.ஒளியரசு ஐயாவின் வாழ்த்துரை

தமிழருடைய மெய்யியல் கொள்கை என்பது மிகமிகத் தொன்மையான சிறப்பானதொரு கொள்கை ஆகும். அம்மெய்யியல் கொள்கையின் அடிப்படையில் அமைந்ததே "கோயில் பண்பாடு" என்ற ஒன்றாகும். எனவே தான் நம் தமிழ் மூதாட்டி ஔவையார் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்றும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் அருளினார். "திருக்கோயில் இல்லாத திருவில் ஊர்" என நம் சைவ சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் கூறியுள்ளார். நம்முடைய சைவக் கருவூலமாக விளங்கும் பன்னிரு திருமுறைகளிலும் கோயில்கள் குறித்த பல செய்திகள் உள்ளன.

அடுத்து "கோயில்" என்று சொன்னாலே அது பிறப்பு இறப்பு இல்லாத முழுமுதற் கடவுளான சிவபெருமான் கோயிலையே குறிக்கும். இக்கோயில்கள் மாடக் கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், மலைக்கோயில் ஆலக்கோயில் என அமைந்துள்ளன. இதனை திருநாவுக்கரசர் திருத்தாண்டகப் பாடல் ஒன்றில்

பெருக்கு ஆறு சடைக்கு அணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும், மற்றும்
கரக்கோயில், கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்,
கருப்பறியல் பொருப்பு அனைய கொகுடிக்கோயில்,
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்,
திருக்கோயில் - சிவன் உறையும் கோயில் சூழ்ந்து,
தாழ்ந்து, இரைஞ்ச, தீவினைகள் தீரும் அன்றே.

பாடியுள்ளார். அதாவது அதிக நீர்ப்பெருக்கினை உடைய கங்கை ஆற்றைத் தன் சடையில் அணிந்த சிவபெருமான் திகழும் கோச்செங்கட்சோழ நாயனாரால் எடுக்கப்பட்ட மாடக்கோயில்கள் எழுபத்தெட்டுடன், கடம்பூர் கரக்கோயில், மணங்கமழும் பொழில்கள் சூழ்ந்த ஞாழற் கோயில், கருப்பறியலூரில் மலைபோன்று விளங்கும் கொகுடிக்கோயில், வேதியர்கள் வேதம் ஓதி வழிபாடு செய்யும் இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் ஆகிய திருக்கோயில், என்னும் சிவபெருமான் உறையும் கோயில்களை வலம் வந்து தாழ்ந்து வீழ்ந்து வணங்கத் தீவினைகள் யாவும் தீரும் எனக் கூறுகின்றார்.

மேலும் திருநாவுக்கரசர்,

திருக்கோயில் இல்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினோடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே!

சிவபெருமானது திருக்கோயில் இல்லாததால் நன்மை இல்லாத ஊரும், திருவெண்ணீற்றை மக்கள் அணியாததால் நன்மை இல்லாத ஊரும், உடம்பு வணங்கிப் பத்தி மிகுதியால் மக்கள் பாடாத ஊரும், அழகான பலகோயில்கள் (தளிகள்) இல்லாத ஊரும், வெள்ளைநிற வலம்புரிச் சங்கினை விருப்பத்தோடு ஊதா ஊரும். விதானம் என்னும் மேற்கட்டியும் வெண் கொடிகளும் இல்லா ஊரும், மலரை அரும்பாய் உள்ள நிலையிலேயே பறித்துச் சிவபெருமானுக்குச் சாத்திப் பின்னரே உண்ணல் என்பது முறையாக இருக்க, அங்ஙனம் செயல்படாத மக்கள் இருக்கும் ஊரும் ஆகிய இவை எல்லாம் ஊரல்ல அடவியாகிய பெருங்காடே என்று பாடியுள்ளார்.

மேலும் பிறிதொரு பாடலில் நெஞ்சே! நீ தடுமாற்றம் நீங்கி நிலையாக வாழ நினைப்பாயாக! நாள்தோறும் எம்பெருமானுடைய கோயிலுக்குச் சென்று பொழுது விடிவதன் முன் அக்கோயிலைக் கூட்டிப் பெருக்கி மெழுகிப் பூமாலையைக் கட்டி எம்பெருமானுக்குச் சாத்தி அவனைத் துதித்துப் புகழ்ந்து பாடித் தலையால் முழுமையாக வணங்கி மகிழ்ச்சியாய்க் கூத்தாடி, “சங்கரா போற்றி! போற்றி!” என்றும், “கங்கையைச் சிவந்த சடையில் வைத்த ஆதிப் பொருளே போற்றி! போற்றி!” என்றும், “ஆரூரா! ஆரூரா! போற்றி! போற்றி!” என்றும் பலகாலும் உரத்த குரலில் கூவி அழைப்பாயாக என்ற பொருளில்

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்
புக்குப்புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே

என அறிவுருத்தி நம்மை எல்லாம் ஆற்றுப்படுத்திப் பாடுகின்றார். நம்முடைய உடம்பை எப்படியெல்லாம் இறைவழிபாட்டில் பயன்படுத்த வேண்டும் என்பதை “திருவங்கமாலை” என்ற பதிகத்தின் மூலம் எடுத்துக் கூறி நெறிப்படுத்துகின்றார்.

இத்தகைய கோயில் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என உயரிய நோக்கத்தோடு, இலங்கை யாழ்ப்பாணம் அருகில் உள்ள கொக்குவில் என்னும் பகுதியில் தென்னாடு செந்தமிழ் ஆகமச் சிவமடம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பள்ளிக்கூட வளாகங்களில் சிவலிங்கம் மற்றும் நந்தியெம் பெருமானையும் எழுந்தருளச் செய்து தெய்வ ஒண் தீந்தமிழ்த் திருமுறை மந்திரங்கள் ஓதி வேள்வி வழிபாடுகள் செய்து திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா செய்து வைத்து பள்ளிக்கு வரும் மாணாக்கர்கள் நாளும் வழிபட வைக்கின்ற அரும்பெரும் செயலைச் செய்து வருபவர் போற்று தலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய சிவத்திரு தென்னவன் பார்த்தீபன் அவர்கள் ஆவார்.

அவ்வகையில் தற்போது எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 6 ஆம் நாள் (22.11.2023) அன்று யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரி என்னும் பாடசாலையில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலை அமைத்து கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா நடத்துகிறார். அப்பெருவிழாவை ஒட்டி மலர் ஒன்றினையும் வெளியிடுகிறார்கள். இத்தூய தொண்டுக்கு துணையாக இருக்கும் சிவத்திரு தென்னவன் பார்த்தீபன் உள்ளிட்ட அத்துணை அன்பர்களுக்கும், யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி முதல்வர் உள்ளிட்ட ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணாக்கர்களுக்கும் அன்பையும், பாராட்டையும், வாழ்த்தையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

**“கயிலைமணி”, “சைவத்தமிழ் மணி” ஒளியகம்**
**ந. ஒளியரசு**
**தலைவர், தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம், சென்னை**




உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870
ஸ்தாபிதம் : 1966
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.



## ஆசிச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் வடபால், யாழ்ப்பாணத்திலே அமைக்கப்பட்ட பாடசாலைகளில், 1940ஆம் ஆண்டிலே திருவளர் ஈ செல்லையா அவர்களால் நிறுவப்பட்ட யா/கொக்குவில் இந்துக் கல்லூரியானது, ஒரு தேசியப் பாடசாலையாக, எமது சமயப் பண்பாட்டு அம்சங்களைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு சைவப் பாடசாலையாகத் திகழ்ந்து வருவது மகிழ்வளிக்கிறது.

இக்கல்லூரியிலே அமைக்கப்பெற்றுள்ள அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவும் அதனை முன்னிட்ட மலர் வெளியீடும் இனிதே சிறப்புற்று அமைய எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

**“என்றும் வேண்டும் இன்ப அன்பு”**

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



# தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார் சுவாமிகளின் அருள் வாழ்த்துரை

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

கொக்குவில் மண்ணில் மங்கலம் காணும் அண்ணாமலையான் விண்ணெழுந்து மண் புகுந்து சோதியாய் நின்ற பெருஞ்சுடர் பெருமான் சைவம் திகழ் யாழ் மண்ணில் ஆளும்படி எழுந்தருள்கின்றான்.

பாலுண்ட குழந்தையின் காலத்தில், நாவில் தமிழ் நின்று ஆண்ட அப்பரின் காலத்தில் வாழ்கிறோம் நாம். புத்தமும் சமணமும் சைவத்தை விழுங்கிய காலமது எதிர்த்து நின்று சிவத்தை போற்றினர் நம் பெருமக்கள்.

இன்றும் அப்படித்தான் சிவமும் தமிழும் தவழ்ந்த மண்ணில் தவம் குன்றியோர் பரப்பும் மதத்தின் மாயச்சூழலறப் பாடுபடவேண்டிய காலமிது. குன்றாத இளமைத் தமிழின் உயிராம் சைவம் என்றும் அழியாது என்றபோதும், போற்றுவதும் ஏற்றுவதும் நம்கடன்.

இக்கல்லூரியை முன்னுதாரணமாகக் கொண்டு கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கண்டு பூசிக்க இல்லங்கள் தோறும் எழுந்தருளச் செய்யும் நாள் வரவேண்டும். எங்கும் நிறைந்த சிவத்தை போற்றுவோம். போற்றி ஓம் நமசிவாய

தவத்திரு அகத்தியர் அடிகளார்
தென்கயிலை ஆதீனம்



# சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளின் அருள் வாழ்த்துரை

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" - முதுமொழி

எமது முன்னோர்கள் ஆலய வழிபாட்டிற்கு வழங்கிய முக்கியத்துவத்தை இம் முதுமொழி எடுத்துக் காட்டுகின்றது. ஒரு பிள்ளைக்கு இளம்பராயத்தில் வழங்கப்படும் கல்வியானது, கற்சிலைகளில் பொறிக்கப்பட்ட எழுத்தானது எவ்வாறு நீண்டகாலம் அழியாமல் இருக்கின்றதோ, அவ்வாறு அப்பிள்ளையின் மனதில் ஆழப்பதிந்து இருக்கும்.

அந்த வகையில் யா/கொக்குவில் இந்தக் கல்லூரியானது எமது மாணவர்களின் கல்வியுடன் அவர்களால், கடைப்பிடிக்கப்பட வேண்டிய சீரிய பண்புகளையும் புகட்டி, அவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ வழிகாட்டி நிற்கின்றது.

இதில் ஆன்மீகக் கல்வி முக்கிய இடம் வகிக்கின்றது. இளவயதிலேயே ஆலய வழிபாடு, திருமுறை ஓதுதல், கூட்டுப் பிரார்த்தனை செய்தல், அறநெறியைப் பின்பற்றுதல், யோகாசனம் பயிலுதல் மற்றும் அருளாளர்களின் வரலாறுகளைப் படித்து அதன்படி அன்பு, அடக்கம், பொறுமை முதலிய பண்புகளை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

இதற்கு வசதியாக பாடசாலையிலேயே அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் அமைத்திருப்பது சிறப்பம்சமாகும். 22-11-2023 புதனன்று இவ்வாலயத்தில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவதும், அதனை முன்னிட்டு கடவுள் மங்கல நன்னீராட்டு சிறப்பிதழ் வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்விழாவானது. தமிழ் வேதங்கள் எனப் போற்றப்படும் திருமுறைகள் மற்றும் தமிழ் மந்திரங்களை ஆதாரமாகக் கொண்டு நடாத்தப்படுவது எமது மாணவர்களுக்கு வழிபாடாற்ற வசதியாக இருக்கும். இதனை முன்னின்று தொடர்ச்சியாக செயற்படுத்தி வரும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களுக்கும் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் போற்றி வாழ்த்துகின்றேன்.

இவ்விழா சிறப்பாக நடைபெறவும், இதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவச் செல்வங்கள் அனைவரும் எதிர் காலத்தில் நற்பிரஜைகளாக வாழவும் இவர்களுக்கு கல்வி வழங்கும் ஆசிரியர்கள் அனைவரும் சிரத்தையுடன் பணியாற்றி நற்பிரஜைகளை உருவாக்கவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல அண்ணாமலையார் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்."**

**தவத்திரு வேலன் சுவாமிகள்**
**சிவகுரு ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**



# தருமை ஆதீன தம்பிரான் மீனாட்சி சுந்தரம் சுவாமிகளின் அருளாசிச் செய்தி

**“ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாய் உறையும் எம் ஆதியே”**

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெறுவது அறிந்து பெருமகிழ் வடைகின்றேன்.

இவ்வுலக வாழ்வில் இடரின்றி வாழ்வதையே ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான். இனிய வாழ்வினை நாம் பெறுவதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது. சைவமும் தமிழும் இரு கண்ணாக போற்றும் சிவபூமியாகிய ஈழநாட்டில் இளமையிலேயே சைவநெறியின் மேன்மையை உணர்த்துவது நமது கடமையாகும்.

அந்தவகையில் “அண்ணாமலையார் திருக்கோயில்” பாடசாலையில் அமைத்தது பெருஞ்சிறப்பாகும். தாயாய் தந்தையாய் தாங்குகின்ற அப்பெருமான், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சீரும் சிறப்பும் பெற்று மகிழ்வுடன் வாழ அருளவேண்டும் என்று முறையீடு செய்து, அனைவருக்கும் நல்லாசியினை தெரிவித்து அமைகின்றேன்.

**மௌன மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,**
**தருமை ஆதீன கிளைமடம்,**
**திருக்கேதீச்சரம்.**

உ
சிவமயம்

# சைவ மாணவர் சபை
# Saiva Students Council

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

பதிவு இல: HA/4/JA/343
தொ. இல:- 021 222 9722

சைவ மாணவர் சபையினராகிய நாங்கள், இலங்கையிலுள்ள சைவப் பாடசாலைகளில் சைவ சமயத்தின் தொன்மை, பெருமைகளைக் காப்பாற்றவும் அதனை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லவும். குறிப்பாக மாணவர் சமுதாயத்தினை அறம்சார் வாழ்வியலில் நிலைப்படுத்தி அவர்களைச் சைவ வழிக் கல்வியினூடாக சைவப் பண்பாட்டாளர்களாக உருவாக்கும் நோக்குடன் செயற்படும் பதிவு செய்யப்பட்ட (HA/4/JA/343) ஒரு பொது அமைப்பாகும்.

அந்தவகையில் எமது சபை, மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு முறைமையற்று செந்தமிழில் இறை மொழியாகிய தமிழ் மொழியில் எல்லாம்வல்ல பரம்பொருளை வழிபாடு செய்வதற்கான வழிபாட்டிடம் மற்றும் அதற்கான ஒழுங்குகளை பாடசாலைகளுக்கு வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் சைவ வழிபாட்டிற்கு ஏதுவாக சைவப் பாடசாலைகளில் சிவலிங்கம் அமைக்கும் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்ற வேளையில் யாழ்ப்பாண நகரிற்கு வெளியே கல்விக்கு அடையாளமாக திகழ்ந்து, கல்வியுடன் பண்பாட்டினையும் விதைத்து, எதிர்கால தலைவர்களை உருவாக்கும். கொக்குவில் இந்துக் கல்லூரியில் சிறிய கோயிலமைப்புடன் சிவலிங்கம் ஒன்றினை திருநிலைப்படுத்துவற்கான எங்கள் சபையின் முன்மொழிவினை ஏற்று எமது சபையால் புதிதாக அமைக்கப்பெற்ற, அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023) புதன்கிழமையன்று கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழா நடாத்த, திரு அண்ணாமலைப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளமையினை வாழ்த்தி வணங்கி, மாணவர்களின் வளமான எதிர்காலம் மற்றும் இறைவழியுடன் கூடிய அறிவியல் சமூகத்தினை கட்டிவளர்க்க இறைவனின் திருவருள் கிடைக்க கொக்குவில் இந்துக் கல்லூரியின் அருள்மிகு அண்ணாமலையாரிடம் விண்ணப்பம் செய்கின்றோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. வனராஜ் சசிராஜ்,**
**தலைவர்,**
**சைவ மாணவர் சபை.**

உ
சிவமயம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

மெய்ப்பொருள் காண்பது அறிவு

***Professor. S. Srisatkunarajah***
***Vice Chancellor***
*B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,*
*Professor in Mathematics*

எமது இல.
මගේ අංකය
My Number

உமது இல.
ඔබේ අංකය
Your Number

Date : 18-11-2023

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அருள் வாழ்த்துரை

**பள்ளித் தலமனைத்தும் திருக்கோயில் செய்குவோம்**
**எங்கள் பூமி சிவபூமி என்பதை போற்றி மகிழ்வோம்.**

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பெற்ற, அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு விழாவுக்கு ஓர் பிரார்த்தனைச் செய்தி எழுதக் கிடைத்த வாய்ப்பை தவப்பேறாகக் கருதுகின்றேன். சிவபூமி எனத் திருமூலரால் விதந் துரைக்கப்பட்ட ஈழமண்ணிண் இதயமெனத் திகழ்வது யாழ்ப்பாணமாகும்.

யாழ்ப்பாணத்தின் தொன்மைமிக்க சைவநெறிப் பண்பாட்டுக்கும், தமிழியலுக்கும், காரண மையங்களாக அமைபவை யாழ்ப்பாணத்தின் திசையெங்கும் உள்ள பள்ளித் தலங்கள் என்றால். அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சைவம் தமிழ் சார்ந்த கற்கைப் புலங்களின் ஊடாக சிவநெறியை வளர்த்த நிலைக்களன்கள் எங்கள் பாடசாலைகள். மாணவர்கள் மத்தியில் பண்பாட்டுணர்வும், பத்திநெறியும் மிக்க வாழ்க்கை முறையை பயிற்றுவித்த பெருங்களங்கள், எங்கள் சைவப் பாடசாலைகள். யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் இறை சிந்தை உடைய சூழலுடன் ஒன்றிணைக்கப்பட்ட தன்மையுடையனவாகவே யுள்ளன. அவற்றுள் பல பாடசாலைகள் ஆலயங்களுக்கு நெருக்கமானவையாகவும் அல்லது உள்ளமைந்த ஆலயங்களைக் கொண்டவையாகவும் உள்ளன. இந்நிலையில் இன்றைய நாளுடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அகச் சூழலிலும் புறச்சூழலிலும் ஆலயங்களைக் கொண்ட பாடசாலையாக உயர்வது நம் சந்ததி செய்த தவபாக்கியம்.

ஒரு கோயில் நிலைப்படுத்தல் செய்யப்படும் போது அதனுடன் இணைந்த சூழலில் பல அதிர்வுகள் பரவத்தொடங்குகின்றன. கருங்கல்லினால் ஆன தெய்வத் திருமுன்களில் இருந்து எழும் அலைவீச்சுக்கள், மந்திர ஒலிகளிலிருந்து எழும் அதிர்வுகள், ஆகுதிப் பொருட்களின் வழியாக குண்டத்தில் இருந்து எழும் தூய்மையான தூபம் என்பன அச்சூழலை தூய்மைப் படுத்துகின்றன. அத்தூய்மை சூழல் அங்கு பிரசன்னமாகியிருக்கும் அடியவர்களின் உடல்

மற்றும் உள மேம்பாட்டில் பல்வேறு நேர்த்தன்மையான மாற்றங்களைச் செய்கின்றன. அதிலும் குறிப்பாக பிள்ளைப்பருவத்து பிள்ளைகள் வாழும் வளரும் சூழலில் அமைக்கப்படும் ஆலயங்களின் வழியான அதிர்வுகள் அவர்களின் அறிகை விருத்தியில் (Cognitive Development) கணிசமான நேர்தாக்கத்தை விளைவிக்க வல்லன. இது அவர்களின் கற்றல் மேம்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தும்.

பள்ளித் தலமொன்றில் ஓர் ஆலயம், அதனுள் கடவுளர் திருவுருவச்சிலைகள் அமைக்கப் பெறும்போது உன்னதமான பல விடயங்கள் மேல்எழும்புகின்றன. குறிப்பாக நிலைப்படுத்தல் என்பது உயிரற்றவைகளுக்கு உயிர்கொடுக்கும் உன்னதமான செயற்பாடு எனக் கருதப்படுகின்றது. மலையில் இருந்த கருங்கலானது. சிற்பியின் திறத்தால் சிவலிங்கமாகின்றது. அச் சிவலிங்கத்துக்கு திருவருளை எழுந்தருளச் செய்து, மூலப் பரம்பொருளின் சத்தியின் ஒரு பகுதியை அதில் நிலைபெறச் செய்யும் பெருங்கைங்கரியம் தான் திருநிலைப்படுத்தல் எனும் பெரும் காரியமாகும். சிவலிங்கம் நிலைப்படுத்தபடும்போது அதனுடன் இணைந்த செயற்பாடுகளில் பங்குபெறும் அடியவர்கள் மனம் உடல் என்பவற்றிலும் பல நல்காரியங்கள் நிலைப் படுத்தப்படும். மறைந்து கிடக்கும் ஆற்றல் அறிவு மேல்எழும்பும். அறியாமை இருளகன்று மெஞ்ஞான ஒளி மேல் எழும்.

இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் திருநிலைப்படுத்தல் செய்யப்படும் அண்ணா மலையாரின் திருவருள் வடிவம் பாடசாலைக்கும் அதன் பயனர்களுக்கும் பல அருளாசிகளை அவர்கள் வாழ்வில் பெற்றுக்கொடுக்கும். தமிழ்நாட்டில் உள்ள திருவண்ணாமலையானின் திருவருள் காட்சியை காண முடியாதோரின் குறைகளை தீர்க்கும் வரமாக இக்கோயில் அமைகிறது. அங்கு உலாவும் பிள்ளைகளின் வாழ்வில் பல உன்னதங்களைத் தரும். அத்துடன் குறிப்பாக இப் பெருவிழா தமிழ் அர்ச்சனைகளுடன் இடம்பெறுவது இன்னும் ஒரு படி சிறப்புக் குரியது. "நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அற்சனை பாட்டேயாகும் ஆதலான் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" எனும் சுந்தர் வாக்கிணங்க தமிழால் சிவப்பரம்பொருளை மகிழ்விக்கும் மாண்பு கவனத்துக்குரிய காரியமாகின்றது.

சைவமும் தமிழும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தவை. சைவத்தின் நிலைத்திருப்பும் பரவுகையும் தான் தமிழின் நிலைத்திருப்புக்கு களன். இதனை வரலாறு பல தடவைகள் மெய்ப்பித்துச் சென்றிருக்கின்றது. இந்நிலையில் பாரம்பரியமிக்க கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று நிலைபெறும் அண்ணாமலையார் எமது வளரிளம் தலைமுறையினரிடம் சைவம் மற்றும் தமிழ் சார்ந்த ஆழ்ந்த உணர்வை நிலைபெறச் செய்வார். அவரருளும் குருவருளும் எங்கள் குழந்தைகள் வாழ்வை உன்னதமாக்கும். திருவண்ணாமலையானை நினைத்தாலே முத்தி. எனவே கொக்குவில் பதியில் அமையப் பெற்றுள்ள அண்ணாமலையாரை கண்டு பேறடையும் வாய்ப்பினை தவறாமல் பற்றிக் கொண்டு திருவருள் பெற்று உய்வோமாக.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# யாழ் வலயக்கல்விப் பணிப்பாளரின் அருள் வாழ்த்துரை

சைவமும் தமிழும் தளைத்தோங்கும் சிவபூமியாம் இலங்கையின் வடபுலத்தின் யாழிசை ஈந்து பாணன் சேர்த்த வளநாடாம் யாழ்ப்பாண மண்ணில் கல்வியை மேன்மையுடன் நல்கும் மகிமை பொருந்திய கொக்குவில் பதியில் அமைந்திட்ட கொக்குவில் இந்துக் கல்லூரியில் தன்னகத்தே எந்நாட்டவர்க்கும் இறையாக அமைந்திட்ட, எல்லோரும் வாழ இன்பத்தை நல்கும் அந்த பரம்பொருளின் அம்சம்.

குடிகொண்டருள திருவருள் கூடியுள்ள இந்நாளில் கல்வியே செல்வமாயும் வீரமாயும் திகழ அருள் பாலிக்கும் இத்திருத்தலம் அமைந்து கடவுள் மங்கலம் காண விழையும் இத்தருணம் வாழ்வின் பொன்னானதொரு தருணம்.

இவ்வாலயம் இவ்வித்தியாலய வளாகத்துள் அமைந்த பாக்கியம், ஒழுக்கமும் சீரிய நற்பண்பும் பத்தியும் கொண்டொழுகும் ஒருமாணவர் சமுதாயம் செழித்தோங்க கிடைத்த அரும் பேறாகும்.

இவ்வாலயம் அமைந்திட கொடையளித்து உணர்வூட்டிய அன்பர்களுக்கும், இதனை சீரிய முறையில் பரிபாலனம் செய்யவும் சைவமும் தமிழும் வளர்ந்திட ஆதாரபூர்மான இடமாக பயன்படுத்திடவும் அன்பனின் வாழ்த்துக்கள்.

**"அவன் அருளாலே அவன்தாள் வணங்க" - ஓம்நமசிவாய.**

**சிவத்திரு. பொன்னையா ரவிச்சந்திரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

# இலங்கை சைவநெறிக் கழகம்

27 நெல்சன் இடம், வெள்ளவத்தை,கொழும்பு - 06
பதிவு இல : HA/4/CBO/162
தொடர்பு - 077569282, 0777652081, 0713444566


கொக்குவில் இந்துக் கல்லூரி என்னும் சைவசமூகத்தின் கல்விப்பேரரசினுள் சிவபெருமானுக்கு திருக்கோயில் எழுப்பப்பட்டிருக்கும் சிவபுண்ணியச்செய்தி கேட்டு பெரும் உவகையுற்றோம். சிவாலயத்தினை கட்டவேண்டும் என்று சிந்திப்பதே பெரும் சிவபுண்ணியம் என்று சைவநூல்கள் உரைக்கும்போது, சிவாலயத்தினை சிறப்புற எழுப்பி, கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவும் சிறப்புடன் நடத்திடத் திருவருள் அமைந்திருப்பது ஒப்பற்ற சிவபுண்ணியமாகும்.

**"புண்ணியஞ் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்"**

என்று திருமந்திரம் உணர்த்தியருள்வதினால், பூவும் நீரும் கொண்டு சிவபெருமானினை வழிபடுவதே சிவபூசையின் பலனை முழுமையாகத் தந்தருளும் என்பது தெளிவாகும். இதுபோல், எந்தவொரு சமயமும் எந்தவொரு பண்பாடும் இறை வழிபாட்டினை எளிமையாகக் கூறவில்லை. இச்சிறப்பு சைவசமயத்திற்கேயுரிய தனிச்சிறப்பாகும். "வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன் தனை அர்ச்சிப்பர்" என்று சிவஞானசித்தியார் என்னும் மெய்கண்டசாத்திர நூல் தெளிவித்தருளுகின்றது. அயன், அரி, இந்திரன், இராகு, கேது, சந்திரன், சூரியன், வியாழன் என்று எல்லாத் தேவர்களும் சிவபெருமானினை வழிபடும் பொருட்டே பூமிக்கு வருகின்றனர் என்பதினால், சிவவழிபாடு இருக்கும் இல்லத்தில் எல்லாத் தேவர்களும் ஓடிவந்து ஏவற்பணி செய்வர் என்பது திண்ணம். சிவவழிபாடு உள்ள பாடசாலைகளில் மங்கலம் பெருத்து நிற்கும் என்பது உறுதி! ஒரு காலத்தில் இவ்வுண்மையினைத் தமிழர் தம்தலைமேற் கொண்டு வாழ்ந்ததினால், ஊர் தோறும் சிவாலயங்களினை எழுப்பினார்கள். தமிழர் இக்காலத்தில் இவ்வுண்மையினை மீண்டும் சிக்கெனப்பிடிப்பதே, பீடுடை இனமாக சிறந்தோங்குவதற்கு வழிவகுக்கும் என்பதினை நன்றே உணர்ந்த உயர்ந்தோர், அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலினை கொக்குவில் இந்துக் கல்லூரியில் எழுப்பியுள்ளனர். இப்பெரும் சிவப்புண்ணியத்தில் பங்கெடுத்து உதவிய சான்றோர் அனைவருக்கும் சிவபெருமானின் திருவருளுடன் சைவப்பெருமக்களின் நன்றி எக்காலத்திலும் விளங்கும்.

**பலபல வேடமாகும் பரனாரி பாகன்**
**பசுவேறும் எங்கள் பரமன்**
**சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**

**மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்**
**வருகால மான பலவும்**
**அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே - திருஞானசம்பந்தப்பெருமான்**

சிவபெருமானினை வழிபடுகின்றவர்க்கு பிரமனும் திருமாலும் தேவர் குழாம் முதலியோரும் நன்மைசெய்வதே தம்கடனாய் விளங்குவர் என்பதினை திருஞானசம்பந்தப் பெருமான் கோளறு பதிகத்தில் உணர்த்தியருளியிருக்கின்றார். எனவே, சிவவழிபாட்டினைப் பற்றிக்கொள்வதே நம் எதிர்கால சந்ததி உயர்ந்து எம் சமூகம் நிமிர்ந்து நிற்க உதவும். எல்லாம்வல்ல அருள்மிகு படவேரிடைமடவாள் உடனாய திருக்கேதீச்சரப்பெருமானின் திருவருள் சிவப்பணியாளர் அனைவர்பாலும் துலங்கி விளங்க வாழ்த்துகின்றோம்.

**"தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது"**

**எல்லாம் திருவருட் சம்மதம்.**
**ஈசான தேசிகர். வைத்தியக் கலாநிதி. கி. பிரதாபன்**
**(கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை)**
**தலைவர் - இலங்கை சைவநெறிக் கழகம்**

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
J/KOKUVIL HINDU PRIMARY SCHOOL

Started on 1976
Fax:- 0212220681
P.N :- 0212220681

Date :-20.03.2023

Principal:Mrs.Kavinya Navajeeva. SLPS - III
T.P No :- 0773016118

School ID:- 1002039
Email:- jkhps1976@gmail.com
Web add:- www.kokuvilhp.sch.lk

கொக்குவில்
Kokuvil,
(Srilanka)


# கடவுள் மங்கல ஆசிச்செய்தி

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் அனைவருக்கும் நிறைந்த அருளாசியை வழங்குவதற்கும் மாணவர்கள் அனைவரும் சைவத்தையும் தமிழையும் போற்றி வழிபட எழுந்தருளும் சிவலிங்கப் பெருமானின் கடவுள் மங்கல மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தொன்மையும் செழுமையும் கொண்ட சைவ வழிபாட்டுப் பாரம்பரியம் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவபூமி ஆகிய யாழ்ப்பாணத்துக் கொக்குவில் பதியில் எழுந்தருளும் சிவலிங்கப் பெருமானை நிலைப்படுத்தி செய்யும் சிறப்பு நிகழ்வானது சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்க வைத்து சைவப் பாரம்பரியம் மிக்க ஒரு மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

எந்நாட்டவர்க்கும் இறைவனாய், அன்பே சிவ வடிவமாய், பஞ்சபூதங்களாய் எங்கும் வியாபித்து பரந்து விரிந்த எங்கள் பரம்பொருள் சிவபிரான் யாஃ கொக்குவில் இந்துக் கல்லூரியில் எழுந்தருளுவதும் அருள்பாலிப்பதுவும் யாம் பெற்ற தவப்பேறாகும். இவ்வாலயம் இக்கல்லூரி வளாகத்துக்குள் அமைந்த பாக்கியம் ஒழுக்கம் நிறை சீரிய நற்பண்பும் பக்தியும் கொண்டொழுகும் ஒரு மாணவர் சமுதாயம் செழித்தோங்கக் கிடைத்த அருட்கொடையாகும்.

சீரிய தாய்மொழியோடு பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட தமிழ் ஆகம முறைப்படி வழிபாடியற்றி தாயுமான எங்கள் பரம் பொருளின் அருட்கடாட்சம் எம் கொக்குவில் பதியெங்கும் பரவி அவன் தாள் வணங்கி இன்பமே சூழ எல்லோரும் பெருவாழ்வு வாழ்வோம்.

**திருமதி கவின்யா நவஜீவா**
**அதிபர்**
**யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

J/ JAFFNA HINDU PRIMARY SCHOOL
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

Principal
MR.P.THANABALASINGAM 0779990681
SLPS - III

# கடவுள் மங்கல அருளாசிச்செய்தி

அருள்மிகு கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பெற்ற அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு விழாவினை ஒட்டி வெளிவர இருக்கும் மலருக்கு ஒரு பிரார்த்தனைச் செய்தி எழுதக் கிடைத்த வாய்ப்பை திருவண்ணா மலையான் எனக்கு அருளிய தவப்பேறாகக் கருதுகின்றேன்.

திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டின் இதயமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் பதியில் எழுந்தருளியிருந்து அனைவருக்கும் நல்லருள் பாலிக்கும் அண்ணாமலையார் கொக்குவில் பதியை மேலும் மேன்மையுறச் செய்துள்ளார்.

**சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்து அன்று பொன் ஒளி மின்னும்**
**தவனச் சடை முடித் தாமரை யானே.**

“எத்தெய்வத்தை நாம் வழிபட்டாலும் அத்தெய்வமாகி மாதொரு பாகனாகிய சிவபெருமானே வந்து அருள்செய்வார்” என்பது சைவசித்தாந்த கோட்பாடாகும். பாடசாலைகள் தோறும் சிவாலயங்கள் அமைத்து வளர்ந்து வரும் மாணவச்சமூகத்தை நன்னெறியின் பால் ஈர்த்து சிறந்த சைவ பண்புகளைப் பின்பற்றக்கூடிய ஒரு சமூகத்தைக் கட்டமைக்கும் நோக்கோடு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் நிறுவுனர் தென்னவன் பார்த்தீபன் எடுத்திருக்கும் இம் முயற்சியானது ஈழத்து சிவ வழிபாட்டு மரபில் ஒரு உத்வேகம் கொண்ட திருப்புமுனைக் காலமாக நோக்க முடியும்.

சிவன் அழித்தல் கடவுள் சிவனை ஆதரிப்பது கடினம் என்று எம்மக்கள் மத்தியிலிருந்த பயத்தினைப் போக்கி சிறு பராயத்திலிருந்தே சிவனை வழிபட்டு அவன் அருளைப் பெற்று வாழக்கூடிய மனநிலையை பாடசாலைகளில் அமைக்கப்படும் சிவத்தலங்கள் மூலம் மாற்றியமைக்கப்படுகிறது. பாடசாலைகளில் காலையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள் சிவனுக்கு நீர் அபிசேகம் செய்து தொட்டு வணங்கி சிவன் அருளைப் பெறுகின்ற பாக்கியம் பாடசாலைகளில் அமைக்கப்பெற்ற சிவத்தலங்களிலேயே கூடுதலான வாய்ப்புக் களைத் தருகின்றது. சிவ வழிப்பாட்டின் மகிமையை சிவ வழிபாட்டில் ஈடுபட்டவர்களாலேயே உணர முடியும். வாழ்வில் வேண்டுவனவெல்லாம் தந்தருளும் சிவனை வழிபட்டவர்கள் அவ்வழிபாட்டிலிருந்து விலக முடியாது. சிவன் ஆட்கொண்டு அவர்களுக்கு அருள்பாலிப்பார்.

சிவன் அன்பும் கருணையும் கொண்டவர். அன்புடன் சிவனை யார் வணங்கினாலும் அவர்களுக்கு அன்புடன் அருள் வழங்குவார்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

ஆன்மீக ஒளிபரப்பி கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழா சிறப்புடன் இடம் பெறவும், அதனை முன்னிட்டு மலரும் நன்னீராட்டு மலர் சிறப்புடன் வெளிவரவும், இவ் அரும்பணியில் ஈடுபட்டிருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனர் தென்னவன் பார்த்தீபன் அவர்களுக்கும் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.பே.தனபாலசிங்கம்**
**அதிபர்**
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E-mail: thurkaiammantemple@gmail.com
Face Book: tellidurga@gmail.com
Tel: 021-3213151 Fax: 021-2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு. திருமுருகன்
Dr. ARU. THIRUMURUGAN

Hot Line: 077-6258511
E-mail: aaruthirumurugan@gmail.com


திகதி : 12 - 11 - 2023

# செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

நூற்றாண்டு விழாக்கண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் அமைக்கப்பட்டு கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழா நடைபெறுவது அறிந்து ஆனந்தமடைகின்றேன். மாணவர்கள் தினமும் தெய்வ வழிபாடு செய்யவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆற்றுப்படுத்தல் வேண்டும். ஆத்மீகம் இல்லாத அறிவினால் பயனில்லை கல்வியறிவோடு கடவுள் பத்தியும் அவசியம் இந்த நல்ல முயற்சியை வாழ்த்துகின்றேன். தென்னாடு சைவ நிறுவனம் சைவசமய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருப்பது பாராட்டுக்குரியது அருள்நிறைந்த அண்ணாமலைப் பெருமான் அனைவரையும் காத்தருள வேண்டும் என பிரார்த்தித்து எனது இதய பூர்வமான ஆசிகளை தெரிவித்தமைகின்றேன்.

ஆறு. திருமுருகன்

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் மீது பாடப்பட்ட நேரிசை வெண்பா - அந்தாதிப் பாமாலை

கொக்குவில் இந்துவில் கோயிலாய் வீற்றிருக்கும்
சொக்க நாதனே சோதியே - சிக்கெனப்
பற்றியே சீரடி போற்றிடும் மூலனே
காற்றிடும் எங்களைக் காத்து

காத்திடும் ஈசனே காப்பிய நேசனே
கூத்திடும் தில்லையின் கூத்தனே - ஏத்திடும்
வாழ்வினில் ஏணியாய் வாய்ந்திடும் ஏற்றமே
சூழ்கவே எங்குமே வாழ்

வாழ்த்திடும் ஈசனின் வாழ்த்திடும் மந்திரம்
வீழ்த்திடும் வீணரை வீழ்ந்திடும் - சூழ்ந்திடும்
பாழ்வினை சுக்கலாய் பாழ்படும் மைந்தரின்
வாழ்வது மாண்புறும் காண்

காண்பது ஈசனே காலமும் நேசனே
மாண்பதும் பூசலின் மாட்சியே - வாண்மையில்
வீழ்த்திடாக் கல்விக்கே வித்திடும் ஆலயம்
சூழ்ந்திடும் கொக்கூரின் சுட்டு

சுட்டிடும் தாண்டவம் சுந்தர காண்டமே
பட்டிடும் கண்களில் பற்றிடும் - நெற்றியில்
முட்டிய நேர்மையாய் முக்கணன் வீழ்த்துவான்
எட்டிய காலனும் நீறு

நீறணி நெற்றியும் நிர்மலன் காட்சியும்
பேறவர் போற்றியே பெற்றிடல் - நூறவர்
மாட்சியாய் நல்கிடும் மாமலர் உள்ளமே
சாட்சியாய் ஊக்கலே காண்

காண்பதும் கேட்பதும் காற்றினில் உன்புகழ்
மாண்பது சீரெழில் மாலையாம் - பூண்பதும்
பூத்திடும் கண்டிடை பாம்பணி நேயனே
யாத்திடும் பாவணிந் தேற்று

தேற்றிடும் செல்வமே தோன்றிடும் ஆலயம்
ஏற்றிடும் மாணவர் ஏழுக - வீற்றிடும்
ஈசனின் நாமமே ஈன்றிடும் இன்பமே
பூசனாய் புத்தொளி பாவு

பாவினால் சூடினோம் பாமலர் மாலையாய்
நாவினுக் கேற்றுக நாயமே - பூவினால்
சாற்றியும் ஐந்தவை சேர்த்திடும் நேசனே
மாற்றிடு ஊழ்வினை மாசு

மாசுறும் மாக்களில் மாண்புகள் ஓங்காவே
பூசறும் நீறணி பூக்கவே - ஆசுகள்
பேசுறும் வீம்புகள் பேரிடர் போக்கவே
தேசுறும் கொக்குவில் தேறு

அரும்பத விளக்கம் :-
ஐந்தவை - ஐந்தொழில்
தேசுறும் - அறிவு, புகழ், பெருமை.
தேறு - உறுதி

**ஆக்கம் - கவிஞர். மகா. ஞானசம்பந்தன்**
**(B Ed. (Hon), Dip in P.G, Dip in SAV)**
**முன்னாள் அதிபர்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

# சிவபூசையும் உடற்சுத்தியும்

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

ஐந்து கைகளையும், யானை முகத்தையும், சந்திரனது இளமை நிலையாகிய பிறை போலும் தந்தத்தையும் உடையவரும், சிவபிரானுக்குப் புதல்வரும், ஞானத்தின் முடி நிலையாய் உள்ளவரும் ஆகிய விநாயகப் பெருமானை உள்ளத்தில் வைத்து, அவரது திருவடிகளைத் துதிக்கின்றேன்.

எமது சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய, எங்கும் நீக்கமற நிறைந்து எல்லாவற்றிக்கும் காரணமாய் உலகை இயங்கிக்கொண்டிருக்கும் பரம்பொருளாம் பரமசிவனை நாம் தினமும் நினைப்பது மட்டுமல்லாமல் வழிபடவும் வேண்டும். சிவன் என்றால் அழித்தல் தொழிலை செய்பவர் என்று பயத்தினை உருவாக்கி சிவத்தினை அனுபவிக்கவிடாது உங்களை மறைத்து விட்டார்கள் சிலர். வடநாட்டில் சிவபெருமனாகிய பரம்பொருள் தென்னாட்டில் பரமசிவன் மற்றும் நடராசராக மாறியுள்ளார். இதனையே "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று முழங்கியுள்ளார்கள். ஐந்தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தல் (ஒடுக்குதல்), அருளல், மறைத்தல் இவற்றில் அழித்தலை மட்டுமல்ல அருளலும் புரிகின்றார் அந்தப் பரமசிவன். இதன் தத்துவம் தான் நடராச வடிவம். ஆகவே சிவன் என்றால் பயம் என்ற, தான் பெற்ற இன்பத்தினை இவ்வையகத்தினை பெறவிடாத மாந்தரின் அனுபவமற்ற கதைகளை விடுத்து சிவத்தினை நிறுவி சிவத்தினை வழிபட அனைவரும் முன்வரவேண்டும்.

**சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடி தாமரையானே - திருமந்திரம் 40**

தேவர்களிலும் மனிதர்களிலும் சிவனிற்கு நிகரானவர்கள் இல்லை. ஆதலினால் இயல்பாகவே உலகைக் கடந்து நின்று ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாய் உணர்வு கதிரவனாய் அதாவது ஞானசூரியனாய், தவங்களின் பயனாய், தாவுகின்ற மானை ஏந்தியவனாய் இருக்கும் பரம்பொருள் அந்த பரம சிவனே.

**“யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே**
**மாதொரு பாகனார்தாம் வருவர்” – சிவஞான சித்தியார்**

இப்படியான சிவத்தினை நினைக்காமலும் வழிபடாமலும் இருப்பது, இருந்தும் இல்லாதது போன்றது. ஆகவே நாங்கள் தினமும் சிவநாமம் உச்சரித்து சிவவழிபாடு செய்து இப்பிறப்பின் பிறவிப்பலன்களை அடைவோமாக.

## சிவபூசையும் உடல் சுத்திகரிப்பும்

எமது கருவாக்கம் மூன்று பகுதிகளை கொண்டது. தூல உடம்பு (தனு அல்லது தேகம்), சூக்கும உடம்பு (மனம் முதலாய அகக் கருவிகள்) மற்றும் காரண உடம்பு (சித்தம்). நாம் தாய் தந்தையிடம் இருந்து பெற்றுக்கொண்டது தூல உடம்பு. இது அழியக்கூடியது. ஆத்மா ஏகம் என்பதால் எல்லா உயிரினங்களிலும் இருக்கும் ஆத்மா ஒரே மாதிரி ஆனது. தூல உடம்பிற்கு பெற்றோர் தான் தாய் தந்தையர். சூக்கும உடம்பிற்கு தாய் தந்தையர் இறைவன் (சிவன் பார்வதி), அதனால் தான் திருஞானசம்பந்தர் “அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே” எனப் பாடினார்.

தூல உடல் கருவிகள் பதினைந்து. அவையாவன மெய் (தோல்), வாய் (நாக்கு), கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து ஞானேந்திரியங்கள், வாய், கை, கால், குதம், குறி ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள், பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் ஆகிய ஐம்பிராணன் கள் (வாயுக்கள்). இவை வெளியுலகம் குறித்த செயற்பாடுகள், அனுபவங்கள், பொருட்கள், உணர்வுகள் போன்றவற்றை உள்ளே எடுத்துச்செல்ல பயன்படும் கருவிகள்.

ஞானேந்திரியங்கள் என்றால் வெளி உலக பொருட்களைக் குறித்த அறிவை நமக்கு தரும் உடல் உறுப்புகள் ஆகும். அதுபோல் கர்மேந்திரியங்கள் என்றால் வாக்கு, கைகள், கால்கள், உடற்கழிவுகளை வெளியே தள்ளும் உறுப்புகள் (குதம் மற்றும் சிறுநீர் உறுப்பு), மற்றும் பிறப்புறுப்புக்கள் ஆகிய ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஆகும்.

சூக்கும உடம்பின் கருவிகள் எட்டு. இதனால் தான் இதனை புரியட்டகாயம் அட்டகாயம் என அழைப்பார்கள். அவையாவன மனம், புத்தி, அகங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை மற்றும் நாற்றம் ஆகிய ஐம்புலன்கள். உதாரணமாக தூல உடல் கண்வழியாக கண்டதை சூக்கும உடம்பின் கருவியான ஒளி பார்த்தல் என்ற செயற்பாட்டால் காரண உடம்பாகிய சித்தத்திடம் கொண்டு செல்கிறது. சித்தம் அதனை வகைப்படுத்தி உருவகித்து உணர்கிறது.

மற்றது காரண உடம்பு. இதை சித்தம் என்றும் சொல்லலாம். இது மற்றைய இரண்டு உடம்பையும் செலுத்த அதாவது இயக்கும் காரணமாக இயங்குகிறது. இங்குதான் புருடன் என்கிற ஆன்மா இருக்கிறது. இது அழியாதது. இதனால் தான் எமது சமயத்தில் மறுபிறப்பு பேசப்படுகிறது. சூக்கும உடலினை நீங்கள் கனவு காணும் போது காணலாம்.

பேரானந்தம் அல்லது சிவானந்தம் என்பது இந்த மூன்று உடல்களையும் தூய்மைப்படுத்துவது. இதனைத்தான் பலவிடங்களில் சிற்றின்பங்களை தவிர்த்து பேரின்பமாகிய சிவானந்தம் அடைதல் என்று ஞானிகள் கூறுகின்றனர். மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் "சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை" என்று குறிப்பிடுகிறார். அதாவது சித்தம் செம்மையுடையவர் நம் சிவனைப் பாடவேண்டும், நம் சிவனை பாடினால் சித்தம் அழகாகும். சித்தம் அழகாக சொல்லுங்கள் "சிவயசிவ".

## உடல் சுத்திகரிப்பு

உடற்தூய்மைக்கான ஐந்தெழுத்து மந்திரம்

**தூலத் தூய்மை மந்திரம் - நமசிவாய**
**சூக்குமத் தூய்மை மந்திரம் - சிவாயநம**
**காரணத் தூய்மை மந்திரம் - சிவயசிவ**

## தூலத் தூய்மை – திருமுறைகள் ஓதல் – கேட்டல்

மூன்று வேறுவகையான உடம்புகளையும் மூன்று வழிகளால் சுத்தமாக்கலாம். தூல உடம்பினைச் சுத்தமாக்க மந்திரங்களும், சூக்கும உடம்பை சுத்தமாக்க தந்திரங்களும் அதாவது ஆகமச் சிறப்புக்களும் உதவும். மந்திரமாவது என்னவெனில் எமது பன்னிரு திருமுறைகள் ஆகும். திருமுறைகளை ஓதுதல் அல்லது ஓதுவதை கேட்டல் தூல உடம்பினை சுத்திகரிக்கும் தூய்மையாக்கும். எமது அர்ச்சனை பாட்டேயாகும். திருமுறைகளை ஒலி வரும்படியாக உரக்க சொல்லவேண்டும்.

திருப்பிரமபுரம் - வழிமொழித் திருவிராகம் - சாதாரி (சம்பந்தர் தேவாரம் - 3525)

**ஒழுகலரி தழிகலியி லூழியுலகு பழிபெருகு வழியைநினையா**
**முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்**
**தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்**
**பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகண் மொழிதகையவே.**

வருங்காலங்களில் நேரமின்மையால் தொலையப்போகும் உலகில், நல்லொழுக்கத்தில் நிற்றல் அரிதாகி அழிகின்ற கலிகாலத்தில், உலகில் பழிபெருகுதலை நினைத்து வருந்தி, உடல் முழுவதும் முடி முளைத்துள்ள முனிவர் தம் குழுவினருடன் அங்கு தங்கி, சிவ பெருமானைத் தொழுது, உலக இச்சைக்கு (ஆசைகளுக்கு) இழுக்கின்ற மலங்கள் நீங்கிச் சிவஞான உபதேசம் பெற்றதால் கழுமலம் எனப் போற்றப்படும் திருத்தலத்தினை வணங்கு வோரின் குற்றம், பாவங்கள்களை இல்லாமல் செய்கின்ற இறைவன் தமிழில் எழுதும் இந்த பதிகம் வல்லவனாகிய ஞானசம்பந்தர் வழியாக எமக்கு கிடைத்துள்ளன. இவற்றினை மட்டும் பாடினாலே அதிலே கூறப்பட்ட ஆலயங்களை தரிசித்தால் உடம்பு தூய்மையடையும். (திருப்பிரமபுரம் - வழிமொழித் திருவிராகம் 3514 - 3525 - பதிகம் அத்தியாயத்தின் கடைசியில் இணைக்கபட்டுள்ளது)

தூலத் தூய்மை மந்திரம் – நமசிவாய (108) மற்றும் ஐம்பெரும் புராணம் ஓதுக

### சூக்குமத் தூய்மை – சிவபூசை

இது ஆகமசிறப்பான சிவபூசையாகும். சிவபூசைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன சிவலிங்க வழிபாடு, குரு வழிபாடு, சங்கம வழிபாடு. சிவலிங்க வழிபாடு என்பது சிவபூசை செய்து இறைவனை நேரடியா வழிபட்டு முத்தி அடைதல் அதாவது அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனை அடைதல், குரு வழிபாட்டு முறையில் ஒருவரைக் குருவாக ஏற்று அவரின் வழிகாட்டலில் இறைவனை அடைதல் மற்றது சங்கம வழிபாடு அதாவது அடியார்களை வணங்கி அவர்களை இறைவனாகப் பாவித்து வணங்கி அதனூடு சிவனை அடைதல்.

சூக்குமத் தூய்மை மந்திரம் – சிவாயநம

### சிவலிங்க வழிபாடு

சிவலிங்க வழிபாடு என்பது சிவபூசை செய்து இறைவனை நேரடியா வழிபட்டு முத்தி அடைதல் அதாவது அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனை அடைதல். இது கோயிலில் மட்டுமல்ல வீட்டிலும் சிவலிங்கம் வைத்து பூசை பண்ணுவதன் மூலம் பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திபெறலாம். சிவலிங்கம் வைத்தல் சிவபூசை புரிதல் ஒரு பெரும் சிவன் கோயில் அமைத்த பலன்களை கொடுக்கும்.

அன்புருவாகிய சிவனின், சிவவழிபாட்டினை தெய்வமொழியாகிய தமிழில் செய்ய வழிபாட்டு முறைகளுடன் சிவபூசையின் குறுகிய வடிவத்தினை இங்கே தந்துள்ளேன்.

### குரு வழிபாடு

குரு வழிபாட்டு முறையில் ஒருவரைக் குருவாக ஏற்று அவரின் வழிகாட்டலில் இறைவனை அடைதல். இது வழிகாட்டல் தேவைப்படுபவர்களுக்கு உகந்த மார்க்கம்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே – திருமந்திரம் 138**

ஞானகுருவின் திருவுருவைச் சிவனின் அருள்மேனியாகக் காணுதல், அவரது திருப்பெயரைச் சிவனது சிவநாமமாக திருவைந்தெழுத்துக்கு ஒப்பானதாகக் கொண்டு எப்பொழுதும் சொல்லுதல், அவரிடும் கட்டளைகளை மொழிகளைச் சிவனது ஆணையாக போற்றி கேட்டல் மற்றும் அவரது திருவுருவத்தை உள்ளத்துள் வாங்குதல் இவைகளே உண்மையான ஞானத்தினை, ஞானசுத்தியினைத் தரும்.

### சங்கம வழிபாடு / மகேசுவரபூசை – அடியார் வழிபாடு

இது சிவனடியார்களை சிவனாகப் பாவித்து அவர்களை வணங்கி அவர்களுக்கு அன்னம் பாலித்து அதனூடாக முத்தி அடைவது. சிவனடியார்களை வீட்டுக்கு அழைத்து, அவர்களின் பாதம் கழுவி அமரவைத்து அர்ச்சனை புரிந்து, அறுசுவையுடன் நால்வகை உணவுகள் பரிமாறி பசியாறச்செய்தல் மகேசுவர பூசையாகும்.

**கொண்டு வந்து மனைப்பு குந்துகு**
**குலாவு பாதம்வி ளக்கியே**
**மண்டு காதலினாதனத்திடை**
**வைத்த ருச்சனை செய்தபின்**
**உண்டி நாலுவி தத்தி லாறு**
**சுவைத்தி றத்தினில் ஒப்பிலா**
**அண்டர் நாயகர் தொண்டரிச்சையில்**
**அமுது செய்யஅ ளித்துளார்**

– இளையான்குடிமாற நாயனார் புராணம்

சங்கம வழிபாடும் சிறந்ததது என திருமூலர் திருமந்திரத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

**படமாடும் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்**
**நடமாடும் கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா**
**நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடும் கோயில் பகவற்கு அது ஆகுமே – திருமந்திரம் 1857**

உலகில் இரு கோயில்கள் உண்டென்கிறார் திருமூலர். அவையாவன படமாடுகின்ற கோயில் மற்றது நடமாடும் கோயில். நடமாடும் கோயிலாவது உயிர்களைக் குறிக்கும். கடவுளைப் படமாக வைத்து வழிபட்டமையால் மற்றைய வகையைப் படமாடக் கோயில் என்றார்.

தலையிலே நாகம் படமாடும் கோயிலில் இறைவனுக்கு கொடுத்தால் அது நடமாடும் உயிரினங்களுக்கு போகாது (அதற்காக அது பிழையென்று அவர் சொல்லவில்லை) ஆனால் நடமாடும் கோயிலான அடியவர்களுக்கோ அல்லது உயிரினங்களுக்கோ (பொதுவாக பசு போன்ற வாயில்லா சீவன்களுக்கு) கொடுத்தால் அது படமாடும் ஈசனுக்கு போய் சேரும் என்பதே பொருள். தானங்களில் சிறந்தது அன்னதானம். திங்களில் ஒருமுறையாவது அடியவர்களுக்கு அல்லது ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது சிவமுத்தியை தரும்.

# மாணவர்கள்
# சிவவழிபாட்டுப் படிமுறைகள்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்**

**(1) இறைவனைப் பள்ளி எழுப்புதல்**

(திருவிளக்கேற்றி நறும்புகை பரவி இறைவனை எழுப்புக)

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது: பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு, நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர் கொடி உடையாய்! எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

**(2) இறைவனை எழுந்தருளச் செய்தல்**

சிவபெருமான் என்று நான் அழைத்து ஏத்த
தவ பெருமான் என்று தான் வந்து நின்றான்
அவ பெருமான் என்னை ஆள் உடை நாதன்
பவ பெருமானை பணிந்து நின்றேனே

எழுந்தருளிய இறைவனின் அழகைப் பாடுதல்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே!

**(3) எழுந்தருளிய இறைவனுக்கு வணக்கம் செய்தல்**

(எங்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு கை கால் நனைக்க நீரும், பின்னர் குடிக்க நீரும் அதன் பின்னர் அவர் நீராடுவதற்கு நீரும் கொடுப்பதை போன்றது)

ஓம் எல்லாம் வல்ல அண்ணாமலையாரின் திருவடிகளை விளக்கி வணங்குகின்றோம்
ஓம் எல்லாம் வல்ல அண்ணாமலையாரின் திருவாய் விளக்கி வணங்குகின்றோம்
ஓம் எல்லாம் வல்ல அண்ணாமலையாரின் திருமுடி விளக்கி வணங்குகின்றோம்

(4) **இறைவனுக்கு நறும்புகை காட்டுதல்**

(நீராடிய பின்னர் தூபம் காட்டுவது பழந்தமிழர் வாழ்வியலின் பண்பாட்டு வழக்கம்)

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலையில் பலி கொண்டு உழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே

(5) **இறைவனுக்குத் திருவிளக்குக் காட்டுதல்**

(வந்தாரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டில், வந்தவரை தீபம் காட்டி அல்லது ஆலத்தி எடுத்தல் போன்றது)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே - அப்பர் தேவாரம் 4-11-8

(6) **ஒற்றைக் கற்பூரதீபம் காட்டுதல்**

(வந்தாரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டில் வந்தவரை தீபம் காட்டி வணங்குதல் போன்றது)

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

(7) **இறைவனுக்குத் திருவமுது படைத்தல்**

(வந்தவருக்கு குடிக்க நீர் கொடுத்து, நீராடச் செய்து, நீர்ப்பிடிப்பு போகவும் நறுமணம் கமழவும் நறும்புகை காட்டி, பின்னர் தீபத்தினால் வணங்கி அவரை அமரவைத்து உணவளித்தல் போன்றது. இருக்கும் உணவை அன்புடன் பரிமாறுவது தான் உள்ளம் குளிர்விக்கும்.)

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

அல்லது

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலம் தான் பெரிதும் உடையானைச் சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே

**(8) அண்ணாமலையார் அர்ச்சனை மந்திரங்கள்**

அழிவதும், ஆவதும், கடந்தாய், போற்றி!
அழிவதும், ஆவதும், கடந்தாய், போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா, போற்றி!
அத்திக்கு அருளிய அரசே போற்றி!
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
அண்ணாமலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக்கடலே போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

வாரம் ஒருமுறையாவது போற்றித் திருத்தாண்டகத்தினையும் பாடுக.

**(9) அடியார்கள் அருள் வேண்டும் விண்ணப்பம்**

எல்லாம்வல்ல பரம்பொருளே,

இந்தக் கல்லூரியில் கல்வி கற்கின்ற மாணவர்கள் அவர்தம் பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் அவர்தம் குடும்பத்தார்கள் அனைவருக்கும், அருள்மிகு அண்ணாமலையாரின் திருவருட்கருணை என்றென்றும் கிடைக்க வேண்டும் என்றும் அவர்கள் வாழ்வில் எந்தக்குறையுமின்றி, நோய் நொடிகளற்று நீண்ட ஆயுளுடனும், அறிவாற்றலுடனும், ஞானத்துடனும் சிறந்து விளங்க வேண்டும் என்றும், அவர்கள் அறவழி நின்று பொருள் ஈட்டி, இன்பமாய் வாழவும் மேலாக எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை பாடிப் பரவும் சிந்தை அவர்களிடத்தில் பெருகவும் வேண்டி விண்ணப்பம் வைக்கிறோம் ஐயனே.

தந்தருள்வீர் தந்தருள்வீர் தந்தருள்வீரே

**(10) திருமுறை வழிபாடு**

அண்ணாமலையாரின் திருச்செவிகள் குளிரும் வண்ணம் ஐம்பெரும் புராணம் ஓதி அருள்க.

அல்லது

எல்லாம் வல்ல அண்ணாமலையாரின் திருச்செவிகள் குளிரும் வண்ணம் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஓதி அருள்க.

**(11) பேரொளி / மாதீபம் காட்டுதல்**

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

**(12) கடவுள் வாழ்த்து**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**(13) பிழை பொறுக்க வேண்டல்**

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்து உருகி
நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும், தொழாப் பிழையும்,
எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் கச்சி ஏகம்பனே!

திருச்சிற்றம்பலம்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (திருக்குறள் - நீத்தார் பெருமை - 30)

# சிவனே குருவாக எழுந்தருளல்

உலகத்தில் நமக்குப் பலரும் பலவிதமானவற்றைக் கற்றுத் தருகிறார்கள். ஏன் ஒவ்வொரு உயிர்களுமே நமக்கு ஏதோ ஒன்றைப் போகின்ற போக்கில் உணர்த்தத் தான் செய்கிறது. உலகத்தில் நமக்கு பலரும் பலவிதமானவற்றைக் கற்றுத் தருகிறார்கள் அல்லது அனுபவத்தினைத் தருகிறார்கள். ஒவ்வொரு உயிர்களும் எமக்கு ஏதோ ஒன்றை உணர்த்தித்தான் செல்கிறது. நாங்கள் வாழ்வில், பல்வேறு நிலைகளில் பலரை வழிகாட்டியாகப் பெறுவது இயல்பு. அதுபோல் எங்கள் சைவ நெறியும் உயிரிற்குத் துணையாகவும், அதன் ஈடேற்றத்திற்கும் குருநாதர் தேவை என்பதை காட்டி நிற்கிறது.

உலகில் இருப்பவற்றை, அதுவும் பலரின் துணைகொண்டு அறிவதற்கே எங்கள் வாழ்நாள் போதுவதில்லை. அப்படி இருக்கையில் உலகையே படைத்தும், காத்தும், கரந்தும், விளையாடிக் கொண்டிருப்பவனை முழுமையாக உணர்வது என்பது அதுவும் குருவின்றி உணர்வது கடினமான காரியமே.

எமக்கு நல்ல குருநாதர் வாய்ப்பதுவும், அந்த குருநாதராய் இறைவனே வருவதும் அவரவர் வினைப் பயனாகும். உதாரணமாக மாணிக்கவாசகப் பெருமானுக்கு இறைவனே குருவாக வந்து அருளினார். குருந்த மரத்தடியில் குருபரனாக எழுந்தருளிய பரம்பொருளை மணிவாசகர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி அருளிய பெருமையைச் சிறுமை என்று இகழாதே திருவடி இணையைப் பிறிவினை அறியா நிழல் அது போல.

### குருவின் துணை அவசியம்

ஒரு மனிதன் ஞானம் பெறுவதற்கு ஒரு குருவின் துணை இன்றியமையாதது. அஞ்ஞானம் என்ற இருளை அகற்றி ஞானமாகிய ஒளியைத் தருபவரே குரு. கருவிலே திரு உள்ளவர்களைத் தவிர, தனியாக ஒரு மனிதன் சிந்தித்து, பரம்பொருளை உணர்ந்து, ஞானம் பெறுவது என்பது கடினமாகும். ஆகவே, ஒவ்வொருவர் வாழ்விலும் குருவின் பங்கு இன்றியமையாதது ஆகும். வாழ்வின் நோக்கத்தினை உணர்ந்து, அதனை நிறைவு செய்ய நினைக்கும் உயிர்களுக்கு ஞான வேட்கை தொடங்கும். அப்படி ஞானவேட்கை வரும்போது குருவும், குருவின் உபதேசமும் இன்றியமையாதது.

### சிவமே குருவாக எழுந்தருளல்

போற்றி பஃறொடை என்னும் சைவசித்தாந்த நூலில், சிவபெருமான் எப்படிக் குருவாக எழுந்தருளுகிறார் என்பதைச் சிறப்பாக அறியலாம். இதனை இயற்றிய உமாபதி சிவாச்சாரியார் இவ்வாறு தன் குருவைக் குறிப்பிடுகிறார்.

**வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்**
**ஒன்றும் உருத்தோன்றாமல் உள்ளடக்கி - என்றும்**
**இறவாத இன்பத்தெமை இருத்த வேண்டிப்**
**பிறவா இன்பத்தெமை இருத்த வேண்டிப்**
**பிறவா முதல்வன் பிறந்து (வந்தான்) - போற்றி பஃறொடை**

எனவே, உற்ற இடத்து உதவும் பெருமானாக, நமக்கெல்லாம் சிவபெருமான் இருக்கிறார். இருவினையும், மும்மலமும் அற பரமனே குருவாக, குருவின் ஊடாக எழுந்தருளுவான். நாம் செய்ய வேண்டியதெல்லாம் அன்புருவான சிவனை அன்பால் வழிபாடு செய்தல் மட்டுமே. தக்க நேரத்தில் தயாபரன் குருவாகத் தோன்றி நம் தொல்வினைகளை நீக்கி, பிறவி என்னும் இக் கடலை நீந்தத் தன் பேரருள் தந்து அருளுவான்.

குருவருளே திருவருள்.

### திரு ஆலவாய்

# திருநீற்றுப்பதிகம்

இறைவன் - சொக்கநாதர்

இறைவி - அங்கயற்கண்ணி

பண் - காந்தாரம்

இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன், திரு ஆலவாயான் திருநீறே. - 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. - 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. - 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. - 4

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம் அது ஆவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் தீருநீறே – 5

அருத்தம் அது ஆவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அது ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. - 6

எயில் அது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம் அது ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. - 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே. - 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள் நீறு
மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடி நீறு
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம் அது உண்ட மிடற்று, எம் ஆலவாயான் திருநீறே. - 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. - 10

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித், தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. - 11

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளி எழுச்சி

**திரோதான சுத்தி (திருப்பெருந்துறையில் அருளியது)**

திருச்சிற்றம்பலம்

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு, நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர் கொடி உடையாய்! எனை உ டையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 1

அருணன், இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ! நயனக்
கடி மலர் மலர, மற்று அண்ணல் அம் கண்ணாம்
திரள் நிரை அறுபதம் முரல்வன, இவைஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே! 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின் இயம்பின சங்கம்
ஓவின தாரகை, ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு, நமக்குத்
தேவ! நல் செறி கழல் தாள் இணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு அரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 3

இன்இசை வீணையர், யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர், ஒருபால்

துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டு கொண்டு இன்அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 4

பூதங்கள் தோறும் நின்றாய் எனின், அல்லால்
போக்குஇலன், வரவுஇலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல், ஆடுதல், அல்லால்
கேட்டு அறியோம், உனைக் கண்டு அறிவாரைச்!
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து,
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 5

பப்பற, வீட்டிருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்,
மைப்பு உறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!
செப்பு உறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு, அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 6

அது, பழச்சுவை என, அமுது என அறிதற்கு
அரிதுஎன, எளிது என அமரரும் அறியார்
இது, அவன் திருவுரு, இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்து அருளும்,
மது வளர் பொழில், திரு உத்தரகோச
மங்கை உள்ளாய்! திருப் பெருந்துறை மன்னா!
எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 7

முந்திய முதல், நடு, இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்!
பந்து அணை விரலியும், நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்து அருளிய பரனே!

செந்தழல் புரை திருமேனியும் காட்டித்,
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி, வந்து ஆண்டாய்!
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே! 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே! உன் தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து, வாழச்செய்தானே!
வண் திருப் பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பு அடியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 9

புவனியில் போய்ப் பிறவாமையின், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்,
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க்கருணையும், நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே! 10

# திருவெம்பாவை

*(திருவண்ணாமலையில் அருளியது)*

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள்தடம்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி, மெய்ம்மறந்து,
போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எம் தோழி பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
சீ! சீ! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர்? யாம் ஆர்? ஏல் ஓர் எம்பாவாய்! 2

"முத்து அன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிர் எழுந்து என்
அத்தன், ஆனந்தன், அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்"
"பத்து உடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குஉடையீர்!
புத்துஅடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால், பொல்லாதோ?
எத்தோ நின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கு" ஏல் ஓர் எம்பாவாய்! 3

'ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?"
"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"

“எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்,
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே”
“விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு, நின்று உருக, யாம் மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில், துயில்” ஏல் ஓர் எம்பாவாய் 4

மால் அறியா, நான்முகனும் காணா் மலையினை, “நாம்
போல் அறிவோம்”, என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால் ஊறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே, விண்ணே, பிறவே, அறிவு அரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டு அருளிக் கோது ஆட்டும்
சீலமும் பாடிச், “சிவனே! சிவனே!” என்று
ஓலம் இடினும், உணராய், உணராய் காண்!
ஏலக் குழலி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்! 5

மானே! நீ நென்னலை “நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன்” என்றலும், நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டு அருளும்
வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்!
ஊனே உருகாய், உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடு ஏல் ஓர் எம்பாவாய்! 6

அன்னே, இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன் இரும் சீரான்,
சின்னங்கள் கேட்பச், “சிவன்” என்றே வாய் திறப்பாய்
“தென்னா” என்னா முன்னம் தீ சேர் மெழுகு ஒப்பாய்
“என்னானை, என் அரையன், இன்னமுது” என்று எல்லோமும்
சொன்னோம் கேள், வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின் பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச், சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப, இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழ்இல் பரஞ்சோதி, கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?

வாழி! ஈது என்ன உறக்கமோ? வாய் திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு! ஏல் ஓர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்.
உன்அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதுஆர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன்
வேதமுதல் விண்ணோரும், மண்ணும், துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதுஇல் குலத்து அரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!
ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?
ஏது அவனைப் பாடும் பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்! 10

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு, முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா! வழியடியோம், வாழ்ந்தோம் காண் ஆர்அழல் போல்
செய்யா! வெண்ணீறு ஆடி, செல்வா! சிறுமருங்குல்
மைஆர் தடம்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம், உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெட, நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ் வானும், குவலயமும் எல்லோமும்,
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளை சிலம்ப, வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய, அணி குழல்மேல் வண்டு ஆர்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்து, உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனை நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகு இனத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும், எம்கோனும், போன்று இசைந்த
பொங்கு மடுவில், புகப்பாய்ந்து, பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏல் ஓர் எம்பாவாய்! 13

காது ஆர் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி, அப்பொருள் ஆமா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி,
ஆதி திறம்பாடி, அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி, ஆடு ஏல் ஓர் எம்பாவாய்! 14

ஓர் ஒருகால், "எம்பெருமான்" என்று என்றே நம்பெருமான்,
சீர் ஒருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர,
நீர் ஒருகால் ஓவா, நெடுந்தாரை கண்பனிப்பப்
பார் ஒருகால் வந்தனையாள், விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்,
வார் உருவப் பூண் முலையீர்! வாயார நாம் பாடி,
ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்தாடு ஏல் ஓர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம் பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நம் தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவுஇலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம் நம்பால் அதாக்
கொங்கு உண் கருங்குழலி! நம்தம்மைக் கோதாட்டி,
இங்கு, நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்,
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட்கு ஆரமுதை,
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழ,
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏல் ஓர் எம்பாவாய்! 17

அண்ணாமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்,
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித், தாரகைகள் தாம் அகலப்,
பெண்ணாகி, ஆணாய், அலியாய், பிறங்கு ஒளி சேர்
விண்ணாகி , மண்ஆகி, இத்தனையும் வேறு ஆகிக்,
கண்ணார் அமுதமுமாய், நின்றான் கழல்பாடிப்,
பெண்ணே, இப்பூம்புனல் பாய்ந்தாடு ஏல் ஓர் எம்பாவாய்! 18

“உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்” என்று
அங்கு, அப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான்! உனக்கு ஒன்று உரைப்போம், கேள்!
எங்கொங்கை, நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க்
எங்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க்
கங்குல், பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க்
இங்கு இப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்,
எங்கு எழில்என் ஞாயிறு எமக்கு? ஏல் ஓர் எம்பாவாய்! 19

போற்றி! அருளுக, நின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுக, நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம்ஆம் பொற்பாதம்
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூங்கழல்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறுஆம் இணைஅடிகள்
போற்றி! மால், நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி! யாம் உய்ய, ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்! 20

# சிவபுராணம்

**சிவனது அனாதி முறைமையான பழமை**
**(திருப்பெருந்துறையில் அருளியது)**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே, நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன், புகழும்ஆறு ஒன்று அறியேன்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர, சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
ஐயா!;; எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே,

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா,
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே,
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான், வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பாவம், என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா, உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயாவான தத்துவனே,
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே,
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே,
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே,
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே,
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே,
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே,
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே, தோன்றாப் பெருமையனே,
ஆதியனே, அந்தம் நடுவாகி அல்லானே,
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே,
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே,
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே,
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேரொளியே,
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே, தேற்றத் தெளிவே, என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே, உடையானே,
வேற்று விகார விடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே “ஓ” என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே,
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே,
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே,

அல்லல் பிறவி அறுப்பானே, “ஓ” என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர், சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

# போற்றித் திருஅகவல்

**சகத்தின் உற்பத்தி(திருத்தில்லையில் அருளியது)**

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதுஎழ
ஈரடி யாலே மூவுலகு அளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மால், அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்,

கடுமுரண் ஏனம் ஆகி, முன்கலந்து,
ஏழ்தலம் உருவ இடந்து, பின்எய்த்து,
ஊழி முதல்வ! சயசய;; என்று
வழுத்தியும் காணா மலரடி இணைகள்
வழுத்துதற்கு எளிதாய், வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பு ஈறாய
ஊனம்இல் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனம்இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதித் தான்றியில் இருமையில் பிழைத்தும்

இருமதி விளைவில் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி, தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை,
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு, கடும்பகல் பசி, நிசி

வேலை நித்திரை, யாத்திரை, பிழைத்தும்
கருங்குழல், செவ்வாய், வெண்நகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல், நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து, கதிர்த்து, முன்பணைத்து
எய்த்துஇடை வருந்த எழுந்து, புடைபரந்து,
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறுஎனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம்பு ஆய பலதுறைப் பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி,
முனிவு இலாததுஓர் பொருள்அது கருதலும்,
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்தம் ஆனார், அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர், பெருகவும்,
விரதமே பரம் ஆக வேதியரும்

சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள், தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம், சுழித்து, அடித்து, ஆஅர்த்து,

உலோகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதில்பெரு மாயை எனைப்பல சூழவும்,
தப்பாமே, தாம் பிடித்தது சலியாத்
தழல்அது கண்ட மெழுகுஅது போலத்
தொழுது, உளம் உருகி, அழுது,உடல் கம்பித்து,
ஆடியும், அலறியும், பாடியும், பரவியும்,
“கொடிறும் பேதையும் கொண்டது விடாது” எனும்

படியே ஆகி, நல் இடையறா அன்பின்,
பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்

கசிவது பெருகிக் கடல்என மறுகி,
அகம்குழைந்து, அனுகுலம் ஆய், மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து, நாடவர் பழித்துஉரை
பூணது ஆகக் கோணுதல் இன்றிச்

சதுர்இழந்து, அறிமால் கொண்டுசாரும்
கதியது பரம அதிசயம் ஆகக்
கற்றா மனம்எனக் கதறியும் பதறியும்,
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது,
அருபரத்து ஒருவன் அவனியில் வந்து,

குருபரன் ஆகி, அருளிய பெருமையைச்
சிறுமையென்று இகழாதே, திருவடி இணையைப்
பிறிவினை அறியா நிழலது போல,
முன்பின் ஆகி முனியாது, அத்திசை
என்புநைந்து உருகி, நெக்கு நெக்கு ஏங்கி,

அன்புஎனும் ஆறு கரையது புரள,
நன்புலன் ஒன்றி, நாத என்று அரற்றி,
உரைதடு மாறி, உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து, இருதயம் மலரக்
கண்களி கூர, நுண்துளி அரும்பச்

சாயா அன்பினை நாள்தொறுந் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி!
மெய்தரு வேதியன் ஆகி, வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி!
ஆடக மதுரை அரசே போற்றி!

கூடல் இலங்கு குருமணி போற்றி!
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி!
இன்றுஎனக்கு ஆரமுது ஆனாய் போற்றி!
மூவா நான்மறை முதல்வா போற்றி!
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி!
மின்னார் உருவ விகிர்தா போற்றி!
கல்நார் உரித்த கனியே போற்றி!
காவாய் கனகக் குன்றே போற்றி!

ஆவா என்தனக்கு அருளாய் போற்றி!
படைப்பாய், காப்பாய், துடைப்பாய் போற்றி!

இடரைக் களையும் எந்தாய் போற்றி!
ஈச போற்றி! இறைவ போற்றி!
தேசப் பளிங்கின் திரளே போற்றி!
அரசே போற்றி! அமுதே போற்றி!
விரைசேர் சரண விகிர்தா போற்றி!

வேதி போற்றி! விமலா போற்றி!
ஆதி போற்றி! அறிவே போற்றி!
கதியே போற்றி! கனியே போற்றி!
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி!
உடையாய் போற்றி! உணர்வே போற்றி!

கடையேன் அடிமை கண்டாய் போற்றி!
ஐயா போற்றி! அணுவே போற்றி!
“சைவா” போற்றி! தலைவா போற்றி!
குறியே போற்றி! குணமே போற்றி!
நெறியே போற்றி! நினைவே போற்றி!

வானோர்க்கு அரிய மருந்தே போற்றி!
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி!
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழாமே அருள், அரசே போற்றி!
தோழா போற்றி! துணைவா போற்றி!

வாழ்வே போற்றி! என் வைப்பே போற்றி!
முத்தா போற்றி! முதல்வா போற்றி!
அத்தா போற்றி! அரனே போற்றி!
உரைஉணர்வு இறந்த ஒருவ, போற்றி!
விரிகடல் உலகின் விளைவே போற்றி!

அருமையில் எளிய அழகே போற்றி!
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி!
மன்னிய திருவருள் மலையே, போற்றி!
என்னையும் ஒருவன் ஆக்கி, இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி!

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி!
அழிவிலா ஆனந்த வாரி போற்றி!

அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா போற்றி!
மானேர் நோக்கி மணாளா போற்றி!

வானகத்து அமரர் தாயே போற்றி!
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி!
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி!
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி!
இடைமருது உறையும் எந்தாய் போற்றி!

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி!
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி!
சீரார் திருவை யாறா போற்றி!
அண்ணா மலைஎம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுதக் கடலே போற்றி!

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி!
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி!
பராய்த்துறை மேவிய பரனே போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி!
மற்றோர் பற்றுஇங்கு அறியேன் போற்றி!

குற்றாலத்து எம்கூத்தா போற்றி!
கோகழி மேவிய கோவே போற்றி!
ஈங்கோய்மலை எம்எந்தாய் போற்றி!
பாங்கார் பழனத்து அழகா போற்றி!
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி!

அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி!
இத்தி தன்னின் கீழ்இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி!
தென்னாடு உடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

ஏனக் குருளைக்கு அருளினை போற்றி!
மானக் கயிலை மலையாய் போற்றி!
அருளிட வேண்டும் அம்மான் போற்றி!
இருள்கெட அருளும் இறைவா போற்றி!
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி!

களங்கொளக் கருத அருளாய் போற்றி!
அஞ்சேல் என்றுஇங்கு அருளாய் போற்றி!
நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி!
அத்தா போற்றி! ஐயா போற்றி!
நித்தா போற்றி! நிமலா போற்றி!

பத்தா போற்றி! பவனே போற்றி!
பெரியாய் போற்றி! பிரானே போற்றி!
அரியாய் போற்றி! அமலா போற்றி!
மறையோர் கோல நெறியே போற்றி!
முறையோ தரியேன் முதல்வா போற்றி!

உறவே போற்றி! உயிரே போற்றி!
சிறவே போற்றி! சிவமே போற்றி!
மஞ்சா போற்றி! மணாளா போற்றி!
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி!
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி!

இலங்கு சுடர்எம் ஈசா போற்றி!
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி!
குவைப்பதி மலிந்த கோவே போற்றி!
மலை நாடுடைய மன்னே போற்றி!
கலையார் அரிகே சரியாய் போற்றி!

திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி!
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி!
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி!
மருவிய கருணை மலையே போற்றி!
துரியமும் இறந்த சுடரே போற்றி!
தெரிவுஅரிது ஆகிய தெளிவே போற்றி!
தோளா முத்தச் சுடரே போற்றி!
ஆளானவர்கட்கு அன்பா போற்றி!
ஆரா அமுதே, அருளே போற்றி!
பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி!

தாளி அறுகின் தாராய் போற்றி!
நீளொளி யாகிய நிருத்தா போற்றி!
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி!
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி!
மந்திர மாமலை மேயாய் போற்றி!

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி!
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி!
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி!
கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி!
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி!

படியுறப் பயின்ற பாவக போற்றி!
அடியொடு நடுஈறு ஆனாய் போற்றி!
நரகொடு சுவர்க்கம் நால்நிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி!
ஒழிவுஅற நிறைந்த ஒருவ போற்றி!

செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி!
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி!
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி!
பிழைப்பு வாய்ப்புஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி!

புரம்பல எரித்த புராண போற்றி!
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி!
போற்றி! போற்றி! புயங்கப் பெருமான்
போற்றி! போற்றி! புராண காரண
போற்றி! போற்றி! சயசய போற்றி!

திருச்சிற்றம்பலம்

# போற்றித் திருத்தாண்டகம்

**தருமபுர ஆதீன வெளியீடு - ஆறாம் திருமுறை**
**திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்**

**(நன்றிகள் - தருமை ஆதீனம், வெளியீடு எண் 992) பதிக எண் 55**

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2636)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2637)

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2638)

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி

ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2639)

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2640)

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2641)

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2642)

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி

அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2643)

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2644)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2645)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (2646)

திருச்சிற்றம்பலம்

# காரைக்கால் அம்மையார்

உலகெலாம் படைத்தும், காத்தும், கரந்தும், விளையாடிக் கொண்டிருப்பவன் இறைவன். அவனின்றி இங்கு ஏதும் நடப்பதில்லை. தாயும், தந்தையுமாய் உலகில் வாழும் அத்தனை உயிர்களையும் அரவணைப்பதும் அவனே. அவன் எங்கிருந்து வந்தான், என்ற கேள்வி எழுமாயின் அதற்கு அருளாளர்கள் அற்புதமான பதிலை தருகின்றனர். மாணிக்கவாசகப் பெருமான் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" என சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் திருச்சாழல் பதிகத்தில் "தாயுமிலி, தந்தையிலி தான் தனியன்" என்கிறார். எனவே தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை என்பது நன்கு புலனாகிறது. இருப்பினும் நாம் எப்படி நினைக்கிறோமோ, அப்படியே அருள் தந்து நிற்கிறான். இதனை அப்பர் பெருமான் "அப்பன் நீ, அம்மை நீ, அன்புடைய மாமனும், மாமியும் நீ " என வரும் பாடல் மூலம் தெளிவு படுத்துகிறார். இப்படியாக உலகத்திற்கே அம்மையப்பனாக இருப்பவனே, "அம்மை" என அழைத்தானென்றால் அது எவ்வளவு பெரிய பேறு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அப்பேற்றை பெருவதற்கு காரைக்காலினில் மலர்ந்ததொரு புனிதவதி எனும் தெய்வக்கொழுந்து. இவரின் இயற்பெயர் புனிதவதியார் என்பதாகும். தனதத்தனின் மகளான இவர் பரமதத்தன் எனும் வணிகப்பெருமகனை மணம்புரிந்து இல்லறத்தை நல்லறமாய்க் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இவரின் கணவர் இருமாங்கனிகளை கொடுத்தனுப்பி விட, இல்வாழ்வில் இருந்த இவரை ஆட்கொள்ள விரும்பிய இறைவன், சிவனடியாராக வந்து அமுது கேட்க, அம்மையார் அம்மாம்பழங்களில் ஒன்றை சிவனடியாருக்குப் படைத்துவிட்டார். பின்பு கணவன் வந்து, ஒரு மாம்பழத்தை உண்டுவிட்டு, இரண்டாவது மாம்பழத்தை தன் கணவன் கேட்க, அம்மையார் செய்வதறியாது, மனம் கலங்கி இறைவனிடம் வேண்ட, இறைவன் அருளால் ஒரு கனியை பெற்று கணவனுக்கு அளிக்க அதை உண்ட பரமதத்தன், முன்பு தானுண்டதை விட மிகுந்த சுவையோடிருந்ததால் அதுபற்றி புனிதவதியாரிடம் வினவினார்.

அவர் கணவனிடம் உண்மையை மறைக்காமல் ஒப்புவிக்க அதை நம்பாத அவருடைய கணவன் ஈசன் கனி தந்தது உண்மையானால் மீண்டும் ஒரு கனியை வரவழைத்து தரவேண்டும் எனக் கூற, ஈசன் அருளால் இன்னொரு மாங்கனியை பெற்று கணவருக்கு அளிக்க, அதைக் கண்ட பரமதத்தன் புனிதவதியார் ஒரு தெய்வப் பெண் என்பதை உணர்ந்து, அவரோடு தான்வாழ்வதற்கு தகுதியற்றவன் எனக்கருதி புனிதவதியாரை விட்டு நீங்க முடிவு செய்து, வாணிபம் செய்ய தேவையான பொருட்களை ஏற்றிக்கொண்டு புனிதவதியாரைப் பிரிந்து சென்றார்.

பிரிந்து சென்ற பரமதத்தன் மதுரையிலேயே மற்றொரு பெண்ணை மணந்து, அங்கேயே தன்னுடைய வாழ்க்கையை நடாத்தி வந்தார். சில காலத்தின் பின் அவருக்கு பிறந்த பெண் குழந்தைக்கு புனிதவதியாரின் நாமத்தையே சூட்டினார். இதையறிந்த புனிதவதியாரின் உறவினர்கள் அவரை அழைத்துக் கொண்டு மதுரைக்கு சென்றனர். அங்கு அவர்கள் பரமதத்தன் இடம் புனிதவதியார் வந்த செய்தியை ஒருவர் மூலம் சொல்லி அனுப்ப, பரமதத்தன் தன் இரண்டாவது மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நடந்ததையும் அனைவருக்கும் கூறி, அனைவரையும் அவரை வணங்கச் சொன்னார். கணவனுக்காகத் தாங்கிய இவ்வுடல் இனி தேவையில்லை எனக் கருதி, ஈசனிடம் பேயுடலை அனைவர் முன்னிலையிலும் கேட்டுப் பெற்றார். அந்த பேய் வடிவம் எப்படி இருந்தது என்பதை அம்மையாரே தன்னுடைய திருப் பதிகத்தில் குறிப்பிடுகிறார்

**"கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்**
**பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்**
**தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்சடை எட்டுத் திசையும்வீசி**
**அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே".**

பேயுருவத்திலேயே திருவாலங்காட்டில், கால் உயர்த்தி நடனமாடும் ஈசனைப் போற்றி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை அற்புதத் திருவந்தாதி போன்றவற்றைப் பாடினார்.

சிவபெருமானை வணங்குவதற்காக கயிலாயம் செல்ல எண்ணிய அம்மையார், கயிலாயத்தை மிதிக்க அஞ்சி தலையாலே நடந்து ஈசனை வணங்க சென்றார். அதைக் கண்ணுற்ற அம்பிகை, பெருமானை நோக்கி தலையால் நடந்து வரும் எலும்புடல் பெற்ற இவ் அன்புடையவர் யார்? என வினவ, நெற்றிக்கண்ணுடையவர் தன் மனைவியிடம் புனிதவதியாரை தன் தாயாக உயர்த்தியதை, சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில்,

**"வருமிவ ளம்மைப் பேணு மம்மைகா ணுமையே! மற்றிப்**
**பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன" ளென்று, பின்னை**
**யருகுவந் தணைய நோக்கி, " அம்மையே!" யென்னுஞ் செம்மை**
**யொருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார்."** எனப் போற்றி உரைக்கிறார்.

சிவனடியாராக வந்து அமுது உண்டமை, இருமுறை மாங்கனிகளை அளித்தமை, பெண்ணுடலை பேய் உடலாய் மாற்றியமை, காரைக்கால் அம்மையாரை அம்மையே என அழைத்தமை போன்ற அற்புதங்களை, எம்பெருமான் இவரின் பொருட்டு ஆற்றியுள்ளார். அம்மையார் உடைய மற்றுமொரு பாடல் மூலமாக அற்புதமானத் தாயுணர்வு வெளிப்படும்.



**“இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம இவரை இகழ்வதேக் கண்டீர்-
இவர்தமது பூக்கோல மேனிப்பொடிப்பூசி என்பணிந்த பேய்க்கோலங் கண்டார் பிறர்”.**

இப்பாடலில் தன்னுடைய குழந்தையை யார் எப்படிப் பேசினாலும், தாய் விட்டுத் தரமாட்டாள். அதைப் போலவே இறைவனை உலகத்தவர் எப்படிப்பார்த்தாலும் அம்மையார் ஆண்டவனாகவே பார்க்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனே “அம்மை” என்று அழைத்த பிறகு நாம் அம்மையாரின் அன்பை அளவிட முடியுமா? அம்மையாரின் திருப்பதிகங்கள் அத்தனையும் இறைவனை மிகச்சிறப்பாகக் காட்டுகிறது. அம்மையாரின் புகழைப் பாடுவோம். ஆண்டவனின் அருளைச் சேர்வோம்.

காரைக்கால் அம்மையார் முத்தி அடைந்த தலம் – திருவாலங்காடு
காரைக்கால் அம்மையார் குருபூசை- பங்குனித் திங்கள் விளக்கு (சுவாதி) நாண்மீன்

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாரூரிலே ஒரு பெரும் அலையாக சிவப்பொருளை விதந்தோதி பல வருடங்கள் மறைந்தோடிவிட்ட நிலையில், புகழனார் மாதினியார் எனும் பெற்றோருக்கு மகனாக மருணீக்கியார் என்ற பெயருடன் வந்துதித்தார் நாவுக்கரசர். இவரின் தமக்கையார் பெயர் திலகவதியார். சிறுவயதில் தந்தை, தாயினை இழந்துவிட்டனர். தமக்கையாரின் கணவராக நிச்சயிக்கப்பட்டவரும் இறந்துபோக, தமக்கையார் விதவைக் கோலம் பூண்டார். சிறுவயதிலேயே வாழ்வின் நிலையாமையை உணர்ந்த நாவுக்கரசர், தருமசேனர் எனும் பெயருடன் சமணசமயம் புகுந்தார். நாவுக்கரசர் சமண சமயம் புகுந்ததை ஆற்றாத அவருடைய தமக்கையார் திருவதிகை வீரட்டானத்துறை இறைவனிடம் புலம்பி அழுதார். அழுத அழுகை தருமசேனரின் வயிற்றில் சூலைநோய் ஆக பீடித்தது.

அந்த நோயை எவராலும் மாற்ற முடியவில்லை. கன்றைத் தேடிவரும் பசுவைப் போல தருமசேனர் திருவதிகை இறைவனைத் தேடி ஓடி வந்தார். தமக்கையாரின் கையால் திருநீற்றை வாங்கிப் பூசிய பின்னர் **"கூற்று ஆயினவாறு"** எனும் தேவாரத்தைப் படித்து சூலை நோயை தொலைத்தார். தம்மை ஆட்கொண்ட ஈசனின் அருள் திறத்தை பாடி, இவர் பாடிய தமிழ் கொழிக்கும் பதிகங்களே நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக திகழ்கின்றன. மீண்டும் சைவம் புகுந்த மருணீக்கியாரை அழைத்து வருமாறு சமண சமயத்தின்பால் நின்ற அந்நாட்டு அரசனான நெடுமாறன் ஆணையிட்ட போது, **"நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"** என்று பெருங்குரல் எழுப்பி அதிகார அடிமைத்தனத்துக்கு எதிரான குரலாக சீறிப் பாய்ந்தார்.

நஞ்சு கலந்த சோறு வழங்கியும், நீற்றறையுள் இட்டும், யானையால் மிதிக்க வைத்தும், கல்லுடன் கட்டி கடலில் போட்டும் எனப் பலவாறு நாவுக்கரசருக்கு துன்பத்தை விழைவித்த போதும் அவற்றை எல்லாம் சிவன் அருளினால் தகர்த்து எறிந்தார். நஞ்சு கலந்த சோறு உண்ட போது திருவைந்தெழுத்து ஓதியும நீற்றறையுள் இட்டபோது **"மாசில் வீணையும் மாலை மதியமும்"** என்ற பதிகம் பாடியும், யானையால் மிதிக்க வைத்த போது **"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்"** என்ற பதிகம் பாடியும், கல்லுடன் கட்டி கடலில் போட்ட போது **"சொற்றுணை வேதியன் சோதி வானவன்"** என்ற பதிகம் பாடியும், சமணர்களின் சூழ்ச்சிகளை வென்று அவர்களை அழித்தார். உழவாரத்தைக் கையில் ஏந்தி, தமிழை நாவில் ஏந்தி, ஈசனை இதயத்தில் ஏந்தி சமயப் புரட்சி ஒன்றையே நடத்தி முடித்தார்.

அப்பர் எனும் பெயருடன் நாவுக்கரசர் காலத்தால் பிரிக்க முடியாத பெட்டக பொதி. இவர் செய்த அற்புதங்களை எண்ணுகின்ற போது மனம் விரிந்து பறக்கின்றது. அவற்றுக்கு அப்பால்


GNANAKURUArts

இவரின் சமுதாயச் சீர்திருத்தமே மனக்கண்ணில் விரிகிறது. வடமொழியும் வருணாச்சாரமும் சைவத்தமிழ் மீது வீழ்ந்த போது அவற்றை துடைத்தெறிந்து சைவ புதுமை கண்டார். அப்பர் ஒரு பேராழுமை எனவும் விரியலாம்.

**"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்**
**அவரன்றே யாம்வணங்கும் கடவுளாரே."**

என்ற வரிகள் வருணாச்சாரத்தின் மீதும் சமூகப் பிளவின் மீதும் விழுந்த சாட்டை அடிகள். எக்குலம் எச்சாதி எக்கோத்திரமாய் இருப்பினும் அவர் ஈசனுக்கு அன்பர் எனில் அவருக்கு நான் அடியேன். எனப் பெருமனம் விரிந்து போகின்றார் அப்பர். புகழ் விரும்பி இறை தொண்டாற்றும் பலருக்கு மாற்றாக, உழவாரம் ஏந்தி ஊர் ஊராய் சென்று சுத்தம் செய்து பெரும் தொண்டாற்றி இருக்கின்றார் அப்பர் பெருமான். திருமறைக் காட்டு கதவைத் திறந்தது முதல் பஞ்சம் போக்கி படிக்காசு பெற்றது முதற்கொண்டு, இடப இலட்சணை பெற்றது வரை அடிகளாரின் அற்புதம் நீளுகின்றது. அடிகளார் ஒரு அருந்தொண்டர், தமிழ் பாவலர், இறைவனை மொழியாலும் மனத்தாலும் பணியாலும் குல பேதமின்றி யாவரும் இறைவனை அடைய முடியும் என்று, தமிழ் கூறும் சைவ உலகிற்கு வாழ்ந்து காட்டிய பெருமகனார். தமிழ் இருக்கும் வரை சைவம் இருக்கும் வரை சிவம் இருக்கும் வரை திருநாவுக்கரசர் வாழ்ந்து கொண்டு இருப்பர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் முத்தி அடைந்த தலம் – திருப்புகழுர்
திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை – சித்திரைத் திங்கள் செக்கு (சதயம்) நாண்மீன்

**ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி!**

திருச்சிற்றம்பலம்

# மாணிக்கவாசகர் சுவாமிகள்

இறைவனின் பேரின்ப ஆற்றில் மிதந்து முத்தியின்பம் அடைந்து, தொண்டர்கள் வானுறையும் கடவுளர்களாக மாறிப்போயினர். ஆனால் இந்த வழமையில் இருந்து மாறாக, ஒரு அடியவரால் இறைவனே தனித்தன்மை வாய்ந்த சிறப்புப் பெற்றான் என்றால் அது திருவாதவூரடிகளையே சாரும்! **“விடையேறியோர் தூவெண் மதி சூடிய”** இறைவனை **“பரியேறிய நாதனாக”**, பத்தர்களுக்குக் காட்சி தர வைத்த பெரும்பேறு பெற்றவரே, திருவாதவூரடிகளென்னும் மணிவாசகர்! நான்முகனுக்கும் திருமாலுக்கும் அடிமுடி காட்டாத ஈசன், இவருக்காக இறங்கி வந்து தன்னைக் காட்டி அருளினார்.

பெரியபுராணத்தில் எந்தக் குறிப்புக்களும் இல்லாத மணிவாசகரை, காலம் சைவத்தின் கைகளில் சான்றுகளோடு சேர்ப்பித்தது! சைவத்தின் மாண்பு அத்தனைக்கும் சாரமாய் அமைந்த தனிப்பெரும் நூலாகிய திருவாசகத்தை அருளிய மணிவாசகரிடத்திலே, இறைவனே விரும்பி, திருக்கோவையும் கேட்டு பெற்றுக் கொண்டான் என்கில், இதை விட மணிவாசகர் சிறப்பை வார்த்தைகளில் சொல்லிவிடத்தான் இயலுமா? **“மணிவாசகந்தரு மந்திரமோதினால் பிணி மூப்பில்லாப் பிரம மாகுதும்”** என்கிறார், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள்.

சைவத்தின் தெளிவு தொண்டு! அது உயர்ந்த ஞானமார்க்கத்தோடு சேரும் போது, அறிவால், கல்வியால் பெற்ற புறப்பொருட்கள் எல்லாம் சிறு புல்லென தெரிந்து நம்மை நீங்கும். அந்த இயல்பு வாய்க்கப் பெற்றதும், இப்பெரிய சைவசமய மார்க்கத்திற்குப் பெரும் பணியாற்ற இறைவனின் பெருங்கருணை வந்து வாய்க்கிறது. அரிமர்த்தன பாண்டியனின், முதல் அமைச்சராக, அந்நாட்டின் உயரிய பட்டமாகிய “தென்னவன் பிரமராயன்” எனும் பெருமையோடு, அரசவையில் பணியாற்றி வந்தார் திருவாதவூரடிகள்.

போர்ப் படைகளை மேம்படுத்துவதற்காக குதிரை வாங்க வேண்டிய தேவை பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்டது. இதனால் முதலமைச்சராக விளங்கிய வாதவூரரை பொற்காசு கொடுத்து அனுப்பினார். பரிவாரங்களுடன் குதிரை வாங்கச் சென்ற வாதவூரர் வழியில், குருந்த மரநிழலில் குருவாகிய இறைவனைக் கண்டதும், அந்த நொடியில், அறிவால் வாய்த்த அத்தனையையும் துறந்தார்! தன் பதவி துறந்தார், பணியை மறந்தார், தன்னை மறந்தார், பரமனின் பாதங்களை தன் தலைமேல் தாங்கும் பேறுபெற்றார்! உள்ளம் கசிந்து உடலும் என்பும் உருகி நின்று ஞானத்தின் தெளிவை, நான் மறையின் முடிவை, சிற்றறிவு உணர முடியாத சிவனை உற்றறியும் உள்ளன்பு பெற்றார்! ஒரு காதலி காதலனைத் தேடி பிரிவு ஆற்றாமல் புலம்பும் நிலையைப் போலானார்.

தான் வந்த நோக்கம் மறந்து, சிவன் அடியிலேயே மூழ்கியிருந்தார். உடன் வந்தவர்கள் இதைப் பற்றி அரசனிடம் சென்று முறையிட்டார்கள். சினம் தலைக்கேறிய அரசன் மாணிக்க வாசகரை இழுத்து வருமாறு காவலரை பணித்தான். பதற்றமடைந்த மாணிக்கவாசகரை, சிவபெருமான் அமைதிப்படுத்தி, ஆவணித் திங்கள் குருகு (மூலம்) நாண்மீன் நாளன்று குதிரைகள் வரும் எனச் சொல்லி அனுப்பினார். மாணிக்கவாசகரும் அதை அரசனிடம் சொல்ல, அவனும் சினம் தணிந்து அன்பாக பழகினான் சிறிது காலம் செல்ல, குதிரை வராததை கண்ட அரசன் கோபமடைந்து, மாணிக்கவாசகரை சிறையில் அடைத்தான்.

மாணிக்கவாசகரின் அழுகையை பொறுக்கமுடியாமல், நரிகளைப் பரிகளாக்கி, தானே அதன் தலைவனுமாகிக் கையில் கோலுடன் வந்தார். வந்தது சிவனே என்று தெளிகின்றார்! வாதவூரர். ஆனால் மன்னனின் அறியாமையை எண்ணியும் ஆண்டவனின் பேரருளை எண்ணியும் "கடை நாயேனாகிய" தனக்காக இறைவன் வந்தானே என்று கலக்கம் மிகக் கொள்கின்றார். பின்னரும், திருப்பெருந்துறையில் மீளவும் சென்று குருநாதன் திருத்தாள் களிலேயே, பத்தி பெருகப் பணிசெய்து பேரின்ப அனுபவம் பெறுகின்றார்!

இறைவனோ, அவ்விடம் விட்டு அகன்று, மணிவாசகரை தில்லைக்கு வருமாறு திருவருள் கூர்ந்து கூறி மறைகின்றான்! இறைவனைத் தேடி உத்தரகோசமங்கைக்கு சென்றார்! அங்கே,

**"கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட**
**விடையவனே விட்டிடுதி கண்டாய்" என்றும்,**
**"இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னின்**
**அல்லால் விருந்தினேனை விட்டிடுதி கண்டாய்" என்றும்**

என்னைக் கைவிட்டுவிடாதே, என்று இறைவனிடத்தில் ஐம்பது பாடல்களால் உலகை நீத்தலின் பொருட்டு விண்ணப்பிக்கின்றார்! இறைவனோ, திருப்பெருந்துறையில் மணிவாசகர் காணத் தவறிய கோலத்தைக் காட்டி, எண்சித்திகளையும் மணிவாசகர் பெறும் வகையில் அருளி மறைந்தார்! அதன் பின்னரும், அற்புதமான மனம் உருகும் திருவாசகப் பதிகங்களை மணிவாசகர் நெக்குருகிப் பாடினார்.

திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களை வணங்கி, திருவண்ணா மலையை அடைந்து, திருவாதவூரடிகள், திருவண்ணாமலையில், தன்னையும் பெண்ணாகக் கருதி "திருவம்மானை" பாடினார். அதிகாலை துயிலெழுப்பி சிவபூசைக்கு அழைக்கும் "திருவெம்பாவை" பாடினார். இவ்வாறு வரலாற்றையும் ஆவணப்படுத்தி, திருவண்ணாமலையில் இருந்து இறைவன், ஆணைப்படியே தில்லையை சென்றடைந்தார். இறைவனின் வான் கருணைச் சிறப்பை எண்ணி எண்ணிச் சிறுமியர் போல், திருக்கோத்தும்பி பாடி ஆடி மகிழ்ந்தார். தில்லையில் தான் பெற்ற ஞானத் தெளிவால், புத்தமார்க்கத் துறவிகளை வாதில் வென்று, சைவத்தின் மாண்பை உலகத்தார்க்கு உணர்த்தியது மட்டுமன்றி ஈழநாட்டு அரசனின் ஊமைப் பெண்ணையும் பேசவைத்தார்.

இறைவன் தானே அந்தணன் வடிவில் சென்று, மணிவாசகரை ஆட்கொண்டது மட்டுமன்றி தானே திருவாகத்தையும் கேட்டு எழுதிக்கொண்டார். அது மட்டுமா! **“பாவை பாடிய வாயால் கோவையும் பாடுக”** என்று தமிழை விரும்பிக் கேட்டார். எவ்வளவு சிறப்பு? எவ்வளவு கருணை? மணிவாசகரின் திருவாசகம் சைவத்தின் ஒப்பற்ற ஊற்று! அருள் வழியும் அமுதசுரபி! சான்றோரும் மேலைநாட்டு அறிஞரும் அருமருந்தாகப் போற்றிய அமுதம்! நாமும் எம் தலை முறைக்கு மணிவாசகராகிய திருவாதவூரடிகளின், சிவனே பொருளாய் அமைந்த திருவாசகத்தை யும் கடத்தி மகிழ்வோமாக!

**வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால்: நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து**
**ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

- வள்ளலார் சுவாமிகள்

மாணிக்கவாசகர் சுவாமிகள் முத்தி அடைந்த தலம் – தில்லையம்பதி (சிதம்பரம்)
மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை – ஆனித் திங்கள் கொடுநுகம் (மகம்) நாண்மீன்

**ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி!**

திருச்சிற்றம்பலம்


GNANAKURU Arts

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

சிவபெருமானின் இடப்பாகத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் உமையவளின் திருமுலைப் பாலை உண்டு, மூன்று வயதிலேயே திருக்கழுமலம் என்று சிறப்பிக்கப்படும் சீர்காழித் திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனை நோக்கி பாடிய சிறப்புடையவர் சம்பந்தர். இவர் புகழியர் கோன், வெங்குரு வேந்தன், ஆளுடைய பிள்ளை, தோணிபுரத் தென்றல், பாலறாவாயர், முத்தமிழ் வித்தகர், பரச மயக் கோளரி, தமிழாகரன், கவுணியர் கோன் போன்ற பல திருப்பெயர்களை தன்னகத்தே கொண்டவர் .

சம்பந்த நாயனார் சோழ நாட்டிலுள்ள சீர்காழி என்னும் ஊரில் சிவபாதவிருதயருக்கும் பகவதி அம்மைக்கும் மகவாக தோன்றினார். மூன்று வயதிலேயே முக்கண்ணன் மனைவி யிடம் ஞானப் பாலைப் பருகியதால், பல தேவாரப் பாடல்களைப் பாடி பல அற்புதங்களை நிகழ்த்தி, அக்காலத்தில் தளர்ச்சியடைந்திருந்த சைவ சமயத்தை புத்துயிர் பெறச் செய்தார். தேவார முதலிகளுள் ஒருவரான இவரால் முதல் மூன்று திருமுறைகள் அருளிச் செய்யப்பட்டன. இதில் 4158 பாடல்கள் உள்ளடங்குகின்றன.

ஈசனிடம் பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துச் சின்னம் பெற்ற இவர் இறைவனை தீந்தமிழால் பாடி பல அற்புதங்களை நிகழ்த்தினார். அவ்விதம் திருப்பாச்சில் ஆச்சிரமத்தில் கொல்லி மழவனின் மகள், உணர்விழந்து, வலிப்பினால் வரும் முயலகன் எனும் நோயினால் பீடிக்கப்பட்டாள். சம்பந்தர் சுவாமிகள் திருப்பாச்சிலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை நினைந்து **“துணிவளர் திங்கள்”** என்ற பதிகம் பாடி அவளது நோயைத் தீர்த்தார். திருச் செங்கோடு சென்றிருந்த போது, அங்கு குளிர்காலத்தில் குளிர் காய்ச்சலால் பாதித்திருந்த, சிவனடியார் களுக்காக இறைவனைப் பாடினார். அப்பதிக மகிமையால் அந்நாட்டிலேயே குளிர்சுரம் அற்றுப்போனது. அப்பதிகம் பின்வருமாறு,

**“அவ்வினைக்கு இவ்வினை ஆம்” என்று சொல்லும் அஃது அறிவீர்**
**உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம் அன்றே**
**கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்**
**செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்**

தந்தையார் யாகம் செய்யும் பொருட்டு திருவாடுதுறை சிவனை நினைந்து **“இடரினும் தளரினும்”** பதிகம் பாடிப் பொற்கிளி பெற்றுக்கொண்ட சம்பந்தர், திருமருகலில் **“சடையா யெனுமால்”** பதிகம் பாடி இறந்த வணிகனை உயிர்ப்பிக்கச் செய்தார். மேலும் சம்பந்தரும் நாவுக்கரசரும் இணைந்து பஞ்சம் தீர்க்க இறைவனிடம் படிக்காசு பெற்றனர். இருவரும் இணைந்து திருமறைக்காட்டில் தலைவாசல் திறக்கவும் மூடவும் பாடினர்.

சம்பந்தர் சமண மதத்தினுடைய ஆதிக்கத்தால் நலிவுற்ற பாண்டிய நாட்டில், சைவ சமயத்தை வளர்ப்பதற்காய் மங்கையற்கரசியார், குலச்சிறையார் ஆகியோரின் அழைப்பினை ஏற்று மதுரைக்குச் சென்றார். அங்கு அவர் தங்கியிருந்த மடத்துக்கு சமணர்கள் தீ மூட்டினர், அத்தீயை அப்படியே கூன் பாண்டியனுக்கு வெப்புநோயாக மாற்றினார். இதன் வலி தாங்க முடி யாமல் உழன்று கொண்ட மன்னனின் கோரிக்கையை ஏற்று அந்நோயினை இல்லாமல் செய்வதற்காக **“மந்திர மாவது நீறு”** என்று தொடங்கும் திருநீற்றுப்பதிகம் பாடி வெப்புநோயை முழுமையாக தீர்த்ததோடு, தீச்சர்களான சமணர்களின் அனல்வாதம், புனல்வாதத்தை இறையருளால் வென்றார். அனல் வாதத்தில் பாண்டியனின் கூனையும் சரிப்படுத்த பாடி அவனை நின்றசீர் நெடுமாறன் ஆக மாற்றிய துடன், இறைவன் விரும்பி உறையும் திருவாலவாய் ஆகிய மதுரையில் சைவத்தை வளர செய்தார்.

வாதத்திற்கு வரும் முன்பே சம்பந்தரை தண்டிக்க எண்ணிய புத்தநந்தியின் தலையை உருளச் செய்ததோடு, சாரிபுத்தன் முதலான புத்தர்களோடு வாதம் புரிந்து அவர்களை சைவ சமயத்தை தழுவச் செய்தார். இப்படியான பல அற்புதங்களை, பரமன்பால் பதிகம் பாடி நிகழ்த்தும் பரசமயகோளரி, திருவோத்தூரில் உள்ள சிவத் தொண்டர்கள் சமணரால் கேலிக்குள்ளாக்கப்பட்ட தால் இறைவனை நினைந்து பாடி, ஆண்பனைகளை பெண்பனைகளாக மாற்றினார். அதுமட்டுமன்றி அம்பிகை மயிலாக வந்து இறைவனைப் பூசித்த திருமயிலாப்பூரில் வாழ்ந்த சிவனேயச் செல்வர் ஒருவரின் மகளான பூம்பாவை பாம்பு தீண்டி உயிரிழந்த நிலையில் அவளின் எலும்புக் குடத்தை உயிர்ப்பிக்க **“மட்டிட்ட புன்னை”** என்னும் பதிகத்தைப் பாடி உயிர்ப்பித்தார்.

இத்தகைய சிவத் தொண்டாற்றி வரும் சிவதொண்டரான சிவநேயச்செல்வருக்கு, சீரும் சிறப்புமாய் திருமணம் நடத்த எண்ணினார் சிவபாதவிருதயர். இதற்கு முதலில் இணங்காத சம்பந்தரை இயல்பு வாழ்வு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தனர். நம்பியாண்டார் நம்பி மகளான தோத்திர பூரணையை ஈசன் தோத்திரம் பாடித் துதிக்க பொருத்தமான துணை என தீர்மானித்து திருமணத்தை நடத்தி வைத்தனர். மணமகனாகிய சம்பந்தர் மணையாளைக் கரம்பிடித்து இறைவனோடு கலக்க விரும்பி (முத்தி பெற) **“கல்லூர் பெருமணம் வேண்டா கழுமலம்”** எனும் பதிகம் பாடினார்.

இறைவனும் அப்பதிகத்திற்கு செவிசாய்த்து “திருநல்லூர் பெருமான் திருத்தலத்திலே வாயிலுடன் தோன்றும் சோதியின் இம்மணம் காண வந்த அனைவரும் சிவபுரம் வந்தடைவீர்” என உரைத்தார். அவ்வாறே திருநீலநக்கநாயனார், முருக நாயனார், சிவபாதவிருதயர், நம்பியாண்டார் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியோர் சுற்றத்துடன் சோதியில் கலந்து அனைவரும் சென்ற பின் தன் மனைவியுடன் அதனுள் செல்ல முன்னர் **“காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி.”** எனும் பதிகம் பாடி சோதியில் புகுந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முத்தி அடைந்த தலம் – திருப்பெருமண நல்லூர்
திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசை – வைகாசித் திங்கள் குருகு (மூலம்) நாண்மீன்


**பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி!**

திருச்சிற்றம்பலம்


GNANAKURU Arts
தை




திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ணல்



## தந்தைக்கு இறைவனைச் சுட்டிக் காட்டுதல்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரம்மேவிய பெம்மானிவனன்றே



## இறைவனிடம் பொற்றாளம் பெறுதல்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ



## உலவாப் பொற்கிழி பெறுதல்

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே



## அரவு தீண்டிய இளைஞரை உயிர்ப்பித்தல்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

இறைவன் அடியார் பெருமைகளைப் பாடுவதற்காக ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றார். அவர் தான் பெருமானின் அனுக்கத் தொண்டரான ஆலால சுந்தரர். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில், சிவப்பிராமணரான சடையனாருக்கும் இசைஞானி யாருக்கும் மகவாக பிறந்தவா் சுந்தரர். நரசிங்க முனையரால் அரசபோகத்தில் வளர்க்கப்பட்ட இவர், முற்பிறவியில் ஆலால சுந்தரராய் ஈசனுக்குத் திருக்கயிலையில் தொண்டு செய்தார். பூமாலைத் தொண்டாற்றி, திருநீற்று மடலை கையில் தாங்கி சிவபெருமானின் அருகில் நிற்கும் பேறு பெற்றவர் நம்பியாரூரர். ஒருநாள் நந்தவனத்தில் முக்கண்ணனின் பிராட்டியான உமையவளுக்கு தொண்டாற்றும் அந்த மில் சீர் அநிந்திதை, கந்த மாலைக் கமலினி ஆகிய சேடியர்பால் மோகம் கொள்ள அவர்கள் மயங்கி நின்றனர். இதை அறிந்த பிறைசூடன், ஆலாலசுந்தரரை பூமியில் பிறக்கச் செய்து அவ்விரு பெண்டினரோடு வாழுமாறு அருள்பாலித்தும், மீண்டும் இத்தவறை பூவுலகில் செய்யாதிருக்க தன்னை தடுத்தாட் கொள்ளுமாறு இறைவனிடம் வேண்டி பூமிக்குப் புறப்பட்டார்.

புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை சுந்தரருக்கு மணம்புரிய நிச்சயித்தனர். திருமணம் விமரிசையாக நடந்து கொண்டிருந்தபோது இறைவன் சுந்தரரை தடுத்தாட்கொள்ள எண்ணி கிழப்பிராமண வடிவத்தில் வந்து, சுந்தரர் தம் அடிமை எனக் கூறி அவரை ஆட் கொண்டு, திருமணத்தை தடுத்தார். தடுத்தாட் கொள்ளுகையில் இறைவனே கிழப்பிராமணன் என அறியாது பித்தன் என ஏசியதால் வன்தொண்டன் என்ற பெயரை முதலில் பெற்றார். அப்பெயரைப் பெற்ற இவரை ஈசன் தன்னை பித்தன் எனப் பாடுமாறு பணித்தார். அதனை ஏற்றுக் கொண்ட சுந்தரர் இறை வனை நோக்கி **“பித்தாப் பிறைசூடி”** என்ற பதிகம் பாடி சிவனைப் பாடும் பணியை தொடங் கினார்.

திருவதிகையின் அருகில் இருந்த சித்தவட மடத்தில், இறைவனால் திருவடி சூட்டப்பட்ட சுந்தரர் தில்லைவாழ் அந்தணரைப் போற்றி திருத்தொண்டர் தொகையைப் பாடினார். திருவாரூரில் இறைவனால் தன் தோழர் எனக் கூறப்பட்ட தம்பிரான் தோழராகிய சுந்தரர், உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்த பரவையார்பால் காதலுற்றார். இவரே கைலாயத்தில் கமலினியாக அம்பிகைக்கு சேவை புரிந்தவர். முன் வினைப் பயனால் இருவரும் (சுந்தரர், பரவையார்) நோக்கியதை சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தில் அருமையாக குறிப்பிட்டுள்ளார்.

இருவரையும் ஒன்றாக இணைக்க எண்ணி, இருவரின் கனவிலும், அடியார்கள் கனவிலும் இறைவன் தோன்றி, திருமணத்தை நடத்தி வைத்தார். சுந்தரர் மீது பத்தி கொண்ட குண்டை யூர்கிழார் ஒவ்வொரு முறையும் நெல்லை அனுப்பி வந்தார். இருந்த போதும் அவரால் ஒருமுறை பஞ்சத்தின் காரணமாக நெல்லை அனுப்பமுடியவில்லை, இதை அறிந்த சுந்தரர் திகைக்க இறைவனே அன்றிரவோடு இரவாக திருவாரூக்கு நெல் மூட்டைகளை அனுப்பி

வைத்தார். மேலும் திருவாரூர் பங்குனி உத்தர விழாவிற்காய் ஈசன் இவர் பொருட்டு செங்கட்டி களை பொன்கட்டிகளாக்கியும், திருமுதுகுன்றத்தில் கொடுத்த பன்னீராயிரம் பொன்னை சுந்தரர் மணி முத்தாற்றில் போட அதை கமலாயக் குளத்தில் கிடைக்கப் பெறவும் செய்தார். இவ்விதம் இவர் பொருட்டு பல அற்புதங் களைச் செய்தார்.

இத்தனையும் செய்த இறைவன் தொண்டை நாட்டில் பொதிச் சோற்றையும், திருக் கச்சூரில் யாசகம் பெற்றுக் கிடைத்த சோற்றையும் அளித்து அருள் புரிந்ததோடு, அநிந்திதை யான சங்கிலியாரோடு இவருக்கு திருமணம் செய்து கொடுதார். சங்கிலியார் சுந்தரர் திருமணம் நடைபெற்றதனை அறிந்து கோபமுற்ற பரவையாரை சாந்தப்படுத்தி இருவரையும் இணைத்து வைத்தார். அப்பப்பா இறைவன் இவர்பால் இருமுறை அல்லவா தூது போனார் இதை,

**"நோக்குறும் நூதலோன் நின்னிடை விருப்பால்**
**நூற்பக வன்னநுண் மருங்குல்**
**வார்க்குவி முலைமென் மகளிர் தம் புலவி**
**மாற்றுவான் சென்றனன் என்றால்**
**சோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்**
**கொண்டதே துக்கு நீ புகலாய்"**

என நால்வர் நாண்மணிமாலை சுட்டுகிறது. இறைவன் நம்பியாரூரர் பால் தூது சென்றதும் அவரது எளிவந்த தன்மையை பெரியோர் உணர்கின்றனர் என்பதற்கு கீழ்வரும் சிவஞானசித்தியார் எடுத்துக்காட்டு.

**"வேதம் நாரணன் ஆரணம் அறியாவி முழுப்பொருள் பேதைபால்**
**தூதனாய் இரு கால்நடந்திடு தோழன் வன்மைசெய் தொண்டனுக்கு**
**ஆதலால் அடியார்களுக்கு எளியான் அடிக் கமலங்கள் நீ**
**காதலால் அணை ஈண்டன வேண்டின இம்மையே தரும் கண்டிடே"**

சுந்தரர் பெருமான் ஏயர்கோண் கலிக்காமரின் பிணியையும் தீர்த்ததோடு, அவி நாசியில் முதலை உண்ட பாலகனை இறையருளால் மீட்டும் அதிசயங்களை நிகழ்த்தினார். இப் புவியுலக வாழ்வு இத்துடன் போதும் என்று திருவஞ்சைக் கழத்தில் **"வெறுத்தேன் மன வாழ்க் கையை விட்டொழித்தேன்"** எனப்பாட இறைவன் அவரை திருக்கயிலைக்கு அழைத்து வர வெள்ளை யானையை அனுப்பி வைத்து, மீண்டும் தன்னுடைய அணுகத் தொண்டனாக ஏற்றருளினார். பரவையாரும் சங்கிலியாரும் உரிய காலத்தில் கைலையை சென்றடைந்து, அம்பிகையின் சோடிகளாக மீண்டும் விளங்கினார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றிய பெரும்பணி திருத்தொண்டர் தொகை பாடியதேயாகும். அதுவே சேக்கிழார் பெரிய புராணத்தை எழுத வழிவகுத்தது. அதுமட்டுமன்றி இவரின் சந்தனயம், தெய்வீகம் கமழும் தேவாரப் பாட்கள் 1026ம் திருப்பாட்டு என வழங்கப்படுவதோடு ஏழாம் திருமுறையாகவே மிளிர்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முத்தியடைந்த தலம் - திருவஞ்சைக்களம்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை - ஆடித் திங்கள் விளக்கு (சுவாதி) நாண்மீன்

**வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி!**

திருச்சிற்றம்பலம்


GNANAKURUArts

# திருமூல நாயனார்

**சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடி தாமரையானே**

திருமூலர் என்ற ஒற்றை பெயர் பல ஆண்டுகளை கடந்தும் தகதகத்து ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது, ஓராயிரம் உணர்ச்சி அலைகளை வீசிக் கொண்டிருக்கின்றது. அதையும் தாண்டி அந்தப் பெயரை நோக்கும்பொழுது பத்தி ஒளிவீசி பரவுகின்றது. வடக்கே இருந்து ஒரு சிவயோகியார் அகத்தியரைக் காண விரும்பி தென்னாடு நோக்கி பயணமாகிறார். பயணமாகி வருகின்ற வழியில் ஒரு பசுக்கூட்டம் கதறிக் கொண்டிருப்பதையும் அம் மந்தைக் கூட்டத்தின் நடுவில் இடையன் ஒருவன் இறந்து கிடப்பதையும் கண்டு வெம்பினார். பசுக்களின் துயரத்தினைப் போக்க எண்ணி தன்னுயிரினை அந்த மூலனின் உடலில் செலுத்தினார்.

உயிர்பெற்றெழுந்த மூலன், பசுக்களை மேய்த்து சென்று வீட்டில் விட்டார். அதன் பின்பு தன் உடலைத் தேடி வந்தார் ஆனால் உடலை காணவில்லை. எல்லாம் அவன் செயல் என்று எண்ணி மூலனின் உடலுடன் திருவாடுதுறை ஆதீனத்தில் துறவியாக அமர்ந்தார். அவரைக் கண்ட மூலனின் மனைவி அழுது புலம்பி விட்டு பின்பு வீடு சென்றாள். அத்தகு மூலனின் உடலில் அமர்ந்து திருமூலர் பாடிய அரும்பெரும் அதிசயமே "திருமந்திரம்" என்று சொல்லிப் போகலாம்.

ஒரு பாடல் அறிவியல், ஆன்மீகம், அன்பு என எல்லாவற்றையும் கலந்து பேசுகின்றது என்றால் அது திருமந்திரமே என்றும் எண்ணிப் போகலாம். வார்த்தைக்கு வார்த்தை அறிவியல் கொட்டிக்கிடக்கிறது. அத்தகு மூலனின் திருமந்திரம் எனும் அருந்தமிழ் முதுநூல், தமிழ் கூறும் நல்லுலகின் அறிவு பெட்டகம் என இயம்பலாம். திருமுறைகளில் ஒன்றான திருமந்திரத்தை தமிழ் ஆகமம் எனவும், மற்றையவற்றை தமிழ் வேதம் எனவும் சிறப்பித்து இருக்கின்றது.

தமிழ் கூறும் சைவ நல் உலகம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முற்போக்கு வாதத்திலிருந்து அன்பே சிவம் என்ற அன்பியல் வாதம் வரை தன்னுடைய அலைகளை அடித்து ஓய்கின்றது திருமந்திரம். ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களை மூவாயிரம் ஆண்டுகள் பாடினார் திருமூலர் என்று அப்பெரு மூதாலரின் வரலாறு விரிகின்றது.

தமிழன்னைக்கு கிடைத்த மிக ஆழமான அரிய பெருஞ்செல்வம் திருமந்திரம் என்னும் பெருநூல். திருமந்திரமாலை என்று அந்நூலுக்கு திருமூலமூதாலன் பெயர் விளம்பினான். பத்தியோடு பார்க்கின்ற பொழுது அது ஓர் பத்தி நூல், அறிவியலுடன் பொருத்திப் பார்க்கின்ற போது அது அறிவியல் நூல், மெய்யியல் உடன் பொருந்திப் பார்க்கின்ற போது அது மெய்யியல் நூல், தத்துவத்துடன் பொருத்தி பார்க்கின்ற பொழுது அது ஒரு தத்துவ நூல், சாத்திரத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு சாத்திர நூல், தோத்திரத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு தோத்திர நூல், அத்துடன் ஆகமத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு ஆகம நூல், தமிழுடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு தமிழ் நூல். அமிழ் தினும் இனிய தமிழ் பரப்பினுடைய பெருநூல் என்றும் தெளியலாம். இத்தகு திருமந்திரத்தை தமிழ் பரப்பில் அள்ளித் தெளித்த மூலன் என்றென்றும் தமிழர் மத்தியில் நீங்காத தமிழ் முன்னோர்.

திருமூல நாயனார் முத்தி அடைந்த தலம் – திருவாவடுதுறை மாசிலாமணீசர் திருக்கோயில்
திருமூல நாயனார் குருபூசை – ஐப்பசித் திங்கள் புரவி (அச்சுவினி) நாண்மீன்

திருச்சிற்றம்பலம்



# திருமூல நாயனார்

# திருவள்ளுவர்

ஆயிரமாயிரம் நூல்கள் தமிழுள் எழுந்துவிட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இருந்தும் நாம் திருக்குறளைப் பற்றி இன்னும் அதிகம் பேசுகின்றோம். ஏனென்றால் அது கொண்டிருக்கும் அளவற்ற ஆற்றலும் அதன் பெருமையுமே காரணம். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் எனும் மூன்று பெரும் பிரிவின் அடிப்படையில் வள்ளுவர் திருக்குறளை எழுதியுள்ளார். இவற்றுள் முதலாவதாக இடம்பெறும் அதிகாரம் கடவுள் வாழ்த்தாகும். தத்துவம் என்பது தமிழர் தம் தனிப்பெருஞ்சரக்கு. அந்தத் தத்துவத்தின் விரிவுப் பொருள் தான் சைவசித்தாந்த சாத்திரங்கள்.

சைவத் தமிழர் தம் தத்துவச்சாரலை ஆழ்ந்து ஆராயுங்கால் மூளையின் கலங்கள் தோறும், இதயத்தின் வால்வுகள் தோறும், இனம்புரியா ஞான அலை அடித்துப் போகும். அத்தகு சைவசித்தாந்தக் கருத்து சங்கப்பாடல்களில் உட்கிடக்கையாகவும், திருக்குறள், திருமுறைகளில் வெளித்தெரியுமாறும், சைவசித்தாந்த சாத்திரங்களில் அம்மணமாகவும் பொதிந்து கிடக்கிறது. **“தீதும் நன்றும் பிறர் தர வாரா”** என்று கணியன் பூங்குன்றனார் சங்ககாலத்திலேயே சைவசித்தாந்தம் கூறும் வினைகளைப் பற்றி முரசறைந்து போய்விட்டார். கணியன் பூங்குன்றனாரின் வாழ்க்கை நிறைவுற்று சில வருடங்கள் கடந்தோடியதும், தமிழ் நாட்டில் மீண்டும் கண் விழிக்கின்றது ஒரு தத்துவ ஊற்று. அந்த ஞான ஊற்றின் பெயர் வள்ளுவர் என்று சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

வேதங்கள் எனப்படுவன ஓதப்படுவன. ஆகமங்கள் எனப்படுவன ஒழுங்கு செய்வன. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்குமே தமிழர் வேதங்களின் அடிப்படைச் சாரம். இந்த நான்கு வேதங்களையும் பேசும் தமிழ் நூல்கள் இரண்டே இரண்டு தான். ஒன்று திருக்குறள், மற்றையது திருமுறைகள். இந்த இரண்டின் சுழற்சி தான் தமிழரின் வாழ்வியல். இந்த இரண்டின் இயக்கத்தில் தான் தமிழர் தம் அறிவியலே இயங்குகின்றது. அந்த வகையில் எவன் ஒருவன் இவ்விரண்டையும் தன் வாழ்வில் பேணுகின்றானோ அவனின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது.

**“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு”**

என்று தனது முதற்குறளை ஓதுகின்றார் வள்ளுவர். இறைவனது இன்றியமை யாமையை வள்ளுவர் எவ்வளவு அழகாக எடுத்தாளுகின்றார் பாருங்கள். எழுத்துக்களுக்கு ஆரம்பமாக அகரம் எவ்வாறு நிற்கின்றதோ அது போல இறைவன் உலகின் ஆரம்பமாக உள்ளான் என்று கூறுகின்றார் வள்ளுவர். அ என்ற எழுத்தின்றி உயிர் எழுத்துக்களே இல்லை, உயிர் எழுத்துக்கள் இன்றி மெய் எழுத்துக்கள் இல்லை. எழுத்துக்கள் இல்லையென்றால் மொழி இல்லை. மொழி இல்லையென்றால் இனமே இல்லை. ஒரு அகரத்தின் தேவையைப் பாருங்கள்.

அது போலத்தான் இறைவனும் என்கிறார் ஞானத் தமிழ்ப்புலவர். பகவன் என்றால் பகர்ந்து உள்ளவன் என்றும் பொருள் படும். சத்தியொடு சிவமாகப் பகர்ந்து உள்ளவன் தான் இறைவன். பிரிந்தும் அதே சமயம் சேர்ந்தும் உள்ள நிலை தான் இறைநிலை. அதனாலே தான் "சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்று திருவருட்பயன் போற்றுகின்றது.

அடுத்ததாக வள்ளுவர் எறிகணைக் கேள்வியை எறிகின்றார். நாத்திகர்களை நோக்கி முதன்முதலில் எதிர்ப்புக் குரல் எழுப்பியவன் வள்ளுவன் என்று தான் சொல்லியாக வேண்டும். "நாத்திகம் பேசி நாத்தழும்பேறியும்" என்று சொன்ன மாணிக்க வாசகருக்கே வள்ளுவன் முன் னோடியாகி விட்டான் என்றால் அதில் பிழையில்லை. "கற்றதனால் ஆய பயனென் கொல்?" அவன் இறைவனை வழிபடாதவர்களை நோக்கி எழுப்பும் கேள்வி மிகுந்த ஆழமானது. நாம் எவ்வளவு கற்றாலும், இறைவனை வணங்கா விட்டால், அந்தக் கல்வியால் பயனே இல்லை என்கின்றார். இதே ஆழத்தை வைத்து தான் சமணம், பௌத்தம் முதலாய நாத்திக சமயங்களை மறுத்தெறிகிறது சைவசித்தாந்தம்.

இறைவனின் அடிகளைச் சேரலையே முத்தி என்கிறது சைவசித்தாந்தம். இதனாலே தான் மாணிக்கவாசகரும் பாடும் இடம் தோறும் இறைவனின் தாள்களையே பாடுகின்றார். இதற்குச் சற்றும் இளைக்காத வள்ளுவர், "வாலறிவான் நற்றாள் தொழா அர் எனின், மலர் மிசை யேகினான் மாணடி சேர்ந்தார், வேண்டுதல் வேண்டாமை இலான் அடி, தனக்குவமை இல் லாதான் தாள், அறவாழி அந்தணன் தாள், எண்குணத்தான் தாளை வணங்காத்தலை, இறைவன் அடி சேராதார்" என்று வரிக்கு வரி இறைவனின் அடிகளையே போற்றுகின்றார்.

ஈசனுக்கு எட்டுக் குணங்கள் உண்டு என்று சைவம் பேசுகின்றது. அதனை தன்வயத் தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்று சைவசித்தாந்தம் பேசும். வள்ளுவரும்,

**"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"**

என்று ஈசனை விளம்புகின்றார். மேலும் நிலையாமை, பற்றியும் அதேசமயம் இன்பத்துப்பால் பற்றியும் வள்ளுவர் பேசுகின்றார். இல்லறத்தையும், துறவறத்தையும் ஒரே வாயால் பேசிய ஒரே சமயம் சைவமே. அதன் தத்துவமே இறைவனின் மாதொருபாகத் தத்துவம். ஒரே சமயத்தில் இல்லறத்திலும், துறவறத்திலும் ஈசனை வைத்துப் போற்றுகின்றது சைவம். இத்தகு எட்டுக் குணங்கள் உள்ள இறைவனை வழிபட்டால் புலன்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று வள்ளுவர் கூறுகின்றார். ஆகவே வள்ளுவர் சொன்னதன் ஆழச் சிறப்பினை அறிவில் எடுத்து, நாமும் அது போல் நடந்து ஈசனை வழிபடுவோம். அறவழியில், பொருளைப் பெற்று, இன்பமடைந்தாலே போதும் இறைவன் தானாக அருளுவான் என்று வள்ளுவர் கூறுகின்றார். மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம். மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள். வள்ளுவர் போற்றுதும்.



திருவள்ளுவர்

# தெய்வச் சேக்கிழார்

உலகின் மூத்த முதல் நெறியாகிய சைவ நெறியின் சாரமே, தொண்டுதான்! தனக்காகவும் பிறருக்காகவும், தவமும் தானமும் செய்வதோடு இறைக்காகவும், வாழும் முறைக்காகவும் தொண்டு செய்வதும் இந்த நெறியின் தெளிவாகக் கொள்ளப்படுகிறது. இளைய தலைமுறைக்கு தொண்டின் சிறப்பைச் சொல்ல தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காக, தன் வாழ்நாளை அர்ப்பணித்து, உழைத்த பெருந்தகை, தெய்வச்சேக்கிழாரை அவரது பணிகளால் உயர்த்தி பாரின் மிசை வணங்குவதே சைவத்தமிழரின் பெருங்கடனாகும்!

பெரியபுராணமாகிய திருத்தொண்டர் புராணத்தை எமக்கு தந்து, சைவசமயத்தின், ஒப்பற்ற பெரும் புதையலை உருவாக்கிய பெருமை வாய்ந்த, தெய்வச்சேக்கிழாரின் அர்பணிப்பான பணியை அடுத்த தலைமுறை ஓதி உணரவேண்டும் என்று, 14ம் நூற்றாண்டில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார் "சேக்கிழார் புராணம்" என்கிற ஒப்பற்ற நூலை எமக்கு தந்தார். நூற்று மூன்று பாடல்களைக் கொண்டமைந்த அந்நூலே சேக்கிழார் வரலாற்றை நாம் அறியத் துணை செய்யும் தொன்மையான ஆவணமாகும்.

உலகம் "ஆவணப்படுத்தல்" என்ற எண்ணக்கருவை, எடுத்தாள முதலே, கல்லிலும், செப்பிலும், ஆவணப்படுத்தியவர்கள் தமிழர்கள் தான்! வாழ்ந்து உயர்ந்த மனிதர்களின் வாழ்வை, ஆவணப்படுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் காவியங்களையும் புராணங்களையும் பாடி வைத்தவர்கள் தான் சைவத்தமிழர்கள். ஆனால் அவற்றை, வெறுமனே பத்தி இலக்கியங்களை மட்டுமே பார்த்து எம், மகத்துவத்தைத் தொலைத்தது வருத்தமே! இந்த மகத்தான பெரும் பணிக்கு மணிமகுடம் வைத்ததை போல வந்து சைவநெறிக்கு வாய்த்தவர் தான் தெய்வச் சேக்கிழார்.

திருத்தொண்டர் புராணத்தை எழுதும் போது, அவர் அதைக் கற்பனையிலேயோ, அல்லது, செவிவழிச் செய்திகளை ஆதாரமாக வைத்தோ,முன்வைக்கவில்லை. தன் வகித்த, நாட்டின் பெரும் பணியான முதல் அமைச்சர் பதவியைத் துறந்து, திருத்தொண்டர்கள் வாழ்ந்த ஊர்களைத் தேடித் தேடிப் போனார். திருத்தலங்களை ஆராய்ந்து தேவாரத் திருப்பதிகங்களை ஓதி உணர்ந்து, மிக நுட்ப்பமாகத் திறனாய்வு செய்தார். இதுவரை உலகில் எவரும் செய்திராத மிகமிகக் கண்ணியமான திறனாய்வு அது! தான் சரிவர உறுதிப்படுத்தாத எந்தத் தகவலையும், இலக்கிச் சுவைக்காகவேனும் அந்த ஆவணச் சுரங்கத்தில் உட்சேர்க்கவில்லை. நாயன்மார் களின் தாய் தந்தையர்களின் பெயர்களைக கூட சரிவரத் தெரிந்தால் மட்டுமே குறிப்பிட்டார். எந்த நாயன்மார்களின் பெயரையோ, அல்லது அவரை விழிக்கும் போது, கவிக்கூற்றாக, "அன், ஆன்" விகுதிகளைச் சேர்க்கவில்லை. அவ்வளவு கண்ணியமாக, அடியார்க்கு அடியாராக நின்று அந்த ஆவணப் பேழையில் அருளமுதம் நிறைத்தார்!

"பணியுமாம் என்றும் பெருமை" என்றாரே வள்ளுவர், அந்தக்குறலுக்கு தானே உதாரணமாய் தோன்றினார். அந்தப் பணிவு, தெளிவால் விளைந்த விளைவு! இறை அருளால் கனிந்த கனிவு, அதனாலே தான், நாம் இன்று, "வள்ளுவன் சொன்னான், காம்பன் பாடினான்" என்று பதிவு செய்கின்றோம், ஆனால் அதே தொனியில், அதே விகுதியில், "சேக்கிழார் பாடினான்" என்றோ, "சேக்கிழார் சொன்னான்" என்றோ கூறவும் முடியாது, பதியவும் தோன்றாது! இது தெய்வத் தன்மையின் சான்று!

சேக்கிழாருக்கு தானாய் வாய்த்தது என்பதை விட, பணிவாலும், தொண்டையும், தொண்டரையும் இறைவனுக்கு நிகராக உயர்த்தியதாலும் பெற்ற பேறென்றே கருதலாம். தெய்வச்சேக்கிழார் என்ற ஒருவர் சைவத்தமிழ் உலகுக்கு கிடைத்திராமல் போயிருந்தால், திருத்தொண்டர் தொகையிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் இருந்த அடியவர் பெருமை, பாசிமூடிய பவளமாயும், மாசியில் மறைந்த மதியாயும் போயிருக்கும். அதை விரித்துச் சொன்ன தெய்வச்சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமே, "தொண்டை" சாரமாக கொண்ட, சைவத்தின் பெரும் எழுச்சிக்குத் துணை நின்றது என்பதே உண்மை! அறுபத்து மூன்று தனியாடியர்களதும், ஒன்பது தொகையடியார்களதும், அதியுச்சமான இறையன்பை, அவர்களின் தொண்டின் பற்றுதலையும், இறைவன் புகழ்பாடுவதையன்றி, முத்தியின் மீதும் பற்றற்று இருக்கும் அவர் பான்மையையும் பத்திச்சுவை நனி சொட்டச்சொட்ட எமக்கு அளித்த தாலேயே, இன்று இத்தகு பெரும் வரலாற்றைத் தொண்டர்கள் சார்ந்து நாம் எம் கைகளில் வைத்துவணங்குகின்றோம்.

எப்படி திருநெறிய செந்தமிழ் தந்த மூவர் தேவாரங்களை, மருந்தாக, மந்திரங்களாக, புரிந்து கேட்கப்படும் புண்ணியங்களாக கொள்கிறோமோ, அப்படியே தெய்வச்சேக்கிழார் திருவாய் மொழிந்த பெரியபுராணத்தையும் சைவத்தமிழ் உலகம் செப்பேட்டில் பதித்து, நடராசர். திருக்கமலங்களில் வைத்து, உயர்த்தியது

**"தோடுசெய்த திருநெறிய செந்தமிழோடொக்கும் என்று வரை தொடர்ந்து செய்**
**பேடு செய்து நடராசர் சந்தியிலேற்றுனர்களிது பாலிசூழ்,**
**நடுசெய்ததவ நீடுகுன்றைவள நகரிசெய்ததவ நிகரிலாப்,**
**பீடுசெய்ததாகி ரதிகுலத்திலகர் சேக்கிழார் செய்த பெரும் தவம்."**
என்கிறார், கொற்றவன்குடி – உமாபதிசிவாச்சாரியார்.

சேக்கிழாரின் பெருங்குடி செய்த தவம் மட்டுமல்ல, சேக்கிழாரை பெற்றதே சைவத்தமிழ் உலகின் மிகப்பெரும் தவப்பயனாகிறது. இன்று வாழும் தலைமுறைக்கு சேக்கிழார் வரலாறு, ஒரு மகத்தான வழிகாட்டி! பணியும் தன்மையும், கீழ்ப்படிந்து ஒழுகும் பாங்கும் இல்லாமல் முறைதவறிப்பயணிக்கும் இளைய தலைமுறைக்கு நல்ல மருந்து. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் வரலாறு, பெரியபுராணத்தின் பெரும்பங்காய் நிறைந்து நீள்கிறது. எந்த அமங்கலச் சொற்களும் இன்றி, எந்த அகந்தை விழிப்புக்களும் இன்றி, தெளிந்த நீரில், நிறைந்த மலராக, பெரியபுராணத்தை சேக்கிழார் படைத்த போது, இயல்பாக ஞானசம்பந்தரின் பெருமையை உரைத்து, திருநாவுக்கரசரின் முதுமையின் வாசலின் நின்றும் இறைவனை அணுகும் தன்மை



சேக்கிழார் நாயனார்

யையையும் வியந்தும், வயது, முத்திக்கும், தொண்டுக்கும் தடையில்லை என்றும் எமக்கு சான்று தந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர் தொகையின், நீட்சியாக, அவர்கள் யார் யார் என்று பாடி எம்மையும் வணங்குமாறு அருளாணைத் தருகின்றார். திருத்தொண்டர் அறுபத்துமூவரே என்ற மட்டுப்பாடோ, வரையறையோ இல்லை. அந்த எண்ணப்பாங்கு யாருக்கும் வரவும் கூடாது என்பதே சைவத்தின் கோட்பாடாகும். தன் வாழ்நாள் முழுவதும் சைவம் உய்வதற்க்காக, திருத்தொண்டர்கள் வரலாற்றைத் தேடிய தெய்வச்சேக்கிழாரின். விருப்பும் அதுவே ஆகும்.

அருளாளர்களாய் ஆற்றலாளர்களாய் இந்த மண்ணில் தோன்றி இறைவனின் பெருங் கருணைப் பேறுபெற்று, இறையோடு இரண்டறக்கலந்து பேரானந்த நிலை எய்திய, திருத் தொண்டர் வரலாற்றை எமக்கு தந்து தெய்வநிலை அடைந்த சேக்கிழாரின் திருப்பாதங்களை நினைந்து வணங்குவோமாக.

திருச்சிற்றம்பலம்

# மெய்கண்ட தேவ நயனார்

தமிழர் மெய்யியல் என்பது, தமிழ் எழுத்துகள் உருவாகி, வகைபிரிக்கும் போதே இருந்திருக்கிறது. தமிழ் எழுத்துக்களில் உயிர், மெய் மற்றும் உயிர்மெய்த் தத்துவங்கள் பிரதிபலிப்பதை காணலாம். அத்துடன் கடவுள் கொள்கையும், பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் **“பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்”** மற்றும் திருக்குறளில் **“ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்”**. இப்படி சங்க இலக்கியத்திலும் சரி, திருமந்திரத்தில் மற்றும் பத்தி இலக்கியத்திலும் சரி தமிழர் தத்துவச் சிந்தனைகள் தொடர்ந்து, ஒரு மயங்கா மரபாக வளர்ந்து, விரிந்து கொண்டே வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத் தான் நாங்கள் மெய்கண்டாரின் தோற்றத்தினை பார்க்கவேண்டும்.

இந்தக் கட்டத்தில் தான் திருவெண்காட்டில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. தத்துவத்தின் பொருளில் எங்கள் சைவசித்தாந்தமே உயர்ச்சி பெற, செந்தமிழின் சிறப்பு இந்த உலகெங்கும் பரவல் அடைய திருப்பெண்ணாகடத்தில், தோற்றம் பெற்றார் மெய்கண்டார். உலகில் எத்தனையோ தத்துவ அறிஞர்கள் உள்ளனர். கிரேக்கத்தின் அரிசுடோட்டிலில் இருந்து சீனத்தில் கன்பூசியசு வரை நீளுகின்றது அந்தப் பட்டியல். அதற்குச் சற்றும் சளைக்காமல், மரபின் நீட்சியாக இளவயதிலே இன்னும் சொல்லுவது என்றால் அவர்கள் எல்லோரையும் விட மேம்பட்டுத் திகழ்ந்தவர் தான் மெய்கண்டார். மெய்கண்டார் எனும் ஒருவர் எமக்குக் கிடைத்தது, எமது மிகப் பெரிய பலம் என்று சொன்னால் அதில் சற்றும் மிகையில்லை. சைவசித்தாந்த வளர்ச்சியில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட முதல் நூலை அருளியவர் மெய்கண்டாரே தான். அவர் அருளிய சிவஞான போதம் தான் ஒவ்வொரு சைவரும் கற்றுத் தெளிய வேண்டிய தலையாய சாத்திர அல்லது தத்துவ நூல்.

தமிழரின் மரபினை விளங்காதவர்கள், அதனைக் குறைத்துக்காட்ட நினைப்பவர்கள் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தினை, ரௌரவ ஆகமத்தின் ஞானகாண்டத்தின் மொழிபெயர்ப்பு என்று பொய்ப்பொருள் கண்டுள்ளனர். இது முற்றிலும் தவறான, அடிப்படையே இல்லாத, மயங்கமரபினைத் தாழ்த்தும் பொய்புரையே. சகலாகம பண்டிதர் அருணந்தி சிவாச்சாரியார், மெய்கண்டாரின் சீடராகி சிவஞானபோதத்தினை முதல்நூலாகக் கொண்டே சித்தியாரைப் படைக்கிறார். இப்படிப் பல எடுத்துக்காட்டுகளை எடுத்து விளக்கினாலும், நீங்களே சிந்திக்கும் வகையில் அறிவினைப் பெருக்கி, திருவள்ளுவர் கூறுவது போல் **“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு”** மெய்ப்பொருள் காணவேண்டும்.



மெய்கண்ட தேவர்

சைவத்தினது பெருமையே அதன் பேதமின்மை தான். ஒருவரின் சிறப்புக்கு சாதி, செல்வம், பாலினம், அழகு என்பன மட்டுமல்ல வயது கூடத் தடை இல்லை என்று அறைகூவல் விடுத்த பெருஞ்சமயம் எம் சைவம். மெய்கண்டார் ஞானமெய்தியது தன்னுடைய இரண்டாவது வயதில், அது அல்லவா சைவத்தின் பெருமை. வெறும் இரண்டு வயதிலேயே சைவத்தின் பெருஞ்சரக்கு வாய்ந்த நூலை இயற்றி விட்டார். அந்தளவுக்கு அவரிடம் தத்துவஞானமும், அறிவாற்றலும் ஊறிக்கிடந்தது எம்பெருமானின் அருட்கருணையே.

**"அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்"**

என்று தனது முதல் நூற்பாவில் பாடுகிறார் மெய்கண்டார். இந்த நூற்பாவின் பொருண்மையை எண்ணுங்கால் மனத்தின் கணு தோறும் ஞான அலை அடித்துப் போகின்றது. இதன் ஆழத்தை விளக்கிச் சொல்லும் தன்மை, என் சிற்றறிவுக்குச் சற்றும் எட்டாமையினால் எனக்கு எட்டிய அளவில் சொல்லுகின்றேன். நாம் பார்க்கும் இந்த உலகு மூன்று பொருட்களால் ஆனது. ஒன்று உயிர்ப் பொருள், மற்றையது உயிர் அற்ற பொருள். உயிர்ப் பொருள் தம் இன விருத்தியின் பொருட்டு பால் நிலை வேறுபாடுகளைக் கொண்டு இருக்கும். அந்த ஒரு விடயம் தான் உயிருள்ள பொருட்களையும், உயிர் அற்ற பொருட்களையும் வேறுபடுத்துகின்றது. ஆகையினால் உயிர்ப்பொருட்களை ஆண், பெண் என்றும் உயிர் அற்ற பொருட்களைப் பொதுப் பொருளாகவும் நோக்க முடியும். அவ்வளவு தான் இம்மூன்றினதும் சேர்வையே உலகம். இதைத்தவிர இங்கு வேறு எதுவும் இல்லை.

இப்படிப்பட்ட மூன்றின் கலவையாகிய உலகம் மூன்று செயல்களைக் கொண்டது என்று சொல்லுகின்றார் மெய்கண்டார். உலகம் ஒரு காலத்தில் தோன்றி உள்ளது. இன்று இருக்கின்றது. எதிர்காலத்தில் எப்போதோ ஒரு நாள் அழிந்து போகும். இந்த மூன்று செய்யல்களும் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். இதைத் தான் இன்றைய விஞ்ஞான உலகம் ஆய்ந்து கொண்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட மூன்று செயல்களும் உடைய உலகம் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது. அது தோன்ற முதல் அவனில் ஒடுங்கித் தான் உள்ளது. மீண்டும் அழிந்த பின்னரும் அவனில் அது ஒடுங்கும். உயிர்களைப் பற்றி வாழுகின்ற ஆணவத்தை நீக்கவே அவன் இதனைச் செய்கின்றான். ஆதலால் எல்லாவற்றையும் அழித்து தன்னுள் ஒடுக்கி, மீண்டும் வெளிப்படுத்தும் அவனே இறைவன் என்று அளவை நூலார் சொல்வதாக மெய்கண்டார் சொல்லுகின்றார்.

எத்துணை பேரறிவு மெய்கண்டாருக்கு, ஆதலால் தான் அவர் சிவபெருமானே என்று கருதி வழிபடுகின்றது சைவப் பெருஞ்சமயம். உலகின் ஒவ்வொரு சமயத்திற்கும் ஒன்றோ, இரண்டோ அல்லது சில ஞானிகள் தான் உண்டு. ஆனால் ஞானிகள் கடல் போல நிறைந்த சமயம் எம் சைவசமயம். அது எம் உயிரினும் மேலானது. ஆகையால் அதை நாமும் பின்பற்றி வாழ்வில் கடைந்தேறுவோம்.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# விதிமாற்றும் விரிசடையான்

**சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடித் தாமரை யானே**

**நீங்கள் விதியை வெல்ல முடியுமா ? நிச்சயமாக வெல்லலாம்.**
**விரிசடையான் துணைகொண்டு விதியை வெல்லலாம் என்று ஆணையாகச் சொல்லுகிறார் திருஞானசம்பந்தர் சுவாமிகள்.**

உலகின் முதற்கடவுளும், சைவத்தினையும் தமிழினையும் உருவாக்கிய சிவ பெருமானின் பாதங்களை, அவனருளாலே வணங்கி திருவருட் துணையுடன் உண்மைகளை உங்களிடம் பகிர்வதில் பேரானந்தம் அடைகிறேன்.

தமிழ் மொழியின் ஒவ்வொரு சொல்லும், அதன் ஓசையும், ஒலியும் இறைவனால் உரு வாக்கப்பட்டவை. அதனாலே தான் தமிழ், தெய்வத்தமிழாகப் போற்றப்படுகின்றது.கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் என்ற பரஞ்சோதி முனிவரின் வரிகளும், நிழல்பொலி, கணிச்சிமணி நெற்றி, உமிழ் செங்கண், தழல்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் என்ற கம்பரின் வரிகளும் தெய்வத்தமிழின் தோற்றத்தினை தெளிவாக்கி யுள்ளன.

தமிழ் மொழியை முத்தமிழ் என்பதற்கு இயல், இசை, நாடகம் என்பதை விடவும் இன்னும் ஒரு கருத்தியலும் இருந்து வருகிறது. தமிழ் மொழியானது மந்திரம் (மனதைத் திரமடையச் செய்யும் தன்மை), மந்தரம் (மனதைத் தரமடையச் செய்யும் தன்மை) மற்றும் மந்திறம் (மனதைத் திறமையடையச் செய்யும் தன்மை) என்ற மூன்று வகை ஆற்றலை உடையது. இது தெய்வத்தமிழாகிய எங்கள் பைந்தமிழுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

## வினையும் விதியும் – வினையின் விளைவே விதியாகும்

தமிழ் இலக்கணமாயினும் சரி, சைவக் கோட்பாடாயினும் சரி, வினை என்றால் ஒரு செயலையே குறிக்கும். நாங்கள் வாழ்க்கையில் விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, நினைத்தோ நினைக்காமலோ பலவிதமான செய்கைகளை அதாவது வினைகளைச் செய்கிறோம்.அவை நல்லதாக இருந்தால் நல்வினை என்றும் தீயவையாயின் தீவினை என்றும் இரண்டு பிரிவுகளாகின்றன.

சுதந்திரமான வாழ்க்கையை உங்களுக்கு தருவதற்காக கடவுளின் படைப்பில் மனிதரை சுயாதீனமாகப் படைத்தது ஆறாம் அறிவு எனும் பிரித்தறியும் திறனையும் சேர்த்து பூவுலகுக்கு

அனுப்புகிறார். அந்த ஆறாம் அறிவைப் பயன்படுத்தி எது சரி எது பிழையென்று பிரித்தறிய முடியாமல் எமக்காக, எம்மைச் சார்ந்தவர்களுக்காக மனம், வாக்கு, காயம் இவை மூன்றினாலும் ஐம்பொறிகளாலும் நாங்கள் பலவகையான தீய வினைகளைச் செய்து இறுதியில் தீவினைத் தொகுப்பையே மேலோங்கச் செய்கிறோம்.

வினையும் விதியும் என்ற விடயத்தில் இன்னுமொரு கருத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த நூற்றாண்டில் விதியெனப்படும் சட்டவிதிகளால் வினையாகிய குற்றங்களை கட்டுபடுத்தியும், தண்டித்தும் வருகிறது நீதிமன்றம். இதையே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, வினையின் விளைவே விதியாகும் என்றும் வினைகளைக் கட்டுப்படுத்த இறை வழியினை முதன்மை வழியாகவும் கொண்டும் வாழ்ந்தனர் சைவத்தமிழர்கள். அத்துடன் ஊழ்வினையாகிய முற்பிறப்பு வினைகளையும் அழிக்கும் உபாயத்தினையும் கையாண்டு விதியை வென்று வாழ்ந்தனர் பண்டைத் தமிழர்கள். மனிதர்களின் விதிகளில் இயங்கும் நீதிமன்றத்தால் தண்டனைக் காலத்தினைக் குறைத்து மன்னிப்புக் கொடுக்கும் பொழுது, உயிர்களிடத்தில் எல்லையற்ற அன்பைக் கொண்ட எம்பெருமான் விதியினை நிச்சயம் மாற்றி உங்களுக்கு அருள்பாலிப்பார் என்பதில் ஐயமேது.

நாம் செய்யும் சகல வினைகளுக்கு மூலகாரணம் எங்களின் மனம். ஆறாம் அறிவினைப் பயன்படுத்தி மனதை நெறிப்படுத்தி நல்லதை செய்தால் விதி நல்லாயிருக்கும், பிரித்தறியாமல் தீயவற்றினை செய்தால் விதி மாறிப்போகிறது. அந்தவகையில் விதியை வெல்லும் போரில் வெல்லவேண்டியது மனமே என்ற உண்மை வெளிப்படுகிறது. இனி மனதை வெல்வது எப்படி என்று பார்த்தால், முத்தமிழின் திறனாகிய மந்திரம், மந்தரம் மற்றும் மந்திறம் ஆகிய மூன்றாலும் என்ற தெளிவு பிறக்கிறது. அந்தவகையில் தமிழ் வேதங்களாகிய திருமுறைகளை, விரிசடை யானை நினைந்து ஒலியெழுப்பி பாடுவதன் மூலம் மனம் திரம், தரம் மற்றும் திறம் அடைகின்றது. இந்நிலையில் உள்ள மனம் நல்லதையே செய்யும். அதனால் நல்வினைப் பயனையே அனுபவிக்கும். அத்துடன் திருமுறைகள் ஊழ் வினையையும் அறுத்து பேரின்பப் பெருவாழ் வினை தரவல்ல மருந்தாகவே இருக்கின்றன.

ஆமை தன் கால்கள், தலை முதலாய ஐந்து உறுப்புக்களையும் ஓட்டுக்குள் ஒடுக்கி தன்னைப் பாதுகாப்பது போல் மனிதன் ஐம்புலன்களையும் அடக்கி மனம் பொறி வழிப் போகாது வாழ்ந்தால் அது அவனது ஏழுவகையான பிறப்புகளையும் சிறப்படையைச் செய்யும், என்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 126**

சைவநெறிக் கோட்பாட்டில் இந்தப்பிறப்பில் மட்டுமல்ல முற்பிறப்பு வினைகளும் தொடர் கின்றன என்ற நம்பிக்கையும் வலுவாக இருக்கிறது. சிவகங்கையைச் சேர்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார் 'தூக்கிய திருவடி துணையென நம்பினேன் துரிய நடராசனே' என்ற தம் பாடலில்

**‘எத்தனையோ பிறவி எடுத்தெடுத்து இளைத்தேன்**
**இருவினைப் பயன்களை எய்தி எய்திக் களைத்தேன்,**
**சித்தம் இனி உன்மேல் வைத்திருக்க நினைத்தேன்**
**திக்கு வேறில்லை ஐயா! தீனரைக் காக்கும் மெய்யா’**

என்று பாடி, மனிதர்கள் பல பல பிறவிகள் எடுப்பார்கள் என்பதையும் வினைப்பயனின் பயணத்தினையும் எடுத்துரைத்துள்ளார்.

நாலடியாரில் வரும் வரிகளைப் பார்த்தால்

**தாம்செய் வினை அல்லால் தம்மோடு செல்வதுமற்று**
**யாங்கணுந் தேரின், பிறிதில்லை, - ஆங்குத்தாம்**
**போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே,**
**கூற்றங் கொண்டோடும் பொழுது**

இதிலிருந்தும் நாம் செய்கின்ற வினைகள் மட்டுமே உயிருடன் சேர்ந்து போகின்றதே அல்லாமல் பிறிதொன்றுமில்லை என்பது புலனாகிறது. அதுவே ஊழாகவும், பழவினையாக மறுபிறப்பில் வந்து விதியாக வேலை செய்கிறது எனலாம்.

**வினையை அறுக்க முடியுமா ? அதனால் வரும் விதியை வெல்ல முடியுமா ?**

திருஞானசம்பந்தர் வாக்கு

நிச்சயமாக வினைகளை அறுத்து அதனால் ஏற்படுகின்ற வினைப்பயனாகிய விதியினை சிவத்தின் திருவருள் கொண்டு மாற்றலாம் என்று திருஞானசம்பந்தப் பெருமான் ஆணையாகக் கூறுகிறார். மூன்றாம் திருமுறைத் திருவெண்காட்டுப் பதிகத்தின் பதினோராவது பாடலாகிய, பாடலின் பலன்களை விழிக்கும் திருக்கடைக்காப்பில் தமிழ் ஞானசம்பந்தர்,

**நல்லவர் புகலியுள் ஞான சம்பந்தன்**
**செல்வன் எம் சிவனுறை திருவெண்காட்டின் மேற்**
**சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்**
**அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே**

பல வகையான புண்ணியங்கள் செய்த நல்லவர்கள் வசிக்கின்ற திருப்புகலியுள் (சீர்காழி) அவதரித்த ஞானசம்பந்தன், செல்வனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவெண்காட்டில் பாடிய அருந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் பத்தியொடு ஓதவல்லவர் களுடைய துன்பங்கள் மறைவதோடு அவற்றிற்குக் காரணமான அருவினையும் (இலகுவில் அகலாத) அறும் என்பது நமது ஆணையாகும் என்று சத்தியம் செய்கிறார்.

திருஞானசம்பந்தரின் முதலாம் திருமுறை திருக்கழுமலப் பதிகத்தில் ”வினைகெட மன நினைவது முடிகெனில் நனி தொழுதெழு” என்று வினைகள் அழிந்து, மனத்தில் நினைத்தது

நடைபெறவும் வேண்டுமெனில் பிறைசூடும் அண்ணலாரின் திருவடி நன்கு தொழுதெழுக என்று பாடியுள்ளார்.

தோடுடைய செவியன் பதிகத்தின் திருகடைக்காப்பிலிருந்து

**ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரைசெய்த**
**திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே**

அத்துடன் முதல் திருமுறை கண்ணார்கோயில் பதிகத்தில்

**கண்ணார் கோயில் கைதொழுவார்கட்கு இடர்பாவம்**
**நண்ணா வாகும் நல்வினை ஆய நணுகும்மே**

திருக்கண்ணார் கோயிலைக் கைகளால் தொழுது வணங்குவாரைத் துன்பங்களும் பாவங்களும் அணுகாது மாறாக நல்வினைகளும் அவற்றின் பயனான இன்பங்களே வந்துசேரும் என்பதிலிருந்து சிவவழிபாடு விதியை மாற்றும் அல்லது வெல்ல உதவும் என்று அறிந்து கொள்ளமுடிகிறது.

சுந்தரர் வாக்கு

சுந்தரமூர்த்தி நாயனாரின் ஏழாம் திருமுறையில் திருப்பூவணம் திருப்பதிகத்தில் பாவவினைகளை அறுக்கும் புரிவுடையார் உறையும் திருப்பூவணம் என்று விரிசடையானின் வினையறுக்கும் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

**திருவுடையார் திருமால் அயனாலும்**
**உருவுடையார் உமையாளை ஓர்பாகம்**
**பரிவுடையார் அடைவார் வினைதீர்க்கும்**
**புரிவுடையார் உறை பூவணம் ஈதோ**

திருமால், பிரமன் ஆகிய காரணக் கடவுளரிலும் மேலான திருவுடையவரும், தமது திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரும், அன்புடன் தம்மை நாடும் அடியவர்களின் வினைகளைத் தீர்க்க ஆவலாய் இருப்பவருமாகிய சிவபெருமான் திருப் பூவணம் என்னும் தலதில் எழுந்தருளியுள்ளார்.

**சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம்**
**ஆர இருப்பிடமாக உறைவான் தனை**
**ஊரன் உரைத்த சொன் மாலைகள் பத்திவை**
**பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே**

திருப்பூவணம் பதிகத்தில் உள்ள, ஊரன் என்கின்ற நம்பியாரூரன் பாடிய இச்சொல் மாலைகள் பத்தினையும் பாடுபவர் தங்கள் பாவங்களை அறுத்து, வினைகளைக் களைந்து விதியினை வெல்வார்கள் என்று வாக்குறுதி அளிக்கிறார்.

**திருநாவுக்கரசு நாயனார் வாக்கு**

நான்காம் திருமுறையில் பாவநாசத் திருப்பதிகத்தில் அப்பர் பெருமானும் பாவங்களை போக்குவான் விரிசடையான் என்பதை விரிவாக விளக்கியுள்ளார்.

**முந்தித் தானே முளைத்தானை மூரி வெள்ளேறு ஊர்ந்தானை**
**அந்திச் செவ்வான் படியானை அரக்கன் ஆற்றல் அழித்தானைச்**
**சிந்தை வெள்ளப் புனலாட்டிச் செஞ்சொன் மாலை அடி சேர்த்தி**
**எந்தை பெம்மான் என் எம்மான் என்பார் பாவநாசமே**

எல்லாவற்றிற்கும் முன்னே தோன்றிய சிவபெருமான், வலிமை பொருந்திய வெள்ளை நிறக் காளையை ஊர்தியாகக் கொண்டவர். மாலை நேரச் செவ்வானத்தின் நிறத்தினை உடைய அவர், அரக்கனின் ஆற்றலை அழித்தவர். அவரை மனதிலே நிறுத்தி திருநீராட்டி, இனிய சொற் களாலான பாடல்களை பாமாலையாக திருவடியில் சேர்த்து, அவரைத் தந்தையாக, எம் பெருமானாக, கடந்தும் உள்ளேயும் உள்ள கடவுளாக போற்றுபவர்களின் வினைகள் கெட்டு (பாவங்கள் நாசமாகி) நிறைவான வாழ்வு கிடைக்கும். வினைகள் கெடுவதால் விதியில் மற்றம் ஏற்பட்டு வாழ்வு மிளிரும் என்பதே உட்கருத்து.

அதுபோல் மணிவாசகரும் விரிசடையானின் வித்தகத்தினை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க**
**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க**

இந்தவரிகளைப் பார்த்தால், வேகத்தின் விளைவால் பல வினைகள் செய்து சேகரிக்காமல் வேகத்தினை குறைத்து விவேகத்தினை கூட்டி என்னை ஆண்டருளுகின்ற வேந்தன் அடி வெல்க என்றும் அத்துடன் அவனே பிறப்பை அறுக்கும் தலையில் அலங்காரம் கொண்ட தலைவன் என்று விழித்துப்பாடுகிறார். சகல வினைகளையும் அறுத்தபின் சிவமாக்கி பிறப்பினை அறுத்து மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வு நிலையை தந்து சிவபுரத்தில் இடமளிக்கிறார்.

**சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை**
**முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்**

சிந்தை மகிழச் சிவபுராணத்தினை, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லு பவர்களின் முந்தை அதாவது முன்னைய வினைகள் முழுவதும் ஓயும், அறும் என்கிறார் மணிவாசகப்பெருமான்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் எட்டாம் திருமுறை - அச்சோப் பதிகம்

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன்எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே**

பேரின்ப வாழ்வின் வழியை அறியாத தீவினையாளருடன் கூடி அவர் வழியில் சென்ற தனக்கு, தன் பழவினைகள் ஓடும்படி மனமாசு அகற்றி, தன்னைச் சிவமாக்கி ஆட்கொண்டார் என்ற வரிகளில் பழ வினைகள் அதாவது பழைய வினைகளின் தொடர்ச்சி மறுபிறப்பிற்கு வரும் என்ற கருத்தையும், அவற்றினை விரிசடையான், ஓடும்படி செய்து தன்னை ஆட்கொண்டான் என்று சொல்லி திருவாசகத்தினை மலர்ந்தருளும் போது, அந்த திருவாசகத்தினை அழகிய சிற்றம்பலமுடையான் தன் கைப்பட எழுதியுள்ளார். மாசற்ற சோதியாகிய நிமலன், இது பொய்வாக்கியம் என்றால் தன் கையால் எழுதுவாரா என்ற கேள்விக்கான விடையே விதியை வெல்லும் விரிசடையான் என்ற இந்த நூலின் கருப்பொருளாகும்.

திருவாசகம் போற்றித் திருவகவலில்

**தாயே ஆகி வளர்த்தனை போற்றி**
**மெய்தரு வேதியனாகி வினைகெடக்**
**கைதர வல்ல கடவுள் போற்றி**

அதாவது வினைகெடக் கைதரவல்ல கடவுளே போற்றி என்று விழித்துப்பாடுகிறார். அதிலும் வினைகளை கெடுத்து கைதரும் கடவுளாகிய சிவபெருமான் என்பதை குறிப்பிடுகிறார்.

திருமூலரின் திருமந்திரமாகிய தமிழ் மந்திரத்தில்

**சிவ சிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்**
**சிவ சிவ என்னச் சிவகதி தானே**

சிவ சிவ என்றிடத் தீவினைகள் அனைத்தும் அழிந்து, தேவராகி சிவகதியை அதாவது மீண்டும் பிறப்பில்லாத் தன்மையை அடைவார்கள். சிவ சிவ என்ற மந்திரத்திற்கு உள்ள தனித்தன்மையை எளிமையாகக் கூறியுள்ளார். இதனை சொல்லாதோர் தீவினையாளராகவே இருந்து மீண்டும் பிறப்புக்களை எடுத்து வினைப்பயனை அனுபவிப்பர்.

இதன்வழி வினைகளை அறுக்க, உயிரில்லாத வினையை எம் உயிருடன் இணைக்கும் பரம்பொருளாம் விரிசடை க்கடவுளின் வழி நின்று வினைகளை அறுத்து, விதியை மாற்றி வெற்றி பெறமுடியும் என்பது திண்ணமாகின்றது.

## திருமுறைகள் ஓதுவதன் பலன்கள்

வினைகளில் இருந்து விடுபடவேண்டும், திருந்தவேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும் அதனை செய்யமுடிவதில்லை. அதுவும் விதி தான் என்று பலர் கூறும் விதண்டாவாதம் அவர்களின் அறியாமையினதும் சோம்பேறித்தனத்தினதும் வெளிப்பாடே. அறியாமையில் இருந்து வெளிவர இறை வழிபாடு குறிப்பாக திருமுறைகள் வழிவகுக்கின்றன.

இறைவன், காலத்திற்குக் காலம் நலிவடையும் சைவத்தினை மேம்படுத்தவும், வினை வயப்பட்டு வாழ்வினை வீணாகக் கழிக்கும் மாந்தரை நல்வழிப்படுத்தவும் கருவிலே திருவாக அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்கள் வழிநின்று எங்களுக்கு அருளை வழங்கியுள்ளார்.

இவ்வுண்மையை "எனது உரை தனது உரையாக" என்று அருளிச் செய்துள்ள சம்பந்தப் பெருமான் திருவாக்கிலிருந்து அறியலாம். திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு 'சொல்லும்' மந்திர ஆற்றல் உடையது. எனவே, திருமுறைகளை நாம் ஓதும் போது, அதில் உள்ள மந்திர ஆற்றல், நமது உயிரில் கலந்து, நமது அறியாமையைப் போக்கி, வினைகளை அறுத்து விதியை மாற்றுகின்றன. குறிப்பாக தமிழ் மந்திரங்களாக எங்கள் அருளாளர்கள் தந்த திருமுறைகள் அனைத்தும் இறையருள் பொருந்தியவை. மந்திரத்திறன் கொண்டவை என்பதை மேலே பார்த்தோம்.

திருமுறைகளை ஒதுவதன் மூலம் பழவினைகளை அகற்றியும், பொருள் விளங்கிப் பாடுவதால் இனி வினைகளை சேர்க்காமலும், வாழ்வாங்கு வாழும் மாந்தர்க்கு வினைப்பயனை ஊட்டத் தேவை இல்லாததால் நாளடைவில், விதியை மாற்றும் வல்லமையும் திருமுறைகள் நிச்சயம் வழங்குகின்றன. நாளாந்த வாழ்க்கையில் உங்கள் முயற்சிகளை இடையறாது செய்தவண்ணம் திருமுறைகளை பாடி வினைத்தடைகளை அகற்ற வெற்றி நிச்சயம் வரும்.

## திருமுறைகளை பண்ணுடன் தான் பாட வேண்டுமா ?

கட்டாயமாக பண்ணுடன் பாடினால் தான் அதன் அருள் கிடைக்கும் என்றில்லை. திருமுறைகளை தொடர்ந்து காலையும் மாலையும் கருத்துடன் நாளும், உடலையும் மனதையும் சுத்தப்படுத்தி இயன்றளவு ஒலி அதாவது தமிழ் மந்திர ஒலி வெளிப்படுமாறு பாடுவது நன்மை பயக்கும். அத்துடன் பாடும் போது சொல்லும் பொருளும் வெளிப்பட உரைக்கின் மிகச்சிறப் பாகும். பண் தெரிந்தவர்கள் பண்ணுடனும் பாடலாம். எதுவாக இருந்தாலும் தமிழ் ஒலிச்சத்தம் வெளிவரவேண்டும்.

இசை முக்கியமில்லை என்பதை, சம்பந்தப்பெருமானின் வரிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**கோழை மிடறாக கவி கோளும் இலவாக இசை கூடும் வகையால்**
**ஏழை அடியார் அவர்கள் யாவை சொன்ன சொல்மகிழும் ஈசன்**

வழிபாட்டாலும், தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவதாலும் பழவினை மற்றும் வருவினை, இப்பிறப்பில் நாம் அனுபவிக்க இருக்கும் வினை ஆகிய இவையெல்லாம் தீரும் என்பது ஆளுடைய பிள்ளையாரின் அறிவுரை.

**வல்லதோர் இச்சையினால் வழிபாடு**
**இவைபத்தும் வாய்க்கச் சொல்லுதல்**
**கேட்டல் வல்லார், துன்பம் துடைப்பாரே**

சிவவழிபாடும், திருமுறை ஓதலும் நிச்சயமாக வினையினால் வரும் துன்பத்தினை நீக்கும். அத்துடன் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் என்பது எழுதப்படிக்க தெரிந் தவர்கள் திருமுறைகளை படித்து பொருளுணர்ந்து சொல்லுதல் சிறப்பு அத்துடன் எழுதவாசிக்க முடியாதவர்கள் திருமுறைகளை மற்றவர் சொல்ல கேட்பதே போதுமானது என்பதாகும். மேலாக ஈசன் எல்லோருக்கும் சமமானவன் என்பதும் வெளிப்படையாகிறது. படிக்கத் தெரியாதவர்களின் நிலைமைக்கு விதிப்பயன் காரணமல்ல அவர்களின் முயற்றியின்மையே காரணம். அவர்களும் திருமுறைகள் உரக்க கேட்பதன் மூலம் வினைகளை அறுக்கமுடியும்

மேற்குறிப்பிட்ட முறைகளில் திமுறைகளை, காலை மாலை இரண்டு வேளையும் பாடத்தொடங்க நிச்சயம் மாற்றம் தெரியும். தொடர்ந்து பாட துள்ளியோடும் தொடர்ந்து வினைகளே. ஊழ்வினைகள் ஓட நல்வினை பொங்கும் இதன்வழி நிச்சயம் விதிமாறும், எல்லாம் நன்றாகவே நடக்கும். விதிமாற விரிசடையான் வழி நில்லுங்கள். ஆராத இன்பம் அருளுமலையாகிய ஆடல்வல்லானின் அடி போற்றுங்கள். பேராது நிற்கின்ற பெரும் கருணைப் பேர் ஆறாகிய பரம்பொருளின் பாதம் பணியுங்கள். வாழ்வில் வெற்றி நிச்சயம் இது சத்தியம்.

இந்த நூலில் தரப்பட்ட திருமுறைகளின் தொகுப்பினை ஒரு குறை தீர்க்கும், தடை நீக்கும் அல்லது விடுதலை தரும் முறைகளாகப் பார்ப்பது தவறு. (பரிகார வழிமுறைகள் அல்ல). சைவ மரபில் அப்படி ஒரு கோட்பாடு இல்லை. இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படுவது சிவ வழி பாட்டின் மூலம் வினைகளின் தாக்கங்களில் இருந்து பாதிப்புகளைக் குறைப்பதற்கான வழி முறைகளே.

நீங்கள் உலகியல் தோய்வில் இருக்கும் போது தான் வினைகள் உங்களை அணுகு கின்றன. சிவவழிபாட்டில் அல்லது சிவத்தில் தோய்ந்து இருக்கும் போது வினைகளின் தாக்கங்கள் உங்களை அடையா. உதாரணத்திற்கு மார்க்கண்டேயரின் தத்துவக்கதையினை சிந்தித்துப் பார்த்தல் தெளிவை தரும். ஆகவே இப்படியான அருளாளர்களின் பதிகங்களை தினமும் ஓதி வருவதால் சிவத்துடன் தோய்வு ஏற்படும். அப்படி சிவநினைவுகளில் நீங்கள் இருக்கும்போது வினைகள் வந்து எமைத் தீண்டாது என்று சிவத்தின் மேல் ஆணை இடுகிறார் திருஞானசம்பந்தர் சுவாமிகள்.

**அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்**
**உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம் அன்றே**
**கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்**
**செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்**

- திருநீலகண்ட திருப்பதிகம்

ஆகவே சிவபூசையும், திருமுறை ஓதுதலும் நிச்சயம் வினைகளின் தாக்கத்தினை நலிவடையச் செய்து, உங்களுக்கு நிச்சயம் நன்மைகளைக் கொண்டுவரும் என்பதே இந்த நூலின் பொருளாகும். தீவினையின் தாக்கங்கள் குறைய நல்வினைப் பயனால் நீங்கள் நிச்சயம் இறைவனின் திருவருளை பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீர்கள்.

**மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணின் நல்லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணின் நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே**

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

***தென்னவன் பார்த்தீபன்***
***தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,***
***கொக்குவில், யாழ்ப்பாணம்.***
+94 21 221 2739 | thennavan@thennadu.org | www.thennadu.org

# கல்வியில் மேன்மையுற்று உயர்நிலை அடைவதற்கு ஓதவேண்டிய சுற்றமொடு பற்று அவை திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகம்



## திருக்கருப்பறியலூர் – குற்றம் பொறுத்தநாதர் திருக்கோயில்

கல்வியில் சிறந்து விளங்க, கல்வி மேலோங்க திருக்கருப்பறியலூரில் உள்ள கோல்வளை நாயகி அம்மை உடனுறை குற்றம் பொறுத்தநாதப் பெருமானை மனதிலே நினைந்து உளமுருகி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த இரண்டாம் திருமுறை (பதிகம் 2-31, திருக் கருப்பறியலூர்) **"சுற்றமொடு பற்று அவை"** என்ற பதிகத்தினை, காலை, மாலை இருவேளையும் திருக்கருப் பறியலூர் அப்பனின் திருவடியை நீள நினைந்து, உளமுருகி மெய்யன் போடு பாடுவது, வினைகளை நீக்கி கல்வியில் மேன்மையைத் தரும்.

மாணவர்கள் பாடினால் இன்னும் சிறப்பாகும். இயலாதவர்களுக்கு, அவர்கள் பொருட்டு பெற்றோரோ, உறவினர்களோ பாடுதலும் பலன் தரும். எனவே, கல்வியில் சிறந்து விளங்கிட நாமும் பாடிப்பரவிடு வோமாக. ஓம் நமசிவாய.

மயிலாடுதுறை, வைதீசுவரன்கோயில் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வழியாக இத்தலத்தை அடையலாம்.

**இறைவன் - குற்றம் பொறுத்தநாதர்**
**இறைவி - கோல்வளை அம்மை**
**பண் - இந்தளம்**
**இராகம் - நாதநாமக்கிரியை**

திருச்சிற்றம்பலம்

சுற்றமொடு பற்று அவை துயக்கு அற அறுத்துக்
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர்தம் வான் உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே - 1

வண்டு அணைசெய் கொன்றை அது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம் அது கோள் அரவினோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறியலூரே - 2

வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல்ஆகப்
போதினொடு போதுமலர் கொண்டு புனைகின்ற
நாதன்என நள்இருள்முன் ஆடுகுழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறியலூரே - 3

மடம்படு மலைக்கு இறைவன் மங்கை ஒரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் கால ஒரு காலால்
கடந்தவன் இருப்பது கருப்பறியலூரே - 4

ஒருத்தி உமை யோடும் ஒருபாகம் அதுவாய
நிருத்தன் அவன் நீதிஅவன் நித்தன் நெறிஆய
விருத்தன் அவன் வேதம் என அங்கம் அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறியலூரே - 5

விண்ணவர்கள் வெற்பு அரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண் அமரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வரும் காமன் உடல் வேவ எரிகாலும்
கண்ணவன் இருப்பது கருப்பறியலூரே - 6

ஆதிஅடியைப் பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதி ஒளி நல்புகை வளர்க்குவடுபுக்குத்
தீதுசெய வந்து அணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறியலூரே - 7

வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர்செயும் தொழில் இலங்கை நகர்வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்றுவிழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறியலூரே - 8

பரந்து அது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்து ஓர் சடைமேல்மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தரம் நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறியலூரே - 9

அற்றம் மறையா அமணர் ஆதம் இலி புத்தர்
சொற்றம் அறியாவதர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்று என இருப்பது கருப்பறியலூரே - 10

## திருக்கடைக் காப்பு

நலம்தரு புனல்புகலி ஞானசம்பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேய கடவு(ள்)ளைப்
பலம்தரு தமிழ்க்கிளவி பத்தும் இவை கற்று
வலம்தரும் அவர்க்கு வினைவாடல் எளிது ஆமே - 11

*திருச்சிற்றம்பலம்*

### திருக்கருப்பறியலூர் செல்லுங்கள்:

கல்வியில் மேன்மையும் சிறப்பும் பெற வழிகாட்டிய திருக்கருப்பறியலூர் அப்பனின் திருவடியை நீள நினைந்து, இத்திருப்பதிகத்தை பாடி, உங்களின் அல்லது பிள்ளைகளின் கல்வி மேலோங்கப் பெற்று, கல்வியில் சிறந்தவராகவும், பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ, எல்லாம் வல்ல இறைவன் அருளாசி புரிவாராக.

இயலுமாயின் திருக்கருப்பறியலூர் சென்று, குற்றம் பொறுத்தநாதர் மற்றும் கோல்வளை நாயகி அம்மனை வழிபட்டு, வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் கைகூடட்டும்.



# முன்னெடுத்த செயல்களில் வெற்றி பெற, செய்வினைகள் அகல ஓதவேண்டிய அவ்வினைக்கு இவ்வினைஆம் திருநீலகண்டப் பதிகம்

## திருக்கொடிமாடச்செங்குன்று – உமையொருபாகனார் திருக்கோயில்

திருக்கொடிமாடச்செங்குன்று என்னும் தலத்தில் திருஞானசம்பந்தர் வந்திருந்தவேளை பனிக்காலம் ஆதலால் அக்கொங்கு நாட்டுக்கே உரிய தான நளிர்சுரம் எனும் குளிர் காய்ச்சல் ஏற்பட்டது. இந் நோயினால் பலரும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தனர். அடியார்கள் அக்காய்ச் சலால் பாதிக்கப்படுவதை விரும்பாத ஞானசம்பந்தர், திரு நீலகண்டத் திருப்பதிகமான **"அவ் வினைக்கு இவ்வினை ஆம்"** எனும் இப்பதிகத்தினை பாடி அடியார்களின் துயரத்தினை தீர்த்தார். இந்த பதிகத்தின் இறுதியில் **"தீவினை வந்து எமைத்தீண்டப் பெறா திருநீலகண்டம்"** என திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டு பாடப்பட்டுள்ளது. ஆதலால் இது ஆணைப்பதிக மாகவும் அமைகின்றது.

திருஞானசம்பந்தர் ஆணையிட்டு கூறிய திருநீலகண்டத் திருப்பதிகத்தை பாடி, கொடும் நோய்களில் இருந்தும், மாந்திரீக செயல்களில் இருந்தும் விடுபட்டு, எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெற்று, சீரும் சிறப்புமாய் வாழ்வாங்கு வாழ்வோமாக. ஓம் நமசிவாய.

ஈரோடு, சேலம், நாமக்கல் போன்ற நகரங்களிலிருந்து பேருந்து வழியாக சென்று இத்தலத்தை அடையலாம்,

**இறைவன் – உமையொருபாகனார், செங்கோட்டையன்**
**இறைவி – பாவை, பாகம்பிரியாள்**
**பண் – வியாழக்குறிஞ்சி**
**இராகம் – சௌராட்டிரம்**

# திருநீலகண்டப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

“அவ்வினைக்கு இவ்வினை ஆம்” என்று
சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும்
உம்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்து எம்பிரான்
கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்
பெறா திருநீலகண்டம் – 1

காவினை இட்டும் குளம்பல
தொட்டும், கனி மனத்தால்
“ஏ” வினையால் எயில் மூன்று
எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து, மலர்அடி
போற்றுதும், நாம் அடியோம்
தீவினை வந்து எமைத்தீண்டப்
பெறா திருநீலகண்டம் – 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும்
மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு
எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்
மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் – 3

விண் உலகு ஆள்கின்ற
விச்சாதரர்களும் வேதியரும்
“புண்ணியர்” என்று இருபோதும்
தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்று உடையீர்!

உம்கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 4

மற்று இணை இல்லா மலை திரண்டு
அன்ன திண்தோள் உடையீர்
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது
ஒழிவதும் தன்மை கொல்லோ?
சொற்றுனை வாழ்க்கை துறந்து
உம்திருவடியே அடைந்தோம்
செற்று எமைத் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 5

மறக்கும் மனத்தினை மாற்றி,
எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பு இல் பெருமான், திருந்து
அடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்து, உமை
ஏத்தும் பணி அடியோம்
சிறப்பு இலித் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 6

இப்பதிகத்தில் 7ம் செய்யுள் சிதைந்து போயிற்று - 7

கருவைக் கழித்திட்டு, வாழ்க்கை
கடிந்து, உம்கழல் அடிக்கே
உருகி மலர்கொடு வந்து உமை
ஏத்தும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்து அருள்செய்தவரே,
திரு இலித் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 8

நாற்றமலர் மிசை நான்முகன்
நாரணன் வாது செய்து,
தோற்றம் உடைய அடியும் முடியும்
தொடர்வு அரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது

வணங்குதும் நாம் அடியோம்
சீற்றம் அது ஆம் வினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 9

சாக்கியப் பட்டும் சமண் உரு
ஆகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப்
போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் பொன்றைப் புரிசடையீர்
அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் - 10

பிறந்த பிறவியல் பேணி எம்
செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில்
இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ்
பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே - 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கொடிமாடச்செங்குன்று செல்லுங்கள்:

இதன் தற்கால பெயர் திருச்செங்கோடு ஆகும். எடுத்த காரியத்தில் வெற்றி அடையவும், செய்வினைகள் அகலவும் வழிகாட்டிய மாதொருபாகனாரை நினைந்து, திருஞானசம்பந்தர் ஆணையிட்டு கூறிய திருநீலகண்டத் திருப்பதிகத்தை பாடி, எல்லா அருளும் பெற்று, நல்வாழ்வு வாழ, பாகம்பிரியாள் உடனுறை உமையொருபாகனார் திருவருள் புரிவாராக.

இயலுமாயின் திருச்செங்கோடு சென்று, குன்றின் மேல் குடிகொண்டிருக்கும், உமையொரு பாகனார் மற்றும் பாகம்பிரியாள் அம்மையை வழிபட எல்லாம்வல்ல திருவருள் கைகூடட்டும்.

# திக்குவாய் மாறிச் சீர்பெறவும் சிறந்த பேச்சாளர் ஆகவும் ஓதவேண்டிய திருவாசகம் பூசுவதும் வெண்ணீறு

### சிதம்பரம் (தில்லை) – திருமூலநாதர் திருக்கோயில்

மாணிக்கவாசகப் பெருமான் தமிழ் நாட்டில் உள்ள திருத்தலங்களுக்கு தலப்பயணம்



மேற்கொண்டு, பதிகங்கள் பாடிக்கொண்டுதில்லைக்கு வந்தார். அவ்வேளையில் ஈழத்து மன்னன், தீட்சிதர்களை புத்தர்களோடு வாதத்துக்கு அழைத்தான். அதை கண்டு கலங்கிய தீட்சிதர்கள் அருள்மிகு நடராசரை வேண்டி வணங்கினர். இறைவன் அசரீரி வாக்காக "திருவாதவூரரை அடைந்து வெல்லுங்கள்" என உரைத்தார். தீட்சிதர்கள் அப்படியே திருவாத வூரரை அடைந்து, ஈழத்து மன்னன் ஒருவன் தனது ஊமை மகளுடன் தில்லைக்கு வந்திருந்ததையும், அவன் தன் புத்தமதத்தை நிறுவ முயன்றததையும் மாணிக்கவாசகரிடம் கூறினார்கள். அது குறித்து இறைவன் கூறிய கூற்றையும் அவரிடம் கூறி புத்தர்களை வாதில் வெல்ல வேண்டுமென பணிந்தனர்.

அதன்படி மாணிக்கவாசகரும் ஒப்புக்கொண்டு புத்தர்களோடு வாதிட்டு, அவர்களை ஊமைகளாக்கிப் பின் சைவராக்கினார். ஈழ மன்னனின் மகளான ஊமைப் பெண்ணையும் **"பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ."** என பதிலளிக்க வைத்தார். அவளது பேச்சின் தொகுப்பை மாணிக்கவாசகர், "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்" எனத் தொடங்கும் **"திருச்சாழல்"** திருப்பதிகதிகமாக அருளிச் செய்தார்.

எனவே, அப்பேறு பெற்ற **"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்"** எனத் தொடங்கும் **"திருச்சாழல்"** திருப்பதிகத்தினை பாடினால் திக்குவாய் மாறி சிறப்பாகப் பேசலாம், சிறந்த பேச்சாற்றல் உருவாகும் என்பது திண்ணம். எனவே நாமும் பாடிப் பரவிடுவோம் – ஓம் நமசிவாய. தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் பேருந்து வழியாக சிதம்பரத்தை அடையலாம்.

**இறைவன் - திருமூலநாதர்**

**இறைவி - உமையம்மை**

**இராகம் - மோகனம் - திருவாசகம் - திருச்சாழல்**

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலும்? காண் ஏடீ!
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டு என்னை?
ஈசன் அவன், எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ. - 1

என் அப்பன், எம்பிரான்
எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளும் அது, என் ஏடீ?
மன்னுகலை, துன்னுபொருள்,
மறைநான்கே, வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன் காண் சாழலோ - 2

கோயில் சுடுகாடு
கொல்புலித்தோல், நல்ஆடை
தாயும் இலி தந்தை இலி
தான்தனியன் காண் ஏடீ!
தாயும் இலி, தந்தை இலி
தான்தனியன் ஆயிடினும்
காயில், உலகு அனைத்தும்
கல்பொடி, காண், சாழலோ. - 3

அயனை, அனங்கனை,
அந்தகனைச், சந்திரனை
வயனங்கள் மாயா
வடுச்செய்தான் காண், ஏடீ!
நயனங்கள் மூன்று உடைய

நாயகனே தண்டித்தால்
சயம் அன்றோ வானவர்க்குத்
தாழ்குழலாய்? சாழலோ. - 4

தக்கனையும் எச்சனையும்
தலை அறுத்துத், தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்தது தான் என் ஏடீ?
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்துஅருளி, அருள்கொடுத்து
அங்கு எச்சனுக்கு மிகைத்தலைமற்று
அருளினன்காண், சாழலோ. - 5

அலரவனும் மால் அவனும்
அறியாமே, அழல் உருவாய்,
நிலம் முதல், கீழ் அண்டம் உற
நின்றது தான், என் ஏடீ?
நிலம் முதல் கீழ் அண்டம் உற
நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம்
தவிரார், காண் சாழலோ. - 6

மலைமகளை ஒருபாகம்
வைத்தலுமே, மற்றொருத்தி
சலமுகத்தால் அவன் சடையில்
பாயும் அது, என் ஏடீ?
சலமுகத்தால் அவன் சடையில்
பாய்ந்திலனேல், தரணி எல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாம் சாழலோ. - 7

கோலாலம் ஆகிக் குரைகடல்வாய்
அன்று எழுந்த
ஆலாலம் உண்டான்
அவன் சதுர்தான் என் ஏடீ?
ஆலாலம் உண்டிலனேல்,
அன்று அயன் மால் உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம்
வீடுவர்காண் சாழலோ. - 8

தென்பால் உகந்து ஆடும்
தில்லைச் சிற்றம்பலவன்,
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காண், ஏடீ?
பெண்பால் உகந்திலனேல்
பேதாய், இருநிலத்தோர்
விண்பால் யோகு எய்தி
வீடுவர்காண் சாழலோ. - 9

தான் அந்தம் இல்லான்
தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து
அழுத்து வித்தான் காண் ஏடீ?
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்த திருவடிகள்,
வான் உந்து தேவர்கட்கு ஓர்
வான்பொருள் காண் சாழலோ. - 10

நங்காய், இது என்ன தவம்?
நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான், காண் ஏடீ?
கங்காளம் ஆமாகேள்
கால அந்தரத்து இருவர்,
தம்காலம் செய்யத்
தரித்தனன்காண் சாழலோ. - 11

கான் ஆர் புலித்தோல்
உடை தலை ஊண் காடுபதி
ஆனால் அவனுக்கு
இங்கு ஆட்படுவார்? ஆர் ஏடீ!
ஆனாலும் கேளாய்
அயனும் திருமாலும்,
வான் நாடர் கோவும்,
வழி அடியார் சாழலோ. - 12

மலை அரையன் பொற்பாவை
வாள்நுதலாள், பெண்திருவை
உலகு அறியத் தீ வேட்டான்

என்னும், அது என் ஏடீ!
உலகு அறியத் தீ வேளாது
ஒழிந்தனனேல், உலகு அனைத்தும்
கலைநவின்ற பொருள்கள் எல்லாம்,
கலங்கிடும் காண் சாழலோ - 13

தேன்புக்க தண்பனைசூழ்
தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம்
பயிலும் அது என்? ஏடீ!
தான்புக்கு நட்டம்
பயின்றிலனேல், தரணி எல்லாம்
ஊன்புக்க வேல் காளிக்கு
ஊட்டு அம் காண் சாழலோ. - 14

கடகரியும் பரிமாவும்
தேரும் உகந்து ஏறதே,
இடபம் உகந்து ஏறியவாறு
எனக்கு அறிய இயம்பு ஏடீ!
தடமதில்கள் அவை மூன்றும்
தழல் எரித்த அந்நாளில்,
இடபம் அதாய்த் தாங்கினான்,
திருமால்காண் சாழலோ. - 15

நன்றாக நால்வர்க்கும்
நான்மறையின் உட்பொருளை,
அன்று, ஆலின் கீழ் இருந்து, அங்கு
அறம் உரைத்தான் காண் ஏடீ!
அன்று, ஆலின் கீழ் இருந்து, அங்கு
அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண், புரம் மூன்றும்
கூட்டோடே சாழலோ. - 16

அம்பலத்தே கூத்து,
ஆடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன் என்று
நண்ணும் அது என்? ஏடீ!
நம்பனையும் ஆமாகேள்

நான்மறைகள் தாம் அறியா
“எம்பெருமான், ஈசா” என்று
ஏத்தின காண் சாழலோ. - 17

சலம் உடைய சலந்தரன் தன்
உடல் தடிந்த நல் ஆழி,
நலம் உடைய நாரணற்கு, அன்று
அருளியவாறு என்? ஏடீ!
நலம் உடைய நாரணன், தன்
நயனம் இடந்து அரன் அடிக்கீழ்
அலர் ஆக இட, ஆழி
அருளினன் காண் சாழலோ.- 18

அம்பரம் ஆம், புள்ளித்தோல்
ஆலாலம் ஆர் அமுதம்
எம்பெருமான் உண்ட சதுர்
எனக்கு அறிய இயம்பு ஏடீ!
எம்பெருமான் ஏது உடுத்து,
அங்கு ஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத்
தன்மையன் காண் சாழலோ. - 19

அரும் தவர்க்கு ஆலின் கீழ்
அறம் முதலா நான்கினையும்
இருந்து, அவர்க்கு அருளும் - அது
எனக்கு அறிய இயம்பு ஏடீ!
அரும் தவர்க்கு, அறம் முதல் நான்கு
அன்று அருளிச் செய்திலனேல்
திருந்த, அவருக்கு உலகு இயற்கை
தெரியா் காண் சாழலோ. - 20

திருச்சிற்றம்பலம்

**சிதம்பரம் செல்லுங்கள் :**

ஊமைப் பெண்ணை பேச வைத்த, “திருச்சாழல்” திருப்பதிகத்தை, உமையம்மை உடனுறை திருமூலநாதரை நினைந்து, பாடி, திக்குவாய் மாறி, பேச்சு குறைபாடுகள் நீங்கி, சிறந்த பேச்சாற்றல் பெற்று, இறைவன் புகழ் பாடிப்பரவிட, எம்பெருமான் அருள் புரிவாராக.

இயலுமானவர்கள், வாழ்வில் ஒருமுறையாவது செல்லவேண்டிய, தில்லையம்பதி திருத்தலத்திற்கு சென்று, வணங்கி, அருளாசி பெற்று சீரும் சிறப்புமாய் வாழ எல்லாம் வல்ல திருவருள் கைகூடட்டும்.



# பணம் பெருகுவதற்கும் வறுமை நீங்குவதற்கும் ஓதவேண்டிய இடரினும் தளரினும் திருவாவடுதுறை திருப்பதிகம்

## திருவாவடுதுறை – மாசிலாமணியீசர் திருக்கோயில்

திருஞானசம்பந்தரின் தந்தையிடம் ஒரு முறை வேள்வி செய்யத் தேவையான செல்வம் இல்லாது போனது. செல்வம் இல்லாது மனம் வருந்திய சம்பந்தரின் தந்தையாகிய சிவபாதவிருதயர் திருஞான சம்பந்தரிடம் உதவி கேட்டார். திருஞான சம்பந்தரும், திருவாவடுதுறை கோயி லுனுள் சென்று **"இடரினும் தளரினும்"** என்ற பதிகத்தைப் பாடி, இறுதி வரியில் **"ஈவது ஒன்று எமக்கில்லையோ? இதுவோ உனது அருள்"** என்று உதவி கேட்டார். திருஞான சம்பந்தர் பதிகத்தைப் பாடி முடிந்ததும், அங்கு தோன்றிய சிவபூதம் கோயிலின் முன்னுள்ள பீடத்தில் பொற்கிழி ஒன்றினை வைத்து விட்டு "இது பெருமானால் உங்களுக்கு வழங்கப்பட்ட பொற்கிழி, இக்கிழி எடுக்க எடுக்க குறையாது, மிகும். இதை வைத்து வேள்வி நடத்துக" என்று சொல்லி மறைந்தது. அதன் பின் அந்தக்கிழியை வைத்து சிவபாதவிருதயர் வேள்வி நடாத்தி முடித்தார்.

இறைவன் மறுமைக்கு அருளை வழங்குவது போல, இம்மைக்குப் பொருளையும் வழங்குவான். **"இடரினும் தளரினும்"** எனும் பதிகத்தை பாடி தேவையான செல்வத்தை இறைவனிடம் இருந்தே கேட்டுப் பெறுவோம். ஓம் நமசிவாய.

கும்பகோணம் மயிலாடுதுறை பேருந்து சாலையில் திருவாவடுதுறை வாயில் வழியே சென்றால் இக்கோயிலை அடையலாம்.

**இறைவன் - மாசிலாமணியீசர், மாசிலாமணீசுவரர், கோமுத்தீசுவரர்**

**இறைவி – ஒப்பிலாமுலை அம்மை**

**பண் – காந்தாரபஞ்சமம்**

**இராகம் – கேதாரகௌளை**

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இளமதி வைத்த புண்ணியனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பா, உன்னை
மனவினும் வழிபடல் மறவேன், அம்மான்
புனல்வரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால், அரற்றாது என்நா
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவு உறினும்
செய்கழல் அடிஅலால் சிந்தை செய்யேன்
கொய் அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறு உடை மறையவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய், உன் அடிஅலால் ஏத்தாது, என் நா
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கு அசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடி அலால் அரற்றாது, என் நா
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

பேர் இடர் பெருகி, ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல் அலால், சிந்தை செய்யேன்
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட, வரை அடர்த்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடி அலால் உரையாது, என் நா
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பு அரிது ஆயவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா உன் அடி அலால் அரற்றாது, என் நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலை வல்லார்.

வினை ஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியன் உலகம்
நிலையாக முன்ஏறுவர் நிலைமிசை நிலைஇலரே.

திருச்சிற்றம்பலம்

## திருவாவடுதுறை செல்லுங்கள் :

திருஞானசம்பந்த பெருமான் அள்ள அள்ளக் குறையாத உலவா பொற்கிழியைப் பெற்றதுபோல், இப்பதிகத்தினைப் பாடி, நீங்களும் உங்கள் வினைகள் நீங்பெற்று, பொன், பொருள், பணம் முதலியவற்றைப் பெற்று, சீரும் சிறப்புமாய் நல்வாழ்வு வாழ எல்லாம்வல்ல ஒப்பிலாமுலை அம்மை உடனுறை மாசிலாமணியீசப் பெருமான் அருள்மழை பொழிவராக.

இயலுமாயின் ஒருமுறையாயினும், திருவாவடுதுறைக் கோயிலுக்குச் சென்று அங்குள்ள பெருமானை நேரில் வணங்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல திருவருள் கைகூடட்டும்.



# ஆயுள் பலம் பெருகவும், கோள்களின் தாக்கங்கள் நீங்கவும் ஓதவேண்டிய வேயுறு தோளி பங்கன் கோளறு திருப்பதிகம்

## திருமறைக்காடு – மறைக்காட்டீசுவரர் திருக்கோயில்

திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருப்பதை அறிந்த மங்கையர்க் கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும், சம்பந்தரை மதுரைவரும்படி அழைப்பு விடுத்தனர் ஆதலால் சம்பந்தர் மதுரை செல்லத் துணிந்தார். அதனை அறிந்த நாவுக்கரசர் மதுரையில் சமணர் பெரும் சூது செய்வர். நாளும் கோளும் அங்கு தற்சமயம் செல்லல் ஏற்புடைய தல்லவெனக் கூற, நாளும் கோளும் அடியார்களை ஒன்றும் செய்யாதென, உமையிடம் ஞானப்பால் உண்ட ஆளுடை பிள்ளையார், எம்பெருமானை உமையொருபாகனாக மனதில் நினைந்து, **"வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்"** எனும் கோளறு திருப்பதிகத்தினை பாடியருளினார்.

**"கோளறு பதிகம்"** அதாவது கோள் + அறு, நம் மனம், சொல், செயல் என்று அனைத்தையும் ஆட்கொண்டு, நம் வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்தும், கோள்களின் ஆதிக்கத்தை அறுத்து, (விலக்கி) நம் வாழ்வில் நலங்கொடுக்கும் திருப்பதிகமே கோளறுப் பதிகம்.

அப்படியான கோளறு பதிகத்தை, எம்பெருமானை நினைந்து, காலையும் மாலையும் ஓதி, கோள்களின் தாக்கங்களை அறுத்து, ஆயுள் பலத்தை பெருக்கி, நல்வாழ்வு பெற்று, பெருவாழ்வு வாழ்வோமாக. ஓம் நமசிவாய.

**இறைவன் – மறைக்காட்டீசுவரர்**

**இறைவி – யாழைப்பழித்த மொழியம்மை**

**பண் – பியந்தைக் காந்தாரம்**

**இராகம் – நவரோசு**

## கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே - 1

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி, ஏழை உடனே,
பொன்பொதி, மத்த மாலை புனல்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு, ஆறும்,
உடனாய நாள்கள் அவைதாம்,
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே - 2

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும், வெள்ளை விடைமேல்,
முருகு அலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
திருமகள், கலை அது ஊர்தி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. - 3

மதி நுதல் மங்கையோடு, வட ஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்,
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்,
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. - 4

நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள்தனோடும்
விடை ஏறும், எங்கள் பரமன்,
துஞ்சு இருள், வன்னி, கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும், உரும் – இடியும், மின்னும்
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. – 5

வாள்வரி அதள் அது ஆடைவரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன் ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்,
கோள் அரி, உழுவையோடு, கொலையானை கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. – 6

செப்பு இளமுலை நல்மங்கை ஒருபாகமாக
விடை ஏறு செல்வன் அடைவார்
ஒப்பு இள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு, குளிரும் வாதம், மிகையான பித்தும்,
வினையான வந்து நலியா,
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. – 7

வேள்பட விழிசெய்து அன்று, விடைமேல் இருந்து
மடவாள்தனோடும் உடனாய்,
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்த, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர் ஆன வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. – 8

பலபல வேடம் ஆகும்பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,

சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல், மேரு நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. - 9

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்,
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. - 10

தேன் அமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல் துன்னி,
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர், ஆணை நமதே. - 11

திருச்சிற்றம்பலம்

## திருமறைக்காட்டிற்குச் செல்லுங்கள்:

"ஆணை நமதே" என்று ஞானசம்பந்தர் அறுதியிட்டு முடித்த, கோள்களின் ஆதிக்கத்தை அறுத்து, நல்வினை பயக்கும் கோளறு பதிகத்தை பாடி, கோள்களினால் ஏற்றப்படும் தாக்கங்கள் நீங்கி, ஆயுள் பலம் பெருகி, சீரும் சிறப்புமாய் வாழ, திருமறைகாட்டில் உறையும் மறைக்காட்டீசுவர் திருவருள் புரிவாராக.

இயலுமாயின், அப்பரும் சம்பந்தரும் கதவு திறக்கவும் மூடவும், திருமுறைகளை பாடியருளிய, திருமறைக்காடு திருத்தலத்திற்கு சென்று மறைக்காட்டீசுவரர் மற்றும் யாழைப்பழித்த மொழியம்மையை வழிபட எல்லாம்வல்ல திருவருள் கைகூடட்டும்.

# கொக்குவில் இந்துக் கல்லூரி அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு நன்றி நவிலல்

சைவத்தினையும், தமிழினையும் பேணிப் பாதுகாக்கவும். மேன்மையுறச் செய்யவும் எடுத்த விடாமுயற்சியின் விளைவால் தோன்றிய எங்கள் பாடசாலையின், நோக்கங்களை மீண்டும் வலுப்படுத்தவும். இளமையிலேயே மாணவர்களுக்கு சைவநெறியின் ஆதித் தன்மையையும். தனித்துவத்தினையும், பெருமைகளையும் சிவவழிபாட்டின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அத்துடன் மாணவர்கள் அறிவுடன் சேர்த்து ஞானத்தினையும் பெற்றிடவும் வேண்டி,

பண்டு நால்வருக்கு அறம் உரைத்த பெருமானும், மகேந்திரமலையில் சொன்ன ஆகமத்தினைத் தோற்றுவித்தவரும், வினைகளை அழித்து நல்வாழ்வினைத் தரவல்ல தனிப் பெரும் கடவுளுமாகிய சிவபெருமான், முழுவதும் கடந்த முதல்வனாக ஊழி முதல்வனாக "அண்ணாமலையாராக" எங்கள் பாடசாலையில் எழுந்தருளியுள்ளார்.

இந்த உயரிய சிந்தனை மற்றும் கைங்கரியங்களை எமக்கு செய்ய முன்னின்ற தென் னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையினருக்கும், குறிப்பாக அதன் நிறுவுனரான, எங்கள் பாடசாலை முன்னாள் பிரதி அதிபர் அமரர் திருமதி.சிவநேசரத்தினம் குணரத்தினம் (குணரட்ணம்) அவர்களின் புதல்வன் சிவத்திரு.குணரத்தினம் பார்த்தீபன் (தென்னவன்) அவர்களுக்கும், அத்துடன் இந்த உயரிய திருப்பணிக்கு முழுதுமான நிதிப்பங்களிப்பை தந்துள்ள, நன்கொடையாளர் கோண்டாவிலைச் சேர்ந்த யாழ் இந்து பழையமாணவர் சிவத்திரு.சுப்பிரமணியம் சுபதாசன் மற்றும் திருமதி.சித்திரா சுபதாசன் குடும்பத்தினருக்கும் எங்கள் பாடசாலை சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் அழைப்பில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள, தமிழ்நாட்டின் மெய்கண்ட சந்தானம் பேரூர் ஆதீனம் மற்றும் தென்சேரிமலை ஆதீன முதல்வர்கள் மற்றும் திருமுறைத் தமிழ்மந்திர வழியில் இத்திருக்குட நன்னீராட்டை நடத்தித் தந்த அருட்குருநாதர். ஒளியகம் ந.ஒளியரசு ஐயா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள் உரித்தாகுக. மேலும் எங்களுக்கு ஆசிச்செய்திகள் தந்த பெரியவர்கள் அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், தென்னாடு மற்றும் சைவ மாணவர் சபைப் பெரியவர்கள், அண்ணாமலையார் திருக்கோயில் நிலைபெறுவதற்கு முன்னின்று உழைத்த எங்கள் பாடசாலை பழைய மாணவரும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் மேலாளருமான சிவத்திரு. சிவனருட்செல்வன் சிவானந்தன் ஐயா மற்றும் சைவ மாணவர் சபைத் தலைவர் சிவத்திரு. வனராஜ் சசிராஜ் அவர்களுக்கும், இம்மலருக்கு ஆக்கங்களை தந்துதவியவர்கள் மற்றும் இம்மலரை முன்னின்று ஒழுங்கமைத்த, தென்னாடு இதழ் ஆசிரியர் சிவத்திரு. தென்னாடு நிலவன் அவர்களுக்கும், சிவத்திரு.தவராசா தினகரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**ஐப்பசித் திங்கள் 30ம் நாள், 2023**

அதிபர்
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**


முதலாம் தமிழ்ச் சங்கம்
கண்ணுதற்பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்
GNANAKURUMS